536

# ஆருயிர் மருந்து

## (மணிமேகலை வரலாறு)

அ. மு. பரமசிவானந்தம், M. A., M. Litt.
துணைத்தமிழ் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

டியூகோ பதிப்பகம்
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

❖❖❖

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

❖❖❖

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

சகம்
காஞ்சீ

முதற்பதிப்பு நவம்பர் 1951

பாரகம் அடங்கலும்
பசிப்பிணி அறுகென்ன
ஆதிரை இட்டனள்
ஆருயிர் மருந்து

ராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை.

# முன்னுரை

தமிழ் நாட்டுத் தனிப்பெருங் காவியங்கள் இரண்டு. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் அறியாத் தமிழ் மக்கள் இருக்கமாட்டார்கள். அவைகள் தமிழர் தம் பண்டைய வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவன. அவை இரண்டையும் எளிய நடையில் யாவரும் அறியும் வகையில் எழுதித் தரப் பணிந்தனர் 'டியூகோ' பதிப்பகத்தார். அவர் தம் மொழிவழி முன்னர் கண்ணகி வரலாறு 'கடவுளர் போற்றும் தெய்வம்' என்ற பெயரில் வெளி வந்தது. இதோ, இன்று மணிமேகலை வரலாறு 'ஆருயிர் மருந்து' என்ற பெயரில் வெளிவருகின்றது.

மக்கட் பிறவியின் பயன் மற்றவரை வாழ வைத்து, அவர் தம் வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படும் உணவு, உடை, உறையுள் வழங்குவதே யாகும் என்பதை அடிப்படையாகக் கொண்டது மணிமேகலைக் காப்பியம். எல்லா அறத்திலும் சோறளிக்கும் அறமே மேலானது என்பதைச் சாத்தனார் பலவிடங்களில் வற்புறுத்துகிறார். அவர் தம் வாக்கு மக்கள் வாழ்விடை மலரின் உலகம் உய்திபெறும். அவ்வுய்தி பெறும் வழிக்கு இந்நூலும் உறுதுணையாக அமையும் என்னும் உறுதியுடையேன்.

தமிழ்க்கலை இல்லம்
சென்னை-10.
20—11—'51

அ. மு. பரமசிவானந்தம

சசகம
காஞ்சீ

# உள்ளே

| | | பக்கம் |
|---|---|---|
| கானல் வரிக்குப்பின் | ... | 1 |
| மணிபல்லவத்திலே | ... | 22 |
| ஆருயிர் மருந்து | ... | 37 |
| பற்றும் பழியும் | ... | 57 |
| ஆபுத்திரனுடன் | ... | 90 |
| வஞ்சியிலும் காஞ்சியிலும் | ... | 98 |

# ஆருயிர் மருந்து

## கானல் வரிக்குப் பின்

### இளமைப் பருவம்

காவிரிக்கரையில் எழுந்த கானல்வரிப் பாட்டால் கருத்து வேறுபட்ட கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்து சென்றான். சென்றவன் நடு இரவிலேயே தன் பத்தினி கண்ணகியை அழைத்துக் கொண்டு மதுரை மாநகர் நோக்கிப் புறப்பட்டான். சினத்தோடு பிரிந்த கோவலன் ஒரு வேளை சீற்றம் தணிந்து வருவான் என்று எதிர் நோக்கி இருந்தாள் மாதவி. ஆனால் மறுநாள் அவன் ஊரை விட்டே தன் காதலியுடன் பிரிந்த செய்தி கேட்டுக் கருத்தழிந்தாள். மணி இழந்த நாகமென மதி இருண்டு வருந்தினாள்.

கோவலன் காவிரிப்பூம் பட்டினத்தை விட்டு மதுரைக்குச் செல்வதை அறிந்த மாதவி, ஒரு கடிதம் எழுதிக் கவுசிகன் மூலம் காட்டு வழியில் கோவல னிடம் சேர்க்கச் செய்தாள். அதில் தான் பெற்ற பிரிவுத் துன்பத்தைக் குறித்திருந்தாள். எனினும் கோவலன் திரும்பவில்லை. மனமுடைந்த மாதவி பரத்தமை வாழ்வை வெறுத்தாள். தன் தாயும் மற்றவர்களும் எத்துணை அளவு தேற்றியும் மன மாற்றம் பெற்றாள் இல்லை. தன் பொருட்டு அன்றே

னும், தன் மகள் மணிமேகலையின் பொருட்டேனும் அவள் தன் துன்பம் ஆற்றியிருக்க வேண்டும் என அறிவுறுத்தினர் அயலவர். மாதவியும் ஆற்றியிருந்தாள்.

தன் சேயின் முகம் கண்டு ஒருவாறு வாட்டம் மறந்து, வாழ்ந்து வந்தாள் மாதவி. அவளது தாய் சித்திராபதி அவள் வருத்தம் மாற்றி, கோவலனை மறந்து, வேறு வகையில் வாழ வேண்டும் என்று வற்புறுத்தினாள். மாதவியின் மகள் மணிமேகலை தன் வயப்படுவாள் என எண்ணி மகிழ்ந்தாள் சித்திராபதி. என்றாலும் மாதவியின் மனமோ எல்லாவற்றையும் கடந்து நின்றது. பிரிந்த கணவனை எண்ணி எண்ணி ஏங்கினாள்; வாழ்வில் வெறுப்புற்றவளாகித் துறவை விரும்பினாள். அதற்கேற்றாற் போன்று அன்று தமிழ் நாட்டில் பௌத்தம் தலைசிறந்து வாழ்ந்து வந்தது. அச்சமயத் துறவியாகிய அறவணவடிகள் அண்மையில் ஓரிடத்தில் தங்கி யிருந்தார். அவரிடம் அடைக்கலம் புகுந்தாள் மாதவி. தான் கோவலனுடன் வாழ்ந்த வாழ்வினையும், அவன் பிரிந்த வரலாற்றினையும் கூறி, தான் பௌத்த தேவன் அடிபற்றி வாழ விரும்பிய வகையையும் சொன்னாள். அவள் வரலாற்றை கேட்ட அடிகள் உலக நிலையை நினைந்தார். மக்கள் பெறும் இன்ப துன்பங்களை எண்ணிப் பார்த்தார். அவற்றின் காரணங்களை ஆராய்ந்தார். ஆம், அனைத்துக்கும் அடிப்படைக் காரணம் பற்று என்பதை அறிந்தார். 'ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும்' என்ற வள்ளுவரின் வாய்மொழியை எண்ணினார். மாதவியின் வருத்தத்துக்குக் காரணம், அவள் முன்னே கோவலன் மேல் அளவு கடந்த பற்றுக்

கொண்டமைதான் என்பதை உணர்ந்தார். பிறவியே துன்பத்துக்கு ஏதுவென அறிந்தார். தான் உணர்ந்ததை அறம் கேட்க வந்த மாதவிக்கும் உணர்த்தினர்,

'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது அறிக'

என்று அறத்தை உணர்த்தினர். அவர் தம் வாய் மொழி கேட்ட மாதவி மனம் மாறினவளாய்த் தவ வழியிற் புக விரும்பினள். மாதவி புத்த சமய நெறியை அறிந்து நால் வகை வாய்மைகளையும் பஞ்ச சீலத்தையும் தெளிந்து தவநெறியை மேற்கொண்டு தூய அற வாழ்வு வாழத் தொடங்கினள். ஆம். இத்தகைய வாழ்வுக்கிடையில் மணிமேகலையும் வளர்பிறையென வளர்ந்து வருவாளாயினள்.

கோவலன் மணிமேகலை பிறந்ததும் அவளுக்குத் தன் குல தெய்வத்தின் பெயரை வைக்கப் பணித்தான். அதே வேளையில் அவனது குல தெய்வமாகிய மணிமேகலா தெய்வம் மாதவி கனவில் சென்று 'காமன் செயலற்று ஏங்கும் வண்ணம் ஆசையை முற்றக் கெடுக்கும் தவ மாதைப் பெற்றாய்' என்று சொல்லிற்று. ஆகவே தன் மகள் மணிமேகலையும் ஒரு துறவியாகவே விளங்குவாள் என்று எண்ணினள் மாதவி. எனவே தன் மகளைத் தூய துறவற நெறியிலிருந்து மாற்ற அவள் விரும்பவில்லை. சித்திராபதி மணிமேகலையின் அழகும் அறிவும் கண்டு அவளைத் தன் வழிக்குக் கொண்டுவரின் சிறக்க வாழலாம் என நினைத்தாள்.

ஆனால் மாதவியோ தூய புத்த தேவனது பீடிகை போற்றி, நல்லறம் புரியும் துறவற நெறியிலேயே மகளைச் செலுத்தினாள். மணிமேகலையும் அன்னையின் மொழிப்படி அற வாழ்வினை மேற்கொள்ள உணர்வும் உறுதியும் கொண்டு விளங்கினாள்.

மணிமேகலை இளம்பிறையென வளர்ந்து மங்கைப் பருவமுற்றாள். அவள் அழகுக்கு அவளே நிகர் எனும் படி வளர்ந்திருந்தாள். அவள் தன் தாய் சொற்படியே துறவற நெறியில் நிற்க நினைந்தாள். நாள்தோறும் புத்த தேவனைப் போற்றுவதும், அறநெறி பற்றி அறிவதும், அப்புத்தனது பாத பங்கயங்களுக்கு மலர் தொடுப்பதுமாகக் காலம் கழித்து வந்தாள்.

**இந்திர விழா**

இவ்வாறு காலம் கழித்து வருகின்ற நாளில் ஆண்டுதோறும் புகார் நகரில் நடைபெறுகின்ற இந்திர விழா தொடங்கும் காலம் வந்துற்றது. இந்திர விழா இந்திரனை நினைத்து அந்நகர மக்கள் கொண்டாடும் ஒரு பெருவிழாவாகும். ஒரு காலத்தில் சோழன் தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் அகத்திய முனிவர் ஆணையின்படி இந்திரனை வழிபட்டுச் சிறப்புச் செய்த விழா அது. அவ்விழாவினைச் சோழ பரம்பரையினர் தவறாது ஆண்டுதோறும் இளவேனிற் காலத்துக் கொண்டாடி வந்தனர். அவ்விழாவினைச் செய்யாது விடின் நாட்டில் பல்வேறு வகைத் துன்பங்கள் உண் டாவதோடு, அந்நகரத்தையே கடல் கொள்ளும் என்று மன்னரும் மற்றவரும் கருதிவந்த காரணத்தால் ஆண்டு தோறும் அவ்விழா சிறப்பாக நடைபெற்றது. அப் பொழுது அந்த ஆண்டு விழாவும் ஆரம்பமாயிற்று.

விழா தொடங்கு முன் அரசரது முரசறைவோன் பட்டத்து யானைமேல் முரசினை ஏற்றி, நகர மக்கள் அனைவரும் அறியுமாறு முரசறைந்து, விழா தொடங்கும் நாளை அறிவிப்பான். அத்துடன் அவ்விழா எவ்வாறு சிறந்து விளங்க வேண்டும் என்பதையும், விழாவின் குறிக்கோள் யாது என்பதையும் எடுத்துக் கூறுவான். அந்நாட்களிலே தேவர்களெல்லாம் அவர் தம் நாடு வறிதாகும்படி இங்கு வந்து தங்கி, விழாவிலே கலந்து கொண்டு மகிழ்ந்திருப்பார்களாம். பல பெரியோர்களும் அவ்விழாவிற் கலந்து கொள்வார்கள், விஞ்சையர் பல்லோர் தம்மை மறந்து அக் காவிரிப்பூம் பட்டினத் தெருவுதொறும் சுற்றித் திரிவார்கள். எங்கும் எதிலும் இன்பம் குடிகொண்டிருக்கும்.

நகர மக்கள் தத்தம் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதன் அறிகுறி யாது? தம்தம் வாயில்களைத் தூய்மை செய்து, அழகார் கோலமிட்டு, தோரணங்களும் வாழை முதலிய மரங்களும் நாட்டி, பூரண கும்பம் முதலியன வைத்துச் சிறப்புச் செய்வார்களாம். பல்வேறு வகைப் பட்ட கொடிகள் ஆங்காங்கு அழகாக அலங்காரஞ் செய்யப் பெற்றுச் சிறந்து ஆடும் போலும். தெய்வங்கள் உறையும் திருக்கோயில்களிலே விழா குறித்துச் சிறப்புக்கள் பல நடைபெறுமாம். அறிஞர்கள் ஒருங்கு கூடித் தாம் கற்றவற்றைக் கருத்தாலும் சொல்லாலும் ஆய்ந்து நலம் காணுவார்களாம். பல்வேறு சமய வாதிகளும் வேறுபாடற்ற வகையில் அங்கு கூடி விழா இன்பத்தைத் துய்ப்பார்களாம். ஆடவரும் பெண்டிரும் அழகாக உடுத்து, பாடியும் ஆடியும் கடற்கரைக்குச் சென்று இன்புறுவார்களாம். எல்லாவற்றிற்கும்

மேலாக அக்காலத்தே நாட்டில் பசியும் பிணியும் இல்லாது அகலுமாம். இவ்விழாச் சிறப்பையெல்லாம் முரசறைவோன் வாயிலாக அழகுபடக் காட்டுகின்றார் மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார். அவர் தம் அடிகள் அறிந்து இன்புறத் தக்கன. அவற்றுள் அவ் விழா நாளிலே

'பற்று மாக்கள் தம்முட னாயினும்
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க'

என்று மக்கள் வாழ வேண்டிய நல்வாழ்வை நினைவுறுத்தும் அடிகள் என்றென்றும் போற்றப்பட வேண்டியன அன்றோ?

## தனித்த நிலையில் தாயும் சேயும்

காவிரிப்பூம் பட்டினம் இவ்வாறு பேராரவாரத்தில் திளைக்கும் அதே வேளையில் மாதவியும் மகள் மணிமேகலையும் விழாநலம் காணச் செல்லாராய்த் தனித்துத் தம் மாளிகையின் ஓரிடத்தில் இருந்தனர். மணிமேகலை மாளிகையின் ஒருசார் மலர்மாலை தொடுத்துக் கொண்டிருந்தாள். மாதவியோ இதே இந்திர விழாதானே தன்னைக் கோவலனிடமிருந்து பிரித்தது என்று எண்ணி வருந்திக் கொண்டிருந்தாள். அந்த வேளையில் சித்திராபதி அனுப்பிய வயந்தமாலை என்பாள் மாதவியிடம் வந்து அவள் சொல்லிய செய்தியைச் சொன்னாள். மாதவி தன் மகளுடன் இந்திர விழாவுக்கு வராமலும், அவர் தம் குல ஒழுக்கத்திற்கேற்ப

நடவாமலும் இருப்பதோடு, துறவியாகி, இளம் பெண்ணையும் அவ்வழியில் ஈர்க்கும் கொடுமை பற்றி ஊரார் கூறுவனவாகப் பல கூறினுள். அவற்றைக் கேட்ட மாதவி மனம் புழுங்கினுள். எனினும் தாங்கள் விழாவிடைக் கலந்து கொள்ள முடியாதென்றும், துறவு நிலையே தங்களுக்கு ஏற்றதென்றும் கூறினுள். அறவணவடிகள் தனக்குக் கூறிய அறவுரைகளை யெல்லாம் எடுத்துக் கூறி, பிறவி பற்றி வரும் பெருந் துன்பங்களை விளக்கினுள். மேலும் தன் மகள் மணி மேகலையைக் கற்புடைச் செல்வியாம் கண்ணகியின் மகளாகவே கூறுகின்ருள். அத்தகைய கண்ணகியின் மகளாகிய மணிமேகலை தவ வழியிற் செல்வாளேயன்றி அவவழிக்கு என்றும் வாராள் என உரைத்தாள். அனைத்தையும் கேட்ட வயந்தமாலை செய்வதறியா ளாய்ச் சிந்தை தளர்ந்து, திரும்பிச் சென்று சித்திரா பதிக்கு அனைத்தையும் உணர்த்தினுள்.

மாதவி வயந்தமாலையிடம் பேசிய அனைத்தையும் எவ்வாருே கேட்டறிந்தாள் மணிமேகலை. அவள் கண் முன் மதுரை தெரிந்தது. அங்கே கொலையுண்ட தன் தந்தையாகிய கோவலனும், அச்செயலுக்கு ஆற்ருது அலமந்த அன்னை கண்ணகியும் தெரிந்தனர். அவர் தம் நிலையினையும், பண்பையும், சிறப்பையும் எண்ணி எண்ணி ஏங்கினுள் மணிமேகலை. கையில் புத்த தேவ னுக்கென்று கட்டிய மாலை அப்படியே இருந்தது. அன்னையை எண்ணி ஆற்ருது அழுத கண்ணீர் புறப் பட்டு வழிந்து அம்மாலை மேல் விழுந்தது. அதைத் தூரத்தே இருந்து கண்ட மாதவி தன் மகள் வாடுவ தைக் கண்டு அவள் துயரம் போக்க நினைத்தாள். தன்

கண்ணீர் மாற்றினாள். அவளுக்கு ஆறுதல் கூறினாள். மேலும் தூய புத்த தேவனின் பாதங்களில் அணிய இருந்த மாலை கண்ணீரினால் மாசுண்டதே என்று வருந்தி, அந்த மாலையை விடுத்து வேறு மாலை தொடுக்க வேண்டும் என்றாள் மாதவி. அதற்கேற்ற மலர்களைக் கொய்து வருக என்று மணிமேகலைக்கு ஆணையிட்டாள்.

### எங்கே செல்வது ?

மணிமேகலையின் அருகே அவளை விட்டு நீங்காது சுதமதி என்னும் தோழி இருந்தாள். அன்னையார் மலர் கொண்டு வருக என்று ஆணையிட்டதும் எங்கு செல்ல வேண்டும் என்று நினைத்தாள் அவள். அழகும் அறிவும் ஒருங்கே பெற்ற செல்வி மணிமேகலை எங்கே சென்று மலர் கொண்டு வருவாள் என எண்ணினாள். உடனே அவள் மாதவியுடன் பேசலானாள்.

'அன்னாய்! மணிமேகலையைப் புறத்தே அனுப்ப வேண்டாம். இவளது கண்ணீரைக் காணின் காமனும் கலங்குவான். ஆகவே ஆடவர் இவளைப் புறத்தே காணுமாறு அனுப்ப வேண்டாம்' என்றாள் சுதமதி. மேலும் தான் அந்த நகருக்கு வந்த வரலாற்றைக் கூறினாள். தான் சண்பை நகரத்துக் கவுசிகன் என்னும் அந்தணனுடைய மகளென்றும், தான் தனித்து அஞ்சாமல் சோலையிற் சென்ற காரணத்தாலேயே தனக்குத் தீமை வந்துற்றதென்றும், சோலையில் தனிமையில் கண்ட மாருதவேகனென்னும் வித்தியாதரன் தன்னைக் கவர்ந்து, சில காலம் தன்வயமாகவே வைத்திருந்து, பின்னர் அந்நகரத்தில் இந்திரவிழா காண வந்தவன், அங்கேயே தன்னை விட்

டுச் சென்றதாகவும் கூறினாள். மேலும் புகார் நகரிலுள்ள பல்வேறு மலர்ச் சோலைகளைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து, மணிமேகலை செல்லத் தக்க சோலை இது என்றும் கூறினாள். பலவற்றையும் ஒதுக்கி உவவனம் செல்ல வேண்டுமென்றாள் சுதமதி.

**உவவனச் சிறப்பு**

'புகார், சோலை சூழ்ந்த பேரூர். பல மலர் வனங்கள் அங்கே உண்டு. அவற்றுள் இலவந்திகைச்சோலை என்பது ஒன்று. அதில் எப்பொழுதும் அரசனது ஏவலர்கள் தங்கியிருப்பார்கள். எனவே அங்குச் செல்லுதல் இயலாது. அடுத்து உய்யானவனம் என்ற ஒரு சோலை உண்டு. அங்கே பெருமரங்கள் வாடா மலர்களைப் பூத்து நிற்கும். அங்கே கையினிடத்துக் கொண்ட பாசத்துடன் பூதங்கள் பல அவ்வனத்தை காத்து நிற்கும். எனவே அங்கும் செல்லலாகாது. மற்றும் சம்பாதி இருந்த சம்பாதிவனமும், கவேர வனமும் சிறந்தன வேனும், மிகப் பழைமையாகிய தொல்லை தரும் தெய்வங்களால் அவை காக்கப் படுவதாகச் சொல்லப் படுதலின் அவற்றினுள்ளும் மணிமேகலை செல்லல் இயலாது. ஆனால் யாவற்றினும் மேலாகச் சிறந்த உவவனம் என்பதொன்று உண்டு. அதில் நிறைய மலர் மரங்கள் உள்ளன. புத்ததேவனது அருளினாலே அச்சோலை சிறந்துள்ளது.

'அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பும்
ஒருபெரும் பூட்கையும் ஒழியா நோன்பில்
பகவனது ஆணையில் பன் மரம் பூக்கும்
உவவனம் அது.'

மேலும் அந்தச் சோலையில் அழகிய பளிங்கு மண்டபம் ஒன்று உண்டு. இடர் வரின் அதனுள் தங்கி யாரும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடும். அம் மண்டபத்துள் இருப்பின் உருவம் வெளித் தெரியுமே யல்லாது, ஓசை வெளியே கேட்காது. மேலும் அங்கு ஒரு சிறப்பும் உண்டு. அம்மண்டபத்தின் இடையில் ஒரு பதும பீடம் உண்டு. அதில் இட்ட மலர்கள் வாடாது. அப்பீடத்து நாம் ஒரு தெய்வத்தை நினைத்து ஒரு மலரை இட்டால் அம்மலர் உரிய தெய்வத்தைச் சென்று சேரும். யாதொரு நினைப்பும் இன்றி இட்டால் அது அங்கேயே இருக்கும். அதற்குக் காரணம் இது வாகும்,

> **'சிந்தையின்றியும் செய்வினை உறும் எனும**
> **வெந்திறல் நோன்பிகள் விழுமம் கொள்ளவும்**
> **செய்வினை சிந்தை யின்றெனின் யாவதும்**
> **எய்தாது என்போர்க்கு ஏது வாகவும்.'**

அமைந்த பீடம் அது. இத்தகைய சிறம்பு வாய்ந்த பீடமும் மண்டபமும் உடைய அந்த உவவனத்திற்கே உன் மகள் மணிமேகலை செல்லக் கடவள்' என்று சுதமதி கூறினள். மேலும் அவளைத் தனியாக அனுப்பாது தானும் உடன் துணையாகச் செல்வதாகவும் கூறினள்.

### தெரு வழியில்

சுதமதி நினைத்தவாறே வழியிடை மணிமேகலை யைக் கண்டவர் பலவாறு அவளது அழகைப் பற்றிப் பேசுவாராயினர். ஒரு புறத்தே ஒரு களிமகன் தன் கள்ளின் பெருமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்

தான். அவனைச் சூழ்ந்து வேடிக்கைப் பார்த்திருந்த மக்களும், பித்தனைக் கண்டு வருந்துவோரும், கண் கவர் வனப்பு மிக்க புகார் நகர மாளிகைகளின் சித்தி ரங்களைக் கண்டு கண்டு கருத்தழியும் மக்களும், இன்னும் பல்வேறு மக்களும் மணிமேகலையைச் சூழ்ந்து கொண் டார்கள். அவளது அழகைக் கண்டார்கள். அவர்கள் வாய்கள் அவர்களை அறியாமலேயே 'அழகையுடைய இவளைத் தவ வழியில் செலுத்திய இவள் தாய் மிகக் கொடியள்' என்று கூறின. அந்த மக்கள் மணிமே கலையைச் சூழ்ந்து நின்ற காட்சி சாத்தனரை விராட நகருக்குப் பற்றிச் சென்றது போலும்.

**'விராடன் பேரூர் விசயனும் பேடியைக்**
**காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்**
**மணிமேகலை தனை வந்து புறஞ் சுற்றி'**

என்று அழகுபட உவமைப் படுத்திக் காட்டுகிறார். மக்கள் பலர் மனம்போன வழியாய்ப் பேசிக்கொண் டிருக்க மணிமேகலை சுதமதியோடு உவவனச் சோலை யைச் சென்றடைந்தாள்.

மணிமேகலை இதற்கு முன் சோலைகளுக்குச் செல் லாதவள் போலும், பணிப் பெண்கள் மலர் பறித்துக் கொடுப்ப, அதை மாலையாக்கிப் புத்த தேவனுக்கு அணிவிப்பாள் போலும், அன்று தான் செய்த தவறின் காரணமாக மாலை மாசு பட்டமையின் அக்குற்றத் திற்குக் கழுவாயென மாதவி மணிமேகலையை மலர் கொய்ய அனுப்பினள் என்று எண்ண வேண்டியுள் ளது ஏனெனில் அவள் நாள்தோறும் செல்லுபவ ளாயின் வழியிடைக் கண்டார் அன்று மட்டும் கண்டு

Raja Muthiah Research Library
3rd Cross Road, CPT Campus
Taramani, Chennai - 600 113

தம் கருத்தழிந்து அவ்வாறு பலபடப் பேசியிருக்க மாட்டார்கள். மேலும் என்று காண்போம், எங்கு காண்போம் என்று ஏங்கிக் கிடந்த உதயகுமாரன் அன்று அவள் சென்ற வழி அவளைத் தேடிச் சென்றிருக்க மாட்டான். எனவே புதிதாக வந்த அவளைப் பலரும் கண்டனர். உதயகுமாரனும் கொள்ள நினைந்தான். மேலும் சுதமதி அந்தப் புதுவனக் கவின்களை யெல்லாம் அவளுக்கு விளக்கிக் காட்டியதாகச் சாத்தனார் கூறுகிறார். சுதமதி பலமுறை மலர் வனம் வந்தவள். ஒரு வேளை மணிமேகலைக்கு வேண்டிய மலரை அவள் தான் கொண்டு வந்தாளோ என எண்ணவும் வழியுண்டு. சோலையுள் புக்க மணிமேகலைக்குச் சுதமதி அதன் அழகுகளை யெல்லாம் காட்டிக்கொண்டு வந்தாள்.

### சோலையைத் தேடி உதயகுமாரன்

மணிமேகலை புகாரின் பல தெருக்களையும் கடந்து கொண்டே வந்தாள் என்றோ! அவற்றுள் ஒன்று பரத்தையர் தெரு. அத்தெருவின் ஒரு மாளிகையிலே எட்டி குமரன் என்பான் ஒருவன் இருந்தான். அவன் மணிமேகலை தெருவழியே செல்வதைக் கண்டான். அவளைக் கண்டதும் அவள் தந்தையாகிய கோவலனும் கண்ணகியும் பெற்ற கொடுந்துயரம் அவன் முன் நின்றது. ஒரு வேளை இவன் கோவலன் உயிர் நண்பனாயிருந்திருப்பான் போலும். அவ்வாறு கோவலனை எண்ணி வாடி வருந்திய எட்டிகுமரன் மனத்திண்மை மாறி யாழிலுள்ள பகை நரம்பில் கை செலுத்தி நிலை கெட்டிருந்தான். அதே வேளையில் அந்த வழியாக அந்நாட்டு இளவரசன் உதயகுமரன் தேரேறிச் செல்வானானான்.

எட்டி குமரனைச் சாரள வழியாற் கண்ட குமரன் அவன் உற்ற வருத்தம் யாதென வினவினான். எட்டி குமரன் மணிமேகலை அவ்வழியாகச் சோலை சென்றதையும், அவளைக் கண்டபின் கோவலன் கண்ணகியை நினைத்துத் தான் நிலை கெட்டதையும் கூறினான். உடனே மணிமேகலையைக் காணவேண்டுமென்றும், அவளைக் கொள்ளவேண்டுமென்றும் கருதினவனாகிய உதயகுமரன், 'நான் சோலை சென்று அவளை என் தேரில் ஏற்றிக்கொண்டு வருவேன்' என்று சொல்லிப் புறப்பட்டான்.

அவன் தேரொலி தூரத்தே கேட்டது. சோலைக் குள்ளிருந்த சுதமதியும் மணிமேகலையும் தேரொலி கேட்டுச் சிந்தை தளர்ந்தனர். வருகின்றவன் உதய குமரனாயின் செய்வது யாது என்று வருந்திய மணி மேகலை சுதமதியை நோக்கினாள். அவளோ சிறிதும் காலம் தாழ்க்காது மணிமேகலையை அருகிருந்த பளிக்கு மண்டபத்துள் செல்லப் பணித்துக் கதவு அடைத்து, அக்கதவி னிடமும் தெரியாத வகையில் செம்மைப் படுத்தினாள். அதே வேளையில் சோழ இளவரசன் உதயகுமரன் உள்ளே புகுந்தான். பளிக்கறைக்கு வெளியே சற்றுத் தொலைவில் இருந்த சுதமதி அவனைக் கண்டு வணங்கினாள். அவனே அவளை 'மணிமேகலை எங்கே' என்று கேட்டான். மேலும் இச் சுதமதி அவளுக்குத் துணையாய் வந்த காரணத்தையும் வினவினான். அவளோ அவன் மணிமேகலையை எண்ணிக் காமபரவசனாகவே வந்திருக்கின்றான் என்பதை அறிந்து அந்நினைவை மாற்ற முயன்றாள். அவள் முன்னே சோழன் கரிகாற் பெருவளத்தான் எப்படி முறை திறம்பாது

இளமை நாணி முதுமை எய்தி அற முரைத்தான் என்பதை எடுத்துக் காட்டினாள். மேலும் அவன் நாடி வந்த உடம்பின் நிலையினைப் பற்றியும் கூறினாள். வினையின் வழியே வரும் இந்த உடம்பு அலங்கரித்தலுக்கு வேண்டிய பொருளும் புனைவும் இன்றேல் எவ்வாறு துர்நாற்றம் வீசும் தன்மையது என்பதையும் விளக்க உரைத்தாள். மேலும் இவ்வுடலில் குடி கொண்ட கொடுமைகள் எத்தகையன என்பதையும் அவள் கூற மறக்கவில்லை. அனைத்தையும் கூறி அத்தகைய உடலின் மேல் பற்று வைத்துத் தான் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதையும் மறந்து வந்தது தகாது என இடித்துரைத்தாள்.

சுதமதி சொல்லியவற்றைக் காதுகள் கேட்டனவேயன்றி உதயகுமரன் கண்ணும் கருத்தும் மணிமேகலையைத் தேடின. அவள் பளிங்கு அறைக்குள் இருப்பது அவன் கண்ணுக்குத் தெரிந்தது. அதன் உள்ளே செல்வதற்கு உரிய வழியைத் துருவித் துருவி ஆராய்ந்தான். அவன் மனம் மணிமேகலையைப் பற்றி அறிய விரும்பிற்று. அவள் எத்தகையவள் என்று சுதமதியைக் கேட்டான். அது கேட்ட சுதமதி, மணிமேகலை

'ஊழ்தரு தவத்தள் சாப சரத்தி
காமற் கடந்த வாய்மையள்'

என்று கூறினள். அதுகேட்ட அரச குமரன் ஆற்றாய் 'எப்படியும் அவளை அடைந்தே தீருவேன்' என்று உறுதி கூறினான். அவனால் பளிக்கறையின் வழியையும் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே அவன் சுதமதியை நோக்கி 'நீ யேன் மணிமேகலையுடன் வந்தாய்' என்று

வெறுப்புடன் கேட்கலானான். சுதமதி தன் வரலாற்றின் மூலம் அவன் கருத்தை மாற்றக் கருதித் தன் கதையினைச் சொல்லலானாள். அவள் சொல்லியவாறே காண்போம்.

சுதமதி வரலாறு

'அரசே! நின் கண்ணி வாழ்வதாக! நீ தீநெறிப் படரா நெஞ்சை உடையவனாகுக! நான் சண்பை நகரத்திலுள்ள கவுசிகன் என்பான் மகள். நான் தனிமையில் பூஞ்சோலையில் இருந்தபோது மாருதவேகன் என்னும் வித்தியாதரன் என்னைத் தன் வசமாக்கிக் கொண்டு வந்து இந்நகரத்து விட்டுச் சென்றான். என் தந்தையோ ஒழுக்கம் தவறாத உயர்நலப் பண்பாளன். நான் பிழை மணம் பட்டேன் என்பதற்காக அவன் பல துறைகளில் நீராடிக் குமரிக்குச் செல்லும் வழியில் இந்நகரத்துக்கு வந்தான். வந்தவிடத்தில் என்னைக் கண்டனன். நான் பிழைபட்டவளாதலின் என்னை மீண்டும் அந்தணர் குலத்துள் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள் என்பதை அவன் அறிவான். எனினும் என்னையும் விட்டுத் துறந்து செல்ல அவன் விரும்பவில்லை. ஆகவே அவன் என்னுடனேயே இருந்து இரந்து உண்டு என்னையும் உண்பித்து வாழ்ந்து வந்தான்.

பிச்சையேற்று உண்ணப் பெருந் தெருக்களில் சுற்றிவருங் காலத்து ஒரு நாள் வழியிடை ஒரு பசு அவனைக் கொம்பால் குத்தி வயிற்றிடை நோய் செய்தது. அவன் ஆற்றாது வருந்தினான். நானும் அவனும் எம்மைப் பாதுகாப்பார் இல்லையின் வருந்தினோம். நான் முன்னே இருந்த சமணப் பள்ளியிடத்துச் சென்று

'காப்போர் உண்டோ' எனக் கதறினர் தந்தையார். 'யாரும் இல்லை' என்ற பதில் வந்தது. ஆயினும் எங்கள் அல்லல் சொல்லைக் கேட்டு ஆதரிக்க வந்தார் ஒருவர். ஆம். அவரும் மனைதோறும் பிச்சையேற்றுண்ணும் ஒருவர்தான். அவர் தன் பாத்திரத்தை என் கைக் கொடுத்து, தந்தையைத் தாங்கிக்கொண்டு மாதவத்தார் உறையும் இடத்தில் சென்று தேற்றித் தெளிய வகை செய்தார். அவர் புத்த சங்கத்தைச் சார்ந்து அச்சங்க நெறி தவறாது வாழ்பவர் என்று அறிந்தோம். புத்த தேவனது பொன்னடிகளைப் போற்றித் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய பெரியோருடைய அத் தருமத்தை மேற்கொண்டு வாழ்தல் எங்கள் கடனென்று கருதி நாங்கள் அதைச் சார்ந்து வாழத் தொடங்கினோம். அது முதல் நான் புத்தர் அடிமறவாத மாதவியைச் சார்ந்து வாழ்கின்றேன்' என்று சுதமதி தன் வரலாறு முழுமையும் விளக்க உரைத்தாள். அவ்வரலாற்றைக் கேட்டுக்கொண்டே பளிக்கு மண்டப வாயிலைத் தேடிக் கொண்டிருந்த அரசகுமரன் அச்செயலில் வெற்றி பெற வில்லை. எனவே அவன் சீற்றம் முன்னிலும் மிக்கது.

'வஞ்சி நுண்ணிடை மணிமேகலை தனைச்
சித்திராபதியால் சேர்தலும் உண்டு'

என்று கூறி அவ்விடத்தை விட்டு வெளியேறினன் உதயகுமாரன்.

**மனத்தடுமாற்றம்**

அரசகுமாரன் சென்ற பின்பு சுதமதி பளிக்கறையின் கதவைத் திறந்து மணிமேகலையை வெளியே விட்டாள். வந்த மேகலையின் முகத்தை நோக்கினாள் சுத

மதி. அதில் கண்ட மாற்றம் அறிந்தாள். அவள் காரணம் வினவுமுன் மணிமேகலை தன் மனத் தடு மாற்றத்தைத் தானே கூறினாள். 'தன்னை அவ்வரச குமாரன் எவ்வளவு பழித்துரைத்த போதிலும் தன் மனம் அவனைப் பற்றிச் சென்ற காரணம் யாதோ' என்று வினவினாள். காமத் தியற்கை அதுவாயின் அக்காமம் கெட்டொழிவதாக என்று வெறுத்தாள். அவர்கள் அவ்வாறு நின்றுகொண்டிருக்கும் வேளையில் மாலைக் காலம் வந்துற்றது.

மணிமேகலா தெய்வம்

அந்த மாலை வேளையில் மணிமேகலா தெய்வம் அச் சோலையினுள் புகுந்தது. அந்நகரில் நடக்கும் இந்திரவிழாவைக் காண வந்த பெருந் தெய்வம் அது. அச்சோலையுள் அது தனது மந்திர வலிமையால் தன் உரு மாற்றி ஒரு மாயவித்தைக் காரியைப் போன்று வந்தது. அங்கு அவர் தம் அருகில் உள்ள பளிக்கறையில் புகுந்து பீடிகையை வலங்கொண்டு, உயர எழும்பி அப்புத்தனது பெரும் புகழைப் பாடிற்று. இருவரும் கண்டு வியந்து நின்றனர்.

அதற்குள் பொழுது சென்று நன்கு இருட்டவே சுதமதியும் மணிமேகலையும் தம் மாளிகை செல்வதற்கு வழி யாது என்று சிந்தித்தனர். அவர்தம் நினைப்பினை யறிந்த மணிமேகலா தெய்வம் அவர்களை அப்போது அவ்வழியே செல்ல வேண்டாம் என்று வற்புறுத்தி யது. மேலும் அவர்கள் இருவரும் அடைந்த துன்பத் திற்குக் காரணத்தை முன்னமே கேட்டறிந்தமையா னும், மணிமேகலையை விரும்பி உதயகுமரன் அவர்கள் தெருவிடைச் செல்லும் வழியில் எப்படியும் கைப்பற்று

வன் என்று அறிந்ததனாலும் அவர்களை அவ்வழியே செல்லவேண்டாமென்று சொல்லிற்று. மற்றும் அந்த இடம் தவசிகள் தங்கும் இடமாதலின் உதயகுமரன் ஒன்றும் செய்யாது சென்றான் என்றும், வெளியே செல்லின் அவன் கட்டாயம் அகப்படுத்துவான் என்றும் உரைத்தது. மேலும் அது அவர்களுக்கு மற்றொரு வழியும் உரைத்தது. மேற்கே உள்ள சிறுவழி மூலம் அடுத்துள்ள சக்கரவாள கோட்டத்திற்குச் செல்லின் அங்கே முனிவர்கள் உள்ளமையின் அவர்களுக்கு யாதொரு தீங்கும் நேராது என்றும் வற்புறுத்தியது. அது கேட்ட சுதமதி சுடுகாட்டுக் கோட்டத்தை 'நீயும் மாருதவேகனும் சக்கரவாள கோட்ட மென்றீர்கள். அதன் காரணம் என்ன? என்று கேட்டாள். தெய்வம் காரணத்தைச் சொல்லத் தொடங்கிற்று.

### சக்கரவாள கோட்டம்

'இப் புகார் நகரம் தோன்றிய அந்தக் காலத்திலேயே உடன் உண்டான சுடுகாடு இச்சோலையின் பக்கத்தில் உள்ளது. அச் சுடுகாட்டில் பிணங்களைச் சுடுவதற்குப் பல்வேறு வகை ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். காளி கோட்டமும் அங்கு உண்டு. அழும் ஒலியும், பேயின் ஆரவாரமும் அடங்காத காடு அது. பல்வேறுவகை மரங்கள் நிறைந்த சுடுகாடு அது' என்று அச் சுடுகாட்டு நிலையை நன்கு எடுத்துக் காட்டிற்று தெய்வம். அத்துடன் அச் சுடுகாட்டையே சான்றாக உலக மக்களுக்கு சாத்தனார் அறிவுறுத்திய நெறி அறிந்து மேற் கொள்ளத்தக்கதாகும். யாதொரு வேறுபாடுமின்றிச் செல்வர் வறியர் என்று நோக்காது-தவத்தோர் அல்லோர் என்று எண்ணாது-ஆடவர்

பெண்டிர் என்று அறியாது-இளையர் முதியோர் என்று கருதாது - இச்சுடலை எல்லோரையும் தின்று வாழும் நிலை கண்டும் மக்கள், தாம் என்றும் இருப்பவர் என்று எண்ணி, அறத்துறை நீங்கி, மறத்துறை பற்றி வாழ்கின்றார்களே என வழுத்துகின்றார் சாத்தனார். அவர் அடிகளையே அறிதல் நலமாகும்.

' தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
முதியோர் என்னான் இளையோர் என்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப
அழல்வாய் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோர் உண்டோ'.

என்பன மணிமேகலை அடிகள்.

'இத்தகைய சுடுகாட்டில் ஒரு நாள் பார்ப்பனச் சிறுவனாகிய சார்ங்கல னென்பான் வந்து பயந்து நிலை கெட்டுத் தன் தாயிடம் சென்று தான் பட்ட படுதுயர் கூறி உயிர் விட்டான். கண்ணிழந்த அவன் தாயாகிய கோதமை அவன் உடலை அக்கோட்டத்தில் கொண்டு வந்து நிறுத்தி, ஆண்டு 'சம்பாபதி' என்னும் தெய்வத்தை வருந்தியழைத்தாள். அறிந்த சம்பாபதி எதிர் நின்று அவள் வருத்தத்தின் காரணம் கேட்டது. அவள் தான் பெற்ற வருத்தத்தை உரைத்து தன் மைந்தன் உயிருக்குப் பதில் தன் உயிரைக்கொண்டு அவனைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டினாள். ஆனால் உடலை விட்டு நீக்கிய உயிர் அதன் வினை வழியே செல்

Raja Muthiah Research Library
3rd Cross Road, CPT Campus
Taramani, Chennai - 600 113

லும் என்பதையும், ஒரு உயிர்க்கு மற்ருேர் உயிர்க் கொள்ளல் யார்க்கும் முடியா தென்பதையும் தெய்வம் விளக்க உரைத்தது. அதை நிறுவ எல்லாத் தெய்வங் களையும் ஒரு சேரக் கொண்டு வந்து நிறுத்திக் கோதமை யின் விழைவைக் கூறிற்று. தெய்வங்கள் அனைத்தும் சம்பாபதி சொல்லியதையே வற்புறுத்திக் கூறின. கோதமை தேறுதல் பெற்று வேறு வழியின்றி மகனை ஈமத்திட்டு இறந்தாள்.

பின்னர் சம்பாபதி தன் ஆற்றல் தோன்ற அங் கேயே பக்கத்தில் எல்லாத் தேவரும் கூடியதன் அறிகுறியேயென மேரு மலையையும் பிற தீவகங் களையும் உண்டாக்கி அங்கு வாழ் தேவரையும் பிறரையும் உருவமைத்து மயனைக் கொண்டு அழகு செய்வித்தது. அந்த இடமே சக்ரவாள கோட்டம் என்று பெயர் பெற்றது. இது சுடுகாட்டின் பக்கத்தே உள்ளதால் சுடுகாட்டுக் கோட்டம் என்று பெயர் பெற்றதன்றி வேறன்று. நீங்கள் அங்கு செல்லின் அரசகுமாரனால் வரும் அல்லல் இல்லை' என்று மணி மேகலா தெய்வம் கூறியது. இவற்றையெல்லாம் கேட்ட மணிமேகலையும் சுதமதியும் மயக்க மெய்தினர். மணிமேகலை தெய்வங் கூறியவற்றையெல்லாம் நினைத்து நினைத்து மனித வாழ்வு இத்தகைமைத்தோ என்று உறங்காது இருந்தாள். சுதமதியோ தன்னை மறந்து உறக்கத்தில் ஆழ்ந்தாள். பின் மணிமேகலையும் உறக்க மயக்கம் பெற, அவ்வேளையில் மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிச் சென்று தெற்கே முப்பது யோசனை தூரத்துக்கு அப்பாலுள்ள மணிபல்லவம் என்னும் தீவிற்குக் கொண்டு சேர்ந்தது.

---

# மணி பல்லவத்திலே

## சுதமதியின் துயர்

மணி பல்லவத்திலே மணிமேகலை தன்னை மறந்து மயங்கிக் கிடந்தாள். அதற்குள் அத்தெய்வம் திரும்பவும் புகார் நகரில் புகுந்தது. மணிமேகலையின் நினைவாலே வருந்தி வாட்டமுற்று இரவெல்லாம் உறக்கமின்றி வாடிய அரசகுமாரன் முன்னே சென்றது. சென்று கோல்கோடா முறையில் அவன் இருக்கவேண்டிய அற நெறியை உணர்த்திற்று.

> 'மன்னவன் மகனே
> கோன்நிலை திரிந்திடில் கோள்நிலை திரியும்
> கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
> மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை
> மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்
> தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்
> (எனவே) தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த
> அவத்திறம் ஒழிக'

என்று அறிவுறுத்திற்று. பிறகு அங்கிருந்து சென்று சுதமதி துயில்கொள்ளும் சக்ரவாள கோட்டத்தைச் சார்ந்தது. உறங்கிய சுதமதியைத் தட்டி யெழுப்பிற்று. எழுந்த அவள் மணிமேகலையைத் தேடிக் காணாது கவல்வதன் முன்னே பேசத் தொடங்கிற்று.

தான் இந்திர விழாவினைக் காணக் காவிரிப்பூம் பட்டினம் வந்ததையும், வந்தவிடத்தே மணிமேகலையைக் கண்டு அவளை மந்திரத்தால் மணி பல்லவத்

துக்குத் தான் தூக்கிச் சென்றதையும், ஆண்டு அவள் ஒரு வாரம் தங்கி அவளுடையதும் பிறருடையதுமாகிய பழம் பிறப்புக்களையும் பிறவற்றையும் அறிவாள் என்றும், தன் உரு மாற்றும் மந்திரம் முதலியவற்றைப் பெறுவாளென்றும் கூறி, ஏழாம் நாளில் திரும்ப அவர்களை வந்து அவள் அடைவாள் என்றும் கூறிற்று. மேலும் அவள் திரும்ப வரும்போது அந்நகரில் பல நன்னிமித்தங்கள் நிகழும் என்பதையும் எடுத்துக் காட்டிற்று. இவற்றை மாதவிக்குக் கூறுமாறும் பணித்தது. அதற்குச் சான்றாக, மாதவி மணிமேகலையைப் பெற்ற ஞான்று—தன் பெயரை அவளுக்கு இடுக என்று கோவலன் கூறியதுபோது—கனவகத்தே 'ஒரு தவப் பெருஞ் செல்வியைப் பெற்றாய்' என்று தான் கூறியதையும் சொல்லிற்று. அனைத்தையும் சொல்லிப் பின் மணிமேகலா தெய்வம் வான் வழிப் பறந்து சென்றது.

அனைத்தையும் கேட்ட சுதமதி அல்லலுற்று வருந்தினாள். உடன் வந்த மேகலையை விட்டு வீடு திரும்பினால் மாதவி மனம் வருந்துவாளே என்று எண்ணினாள். செய்வதறியாது சிந்தை தளர்ந்தாள். தன்னை மறந்து அசைவற்று நின்ற அந்த வேளையில் அப்பெரு நகரத்து உண்டான பல்வேறு ஓசைகள் அவள் நினைவைக் கலைத்தன. அப்பேரொலிகளை யெல்லாம் கேட்ட பெண் மேலும் வருந்தி, அங்கே தனியே இருப்பதற் கஞ்சி அச்சோலையின் மேற்புறவாயில் வழியாகச் சென்று சக்கரவாள கோட்டத்தின் உலக அறவியின் ஒருபக்கம் ஒதுங்கித் தங்கி வருத்தத்தோடு இருப்பாளானாள்.

**தூணிற்பாவை சொல்லியது**

அவள் வருத்தத்தை அறிந்தது போன்று அவள் தங்கியிருந்த இடத்தின் பக்கத்திலே இருந்த தூணில் நின்ற தெய்வம் பேசத் தொடங்கிற்று. சுதமதியின் முற்பிறப்பை எல்லாம் எடுத்துச் சொல்லிற்று. முற்பிறப்பில் மாதவி, சுதமதி, மணிமேகலை மூவரும் உடன் பிறந்தவர்கள் என உணர்த்திற்று. அவள் முற்பிறப்பின் தந்தை இரவிவர்மன் என்றும், கணவன் துர்ச்சயன் என்றும் கூறிற்று. தன் தங்கையாகிய தாரை இறக்க, மயங்கி யானைமுன் அவள் வீழ்ந்து உயிர்துறந்ததை உணர்த்திற்று. அத்துடன் இப்பிறப்பில் அவள் சண்பை நகர்க் கௌசிகன் மகளாய்ப் பிறந்து, மாருத வேகனோடு அங்கு வந்த வகையையும் கூறிற்று. அத்தனையும் கூறி மணிமேகலை இவையெல்லாவற்றையும் இன்னும் பலவற்றையும் அறிந்து அன்றைய ஏழாம் நாள் வருவாள் என்பதையும் எடுத்துரைத்தது. அதற்குள் பொழுது புலரும் நேரமாயிற்று. விடிதற்கேற்ற நகர முழக்கங்கள் ஆரவாரம் செய்தன. கதிரவனும் கீழ்த்திசையில் தோன்ற ஆரம்பித்தனன்.

**மாதவி வருந்தல்**

அந்தக் காலைப்போதில் சுதமதி சக்கரவாள கோட்டத்தை விட்டுப் புறப்பட்டுத் தெரு வழியே நடந்து மாதவியைச் சார்ந்தாள். தனித்து வந்த சுதமதியை நோக்கி, 'மணிமேகலை எங்கே' என்றாள் மாதவி. சுதமதி அங்கு நடந்த அத்தனையும் விளக்க உரைத்தாள். கேட்ட மாதவி கலங்கி நன்மணியிழந்த நாகம் போன்றும், இன்னுயிரிழந்த யாக்கை போன்றும் வருந்தி வாடியிருந்தாள்.

### தீவிடை மணிமேகலை

புகார் நகரில் இவ்வாறு சுதமதியும் மாதவியும் வயாவும் வருந்தமும் எய்திய இதே வேளையில் அங்கு மணி பல்லவத்தில் விடப்பட்ட மேகலை கண் விழித்தாள். அனைத்தும் புதிதாகத் தோன்றியது. அப்புது இடத்தைக் கண்ட மணிமேகலை ஒன்றும் அறியாது அரற்றினள். ஒரு வேளை அதுவும் உவவனத்தின் ஒரு இடமோ என நினைந்தாள். வேறிடத்துப் பிறந்த உயிரே போன்று முன்னையும் பின்னையும் அறியாது அலறினள். சுதமதியைப் பலமுறை விளித்தாள். ஆனால் பதில் பெறவில்லை. 'விஞ்சையில் தோன்றிய விளங்கிழை மடவாள் வஞ்சம் செய்தனள் கொல்லோ அறியேன்' என்று அலமந்தாள். பொழுது விடிந்த பின்னும் வீடு செல்லாவிட்டால் பெற்ற தாயாகிய மாதவி வருந்துவாளே என்று நினைத்தாள். பலவாறு நினைந்து நினைந்து, நைந்து நைந்து, அத்தீவின் பல பாகங்களிலும் சுற்றித் திரிந்தாள் மணிமேகலை. தன் தந்தையை நினைத்தாள்.

'எம்மிதிற் படுத்தும் வெவ்வினை உருப்பக்
கோற்றொடி மாதரொடு வேற்றுநா டடைந்து
வைவா ளுழந்த மணிப்பூண் அகலத்து
ஐயவோ'

என்று வாய்விட்டரற்றி அவர் தம் குடும்பத்தை வழி வழி வருத்தும் விதியை நொந்தாள்.

### புத்த பீடிகை தோன்றல்

புகலிடம் காணாது புது இடத்தே இவ்வாறு வருந்தும் மணிமேகலைக்கு நற்காலம் நெருங்கிற்று. பல

பக்கம் சுற்றி வந்த அவள் புத்த பீடிகை பொருந்தியுள்ள அந்தப் புனித இடத்தின் அருகிலே வந்தாள். உலகெலாம் உய்யவேண்டி, ஒரு பெரு அரச இன்பத்தைத் துறந்து, அல்லலற்ற இன்ப வாழ்வை உலகுக்குத் தேடித் தரப் பாடுபட்ட செல்வன் - புத்த தேவனது பீடிகைக்கு முன்னே மணிமேகலை வந்து நின்றாள்.

### பீடிகையைப் போற்றல்

தன் எதிரில் புத்த பீடிகையைக் கண்டதும் கருத்தழிந்த மணிமேகலை தன்னை மறந்தாள். அவளது காந்தளஞ் செங்கைகள் தலைமேல் குவிந்தன. கைகுவித்து வணங்கி அப்பீடிகையை வலம் வந்து போற்றினாள். நின்ற அளவிலே மணிமேகலையின் பழம் பிறப்புணர்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக உருப்பெறத் தொடங்கின. நினைத்து நினைத்து அப்புத்த தேவன் முன் ஒவ்வொன்றாக எண்ணத் தொடங்கினாள்.

> **தொழுதகை மாதவ துணிபொருள் உணர்ந்தோய்**
> **காயங் கரையில் நீ உரைத்தவை யெல்லாம்**
> **வாயே யாகுதல் மயக்கற உணர்ந்தேன்,**

என்று கூறி அவர் உரைத்தவை என்னென்னவென்று யாவரும் அறிய எடுத்துக் காட்டுகின்றாள் மணிமேகலை.

### மேகலையின் பழம் பிறப்பு

மணிமேகலை தன்வாயாற் கூறிய வரலாற்றை அவள் வாய்மொழிப் படியே காணல் சாலச்சிறந்ததாகும். 'கந்தாரம் என்பது பழம் பெரு நாடு. அந்நாட்டிலுள்ள பூருவதேசத்தில் இடவயமென்னும்

Raja Muthiah Research Library
3rd Cross Road, CPT Campus
Taramani, Chennai - 600 113

நகரைத் தலைநகராகக் கொண்டு அத்திபதி என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனிடம் மைத்துனக் கேண்மையால் சென்றாய். சென்று அறநெறியை அவனுக்கு உணர்த்தினாய். அத்துடன் அன்றைய ஏழாம் நாளில் அச்சம்புத்தீவில் ஒரு பெரும் நிலநடுக்கம் உண்டாகும் என்றும், அதனால் அந்த இடவய நகரும் அதைச் சுற்றியுள்ள நாக நாட்டின் நாநூறு யோசனைப் பரப்பும் பாதலத்தில் விழும் என்றும், அதனால் அந்நகர் விட்டு அப்போதே செல்லவேண்டும் என்றும் உணர்த்தினாய். அவனும் உடனே அந்நகரத்தார்க்கும் மற்றவர்களுக்கும் பறையறைந்து செய்தியைத் தெரிவித்து, அவ்விடத்தை விட்டு நீங்கிக் காயங்கரை யென்னும் ஆற்றங்கரையில் தங்கி யிருந்தான். பின் நீ குறித்தபடியே நிலநடுக்கம் உண்டாகி அப்பகுதிகளை அழித்தது. அந்நிகழ்ச்சி அறிந்த அரசனும் பிறரும் உன் ஏற்றத்தையும் சீலத்தையும் அறிந்து உன்னைச் சரணமடைந்தார்கள். நீயும் அவர்களுக்கு அறநெறியை உணர்த்திக் கொண்டிருந்தாய்.

அவ்வாறு அறம் உணர்த்தும்பொழுது நான் என் கணவனோடு வந்து வணங்கினேன். ஆம். என் முன்னைப் பிறவியின் கணவன் இராகுலன் என்பான். நான் அசோதர நகரத்து அரசனாகிய இரவிவர்மனுக்கும், அவன் மனைவி அமுதபதிக்கும் மகளாய்ப் பிறந்திருந்தேன். இராகுலனோ அத்திபதி என்னும் அரசனுக்கும் நீலபதி என்பாளுக்கும் மகனாகப் பிறந்திருந்தான். நாங்கள் இருவரும் உன் அருகில் இருந்து அறம் கேட்ட அந்த நாளிலே, "இராகுலன் இன்றைக்குப் பதினாறும் நாளில் திட்டிவிடங்கன் என்னும் பாம்பால் இறப்

பான், நீ இவனோடு தீப்புகுவாய்; பின் காவிரிப்பூம் பட்டினத்தில் பிறப்பாய். அப்போது உனக்கு வரும் துன்பந் துடைக்க மணிமேகலா தெய்வம் வந்து தோன்றி உன்னை மணிபல்லவத்தில் கொண்டு சேர்க்கும். அங்குள்ள புத்த பீடிகையைக் கண்டு வணங்கி உன் பழம் பிறப்பு உணர்வாய்" என்று கூறினீர்கள். நான் என் கணவன் மறு பிறப்பில் என்னுவான் என்று கேட்டேன். அதற்குத் தாங்கள் உன்னைக்கொண்டு செல்லும் தெய்வம் மறுபடி உன் முன் வந்து அவன் வரலாற்றை உணர்த்தும் என்று கூறினீர்கள். அத் தெய்வம் வரவில்லையே' என்று வாய்விட்டுக் கூறினாள் மணிமேகலை.

### தெய்வத் தோற்றம்

மணிமேகலை பீடிகை முன்னர் அவ்வாறு தாழ்ந்து வேண்டிக் கொண்டிருக்கையில் வான் வழியாக மணி மேகலா தெய்வம் வந்து இறங்கியது. அத்தெய்வம் வரும் போதே புத்த பீடிகையைப் புத்த தேவனே என்று கருதி அவன் புகழ்பாடிப் போற்றிக் கொண்டே வந்தது. அவ்வாறு வந்த தெய்வத்தைக் கண்டு, அதுவே மணிமேகலா தெய்வம் என்பதை உற்றறிந்த மணி மேகலை அதன் அடிபணிந்தாள். பணிந்து தெய்வத்தின் அருளால் தான் புத்த பீடிகையைத் தரிசித்துப் பெற்ற பேற்றினையும், தன் பிறப் புணர்ந்ததையும் கூறி, தன் முன்னைப் பிறவியின் கணவனாகிய இராகுலன் எங்கே பிறந்துள்ளான் என்பதைத் தான் அறிய விரும்பியதாக வும் கூறினாள். அதைக் கேட்ட தெய்வம் இராகுலன் முதலியோருடைய அன்றைப் பிறவியைப் பற்றிக் கூறத் தொடங்கிற்று.

**மற்றவர் பிறப்பு**

மணிமேகலையின் பழம் பெயராகிய 'இலக்குமி' என்றே அவளை அழைத்துச் சொல்லியது. 'இலக்குமி, கேள், நீயும் உன் கணவனாகிய இராகுலனும் ஒரு நாள் சோலை ஒன்றில் தனித்துப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தீர்கள். அப்போது நீ ஊட, அதன் காரணமாக இராகுலன் உன் பாதங்களைப் பணிந்தான். அதே வேளையில் இரத்தின திவகம் சென்று ஆண்டு புத்த தேவனது பொய்யா அறத்தை உபதேசித்துத் திரும்பிய சாதுசக்கரன் என்னும் முனிவன் வான் வழியே இறங்கினன். அது கண்டு நீ அச்சமுற்றாய். உன் கணவனோ 'யார் இங்கே வந்தவன்?' என்று சிற்றத்தோடு கேட்டான். நீ அவன் வாயைப் பொத்தி, வான் வந்த தேவனை வணங்கி வாழ்த்துவ தல்லது பழித்துரைத்தல் பொருந்தாது என்று உரைத்தாய். பின்னர் நீயும் அவனும் அம்முனிவனுடைய திருவடிகளை வீழ்ந்து வணங்கினீர்கள். வணங்கி அமுது செய்ய வேண்டினீர்கள். அவரும் உங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி அமுதினை அங்கே கொண்டு வரப்பணித்து, உண்டு, உங்களை வாழ்த்திச் சென்றார். அவரை உண்பித்து அவரது வாழ்த்துப் பெற்ற சிறப்பினால் நீ இப்பிறவியில் நலம் பெற்றுப் பிறவா நெறியைப் பெறப் போகிறாய். இன்னும் கேள்.

'முன்னைப் பிறவியில் உன் கணவனாக இருந்த இராகுலனே இப்பிறவியில் அரச குடும்பத்தே உதய குமரனாக வந்து பிறந்துள்ளான். அதனால்தான் அவன் உன்னை விரும்பியதோடன்றி உன் மனமும் அவன்பால் விரும்பிச் சென்றது. அந்தப்பற்றை மாற்றுவதற்

காகவே நான் உன்னை இத்தீவிற்குக் கொண்டு வந்தேன். நீயும் வந்து புத்த தேவனது அழகார் பீடிகையைக் கண்டு உன் பழம் பிறப்பு உணர்ந்தாய். மேலும் கேள்.

'சென்ற பிறவியில் உனக்கு இருதமக்கையர் இருந்தனர். அவர்கட்குத் தாரை, வீரை என்பன பெயர்களாக அமைந்தன. அவர்கள் இருவரும் அங்க நாட்டுக் கச்சய நகரத்து மன்னனாகிய துச்சயன் என்பானை மணந்து அவனொடு இல்லற மேற்று வாழ்ந்து வந்தனர். ஒருநாள் அவர்கள் தம் கணவருடன் அருகே உள்ள மலை வளங்களை யெல்லாம் கண்டு கொண்டு, கங்கைக் கரையை அடைந்தனர். அதுபோது அங்கே அறவண வடிகள் வந்து சேர, அவரைக் கண்டு அவர்கள் வணங்கி அவரை யார் என்றும் வந்த காரணம் என்னவென்றும் கேட்டார்கள். அவர் தம்மை அறவணவடிகள் என்று கூறி, பாதபங்கய மலையைத் தரிசித்தற்குத் தாம் அங்கு வந்ததாகக் கூறினார். மேலும் அப் பாதபங்கயமலை, அன்றொரு நாள் புத்ததேவன் பாரக மடங்கலும் பவமும் பிணியும் துயரும் தொடக்கும் நீங்க வேண்டி, உயிர்களெல்லாம் கேட்டு உண்மை உணரும்படி அம் மலைமேல் நின்று அறநெறி உபதேசித்த காரணத்தால் அப்பெயர் பெற்றது என்றும் விளக்கினார். அவர்களும் அம்மலை கண்டு வழிபட்டு நலம் பெறவேண்டும் என்று வற்புறுத்தினார். அவர்களும், அவ்வாறே சென்று அம் மலையினைக் கண்டு போற்றினர். போற்றிய பேற்றின் காரணமாகத் தாரையும் வீரையும் தற்பொது மாதவியும், சுதமதியுமாக வந்து உன்னைப் பிரியாது உறைகின்றனர்' என்று

மற்றவர் பிறப்பையும் அவர்கள் அவளுடனே பூம் புகாரில் இருப்பதையும் உணர்த்திற்று மணிமேகலா தெய்வம்.

**வருங் காலம்**

மேலும் அது மணிமேகலையின் வருங்காலத்தைப் பற்றியெல்லாம் குறிப்பாகச் சொல்லி மூவகை மந்திரங்களையும் உணர்த்திச் சென்றது. அன்றைய நிலையில் மணிமேகலை புத்த பீடிகையைக் கண்டு பழம் பிறப்பையும், தரும நெறியினையினையும் கேட்டறிந்த பின் மேலும் பல சமய உண்மைகளையும் கேட்பாள் என்பதைக் கூறிற்று. பல சமய வாதிகளது உண்மைகளை ஆராயும் காலத்து, அவர்கள் மேகலையின் இளமைத் தன்மையைக் கண்டு அவளிடம் ஒன்றும் உரையாது சினத்தலும் கூடும் என்று கருதி அவள் உருவத்தை மாற்றிக் கொள்ளும் மந்திரம் ஒன்றையும், வான்வழிப் பறந்து செல்லும் மந்திரம் ஒன்றையும் அத்தெய்வம் அவளுக்கு உபதேசித்தது. உபதேசித்து உத்தரவு பெற்று வான் வழிப் பறந்து சென்ற அத் தெய்வம் மறுபடியும் ஏதோ நினைத்துக் கொண்டு திரும்பி வந்தது. வந்து,

> **மறந்தது முண்டு**
> **சிறந்த கொள்கைச் சேயிழை கேளாய்**
> **மக்கள் யாக்கை உணவின் பிண்டம்**
> **இப்பெரு மந்திரம் இரும்பசி அறுக்கும்**

என்று சொல்லிப் பசியாதிருக்க ஒருமந்திரத்தையும் கொடுத்து வான்வழிச் சென்றது.

தீவதிலகை

தெய்வம் சென்ற நெறி நோக்கிச் சிறிதுகாலம் நின்றிருந்தாள் மணிமேகலை. பின்னர் அத்தெய்வத்தை வாழ்த்தி, அத்தீவிலுள்ள பிறநலன்களையும் காண விரும்பி, மணற்குன்றங்களையும் மற்றைய சிறப்பு களையும் கண்டு கொண்டே சென்றாள். அவ்வாறு செல்லும் போது புதியவளாகக் கடவுட் கோலத்து ஒருத்தி அவள் முன்னே வந்து தோன்றி,

> கலங் கவிழ் மக்களின் வந்து ஈங்கு எய்திய
> இலங்கு தொடி நல்லாய் யார் நீ ?

என்று கேட்டாள். இது கேட்ட மணிமேகலை யார் என்றது எப்பிறப்பினைப் பற்றி என்று பதிலுக்கு வினவினாள், முன்னைப் பிறவியிலும் இந்தப்பிறவியிலும் அவள் இருந்த நிலையையும் எடுத்துக் கூறினாள். மேலும் அங்கு தான் எவ்வாறு மணிமேகலா தெய்வத்தால் கொண்டு வரப்பட்டாள் என்பதையும் கூறி அவளை யார் என்று கேட்டாள், உடனே எதிரே நின்ற தீவ திலகை தன் வரலாற்றைச் சொல்லத் தொடங்கினாள்.

"இத்திவின் அயலிலே உள்ள இரத்தின தீவ கத்து மிகவும் உயர்ந்துள்ள சமந்தகமலையில் தோன்றும் 'அறவியங்கிழவோன் அடியிணையாகிய, பிறவியென் றும் பெருங்கட லவிழ்க்கும்' நாவாய் ஒன்று உளது. அதைத் தரிசித்து இத்தீவிற்கு வந்து இப் பீடிகையைக் காத்து வருகிறேன். என் பெயர் தீவதிலகையாகும்" என்று தன் வரலாற்றைக் கூறினள். மேலும் அங் குள்ள புத்த பீடிகையை வணங்குவார் பெறும் பயனை யும் பழம் பிறப்புணர்ச்சியையும் எடுத்து விளக்கினள்.

### கோமுகிப் பொய்கை

அவற்றை யெல்லாம் விளக்கியபின் தீவதிலகை அருகிலே உள்ள கோமுகி என்னும் பொய்கையின் சிறப்பை எடுத்து கூறுவாளானுள். மலர்கள் நிறைந்த அந்த மலர்ப் பொய்கையி னிடையில் இளவேனிலில் வைகாசித் திங்களில் வீசாக நன்னுளில் 'மீனத்திடை நிலை மினத் தகவயின்' பண்டு ஆபுத்திரன் கையிடை யிருந்த அமுத சுரபி யென்னும் பாத்திரம் போதித் தலைவனோடு பொருந்தித் தோன்றும். மேலும் அவ் வைகாசித் திங்களும் நாளும் மீனப் பொழுதும் அப் போதேயாமாகலின் அவர்கள் அப் பொய்கைக் கரை யிடைச் சேன்றால் அது வெளி வருவதைக் காணலாம் என்றுள். அது ஒரு வேளை மணிமேகலை கையினிட வருதலும் கூடும் என்றுள். அதிலிடும் ஆருயிர் மருந் தாகிய உணவோ, வாங்குவார் கையை வருத்து மல் லாது. ஒரு சிறிதும் குறையாது வளந்து வரும் தன்மை யுடைய தாகும் என்று சொல்லி, மேலும் அதன் சிறப்பை எல்லாம் அறவணடிகளிடத்துக் கேட்டு அறிந்துகொள்ளவும் கூறினள்.

### பாத்திரம் பெறுதல்

பாத்திர மரபறிந்த செல்வியாகிய மணிமேகலை புத்த பீடிகையை வலஞ்செய்து வணங்கி, தீவதிலகை யுடன் சென்று கோமுகிப் பொய்கையை வலம் வந்து வணங்கி நின்ற பொழுது-அந்த வைகாசி விசாக நிறை மதி நன்னுளில்-அந்த நல்ல வேளையில்-அப்பாத்திரம் பொய்கையில் தோன்றி அங்கேயே நிற்காது விரைந்து வந்து மணிமேகலையின் கையில் புகுந்தது. அதுகண்டு மகிழ்ந்த மணிமேகலையின் வாய் புத்ததேவனை வாழ்த் திற்று.

மாரனை வெல்லும் வீர நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
யெண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்கும் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்தல் என் நாவிற்கு
அடங்காது'

என்று போற்றினாள். இவ்வாறு புத்த தேவனைப் போற்றி நின்ற மணிமேகலைக்குப் பாத்திரத்தின் பெருமையைக் கூறப்புகுந்தாள் தீவதிலகை. அப்பாத்திரத்தில் இடும் ஆருயிர் மருந்து எடுக்க எடுக்கக் குறையாது வளரும் ஆதலால் நாட்டிடைச் சென்று நல்லறம் ஆற்ற வேண்டும் என்று வற்புறுத்தினாள். பசியின் கொடுமையை அவள் பலவாறு விளக்கிக் காட்டி, அப்பசியைப் பாவி என்று கூறி அப்பாவியைக் கொல்லும் வகையில் அனைவருக்கும் சோறு அளிக்க வேண்டும் என்று எடுத்துரைத்தாள். மேலும் அவ்வறநெறி பற்றி,

'ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே

உயிர்க்கொடை பூண்ட உரவோ யாகிக்
கயக்கறு நல்லறம் கண்டனை '

என்ருள். இவற்றையெல்லாம் கேட்டு நின்ற மணி மேகலை அப்பாத்திரம் தன் கையிடை வந்து நின்றதை எண்ணி எண்ணி வியப்படைந்தாள். சென்ற பிறவியில் கணவனொடு எரியிடை மூழ்கும் காலத்து, சாதுசக் கரனை உண்பித்தது போல் கனமயக்குற்ற ஒன்றே, அதன் பயனை இப்பாத்திர உருவில் தன் கைப் புகுத் தியதோ என்று எண்ணினுள். அதே வேளையில் தம் நாட்டில் எவ்வளவோ மக்கள் கந்தை உடுத்து, வயிறு வற்றி உணவுக்கு ஏங்கி நிற்கும் காட்சியும் அவள் கண் முன் நின்றது.

ஆகவே விரைந்து புறப்பட்டுச் சென்று, தாய்நா டடைந்து அவ்வேழை மக்களுக்கு உதவத் தான் விழை வதாகக் கூறினுள். அதுகேட்ட தீவதிலகை வாழ்த்தி விரைந்து ஈங்குநின்று எழுவாய் என்று விடையளித் தனள், மணிமேகலையும் அவளை வணங்கி விடைபெற்று, அத்தீவினையும் போற்றி, வான் வழி மந்திரத்தாலே பறந்து பூம்புகார் நகர் வந்து சேர்ந்தாள். அதற்கு இடையில் ஏழு நாட்கள் கழிந்தன.

**பிரிந்தவர் கூடினர்**

புகார் நகரிலே ஏழாம் நாளில் தன் மகள் வரு வாள் என்ற தெய்வ வாக்கை நம்பி உயிர் வாழ்ந்த மாதவியோ 'ஏழுநாள் வந்தது என் மகள் வாராள்' என்று வெம்பிக் கொண்டிருந்தாள். சுதமதி அவளைத் தேற்றித் தேவ வாக்கு எப்படியும் பொய்க்காது என்ற னள். அதே வேளையில் வான்வழி வந்த மணிமேகலை

அவர்கள் முன் தோன்றி அவர்கள் இருவரையும் வணங்கி அவர்களுடைய முன்னைப் பிறப்பை அறிவுறுத்தினாள். பின்னும் தன் கையிலுள்ள அமுதசுரபியைக் காட்டி அதன் திறம் புகழ்ந்து, மேலும் அறவணவடிகள் பற்றியும் அமுதசுரபி பற்றியும் அறிந்து நற்றிறம் படருவோம் என்று கூற, மூவரும் அறவணவடிகளை நாடிச் சென்றனர்.

-----

R· ja Muthiah Research Library
3rd Cross Road, CPT Campus
Taramani, Chennai - 600 113

# ஆருயிர் மருந்து

## அறவணர்த் தொழுநாள்

மணிமேகலை, மாதவி, சுதமதி ஆகிய மூவரும் அறவண அடிகள் எங்கே உள்ளார் என்று தேடுவராயினர். முடிவில் அவர் இருக்குமிடத்தை அறிந்து, அவரிடம் சென்று வணங்கினர். மூவரும் வணங்கிய பின் அமர்ந்தனர். பின்னர் மணிமேகலை தன் வரலாற்றை எல்லாம் கூறினள். தான் மலர் வனஞ் சென்றதும், உதயகுமரனைக் கண்டதும், அதனால் இரவு அங்கே தங்கியதும், பின் மணிமேகலா தெய்வத்தின் வழி மணிபல்லவம் சென்றதும், அங்கு புத்த பீடிகை கண்டு பழம் பிறப்புணர்ந்ததும், தீவதிலகையால் பாத்திரம் பெற்றதும், பாத்திரம் பற்றிய வரலாற்றை அடிகள் மூலம் அறிக என்று அவள் சொன்னதும், மூன்று மந்திரங்கள் உபதேசிக்கப் பெற்றதும் ஆகிய அனைத்தையுங் கூறினள். அது கேட்ட அறவணவடிகள் மிக மகிழ்ந்தனர். பின்னர் முன்னே தாரையும் வீரையும் மடிந்த நிலையையும் கூறினர்.

அறவணவடிகள் அறவாழி அந்தணன் பாதம் தொழப் பல இடங்களுக்கு யாத்திரை செய்பவர். அவர் ஒரு சமயம் பாத பங்கய மலையை வழிபடச் சென்றவர், வழிபட்டுத் திரும்பி வரும் வழியில் துர்ச்சயராசனைக் கண்டாராம். கண்டு ' உன் தேவியர் நலமோ ' என்று கேட்க, அவன் மிகவும் வருந்தி, வீரை மதுவின் மயக்கத்தால் யானையின் முன் சென்று மடிந்ததையும், அவ்வள் மடிந்ததை அறிந்த தாரை தன் மாளிகை உப்பரிகையி லிருந்து வீழ்ந்து இறந்ததையும் கூறினனும்.

இவர். அது பழ வினையின் பயன் என்று தேற்றினாராம். இவற்றைக் கூறி அவ்வாறு இறந்த அவ்விருவரும்தான் தற்போது மாதவியாகவும், சுதமதியாகவும் வந்துள்ளனர் என்பதையும் கூறினர்.

## தேவதோற்றமும் பாவமாற்றமும்

அவர் தம் வரலாற்றைக் கூறிய அறவணவடிகள் அன்றைய உலக நிலையையும் அடுத்து வரும் நிலையையும் சொல்லி, மேல் மேகலை உலகுக்குச் செய்யவேண்டிய தொண்டினையும் விளக்குவாரானார். இவ்வுலகில் பௌத்த தருமங்கள் குறைந்த காரணத்தால் கொடுமைகள் மிகுகின்றன வென்றும், அதைக் கூடுமான வரையில் மாற்ற எண்ணியே தாம் அறமுரைத்து வருவதாகவும் உரைத்தார். எனினும் உலக மக்கள் உண்மையில் அறநெறியை நன்கு உணர்ந்து கொள்ளவில்லை; என்றாலும் அவற்றை உணரும் காலமும் வராமற் போகாது. தேவன் மீண்டும் பிறந்து மக்களை நல்வழிப் படுத்தும் வழியில் பணியாற்றுவன். அவன் தோன்றும் காலத்திற்குப் பின் யாவரும் அருளற வழியே கருத்தைச் செலுத்திச் செயலாற்றுவர். அப்புத்த ஞாயிறு தோன்றும் காலத்து பல நன்னிமித்தங்கள் நிகழும். நாளும் கோளும் நடுக்கம் நீங்கித் தம் தம் வழியில் தவறுது பணியியற்றும். நல்ல மழை வளமும் விளை வளமும் பெருகும். உயிர்கள் துயரற்றுச் செம்மை வாழ்வில் வாழத் தொடங்குவர். மக்கள் மட்டுமின்றி தேவரும் நரகரும், விலங்கும் புள்ளும் யாரும் யாவும் தத்தம் தீச்செயல் ஒழித்து, செம்மை வழியில் நின்று துன்பம் நீங்கி இன்ப வாழ்வில் வாழத் தலைப்படுவார்கள். அத்தகைய அண்ணல் தோன்று நாள் என்று

வருமோ என்று எண்ணிக் காலம் கழிப்பதோடு, அவ் வண்ணலைப் பிறவி தோறும் போற்றித் தான் வழி படுவதாக அறவண அடிகள் கூறினர்.

**மணிமேகலைக்கு**

இவற்றைக் கூறியபின் அடிகள் மணிமேகலை மேல் செய்யவேண்டியதைப் பற்றியும் வற்புறுத்தலானுர். உடனிருக்கும் மாதவியும், சுதமதியும் சென்ற பிறவியில் பாதபங்கய மலையை வழிபட்ட காரணத்தால் மேலும் மணிமேகலையுடனே தொடர்ந்து பிறந்து புத்ததேவனை வழிபட்டு, துயர் நீங்கப் பெற்று, பின் நிலைத்த முத்தியை அடைவார்கள் என்றும் கூறினுர். மேலும் மணிமேகலையை நோக்கி 'நீ இந்நகரில் ஆற்றப்போகும் செயல்கள் பல உள, அதன் பிறகுதான் உனக்கு நான் கூறப்போகும் பொருளுரை விளங்கும். ஆகவே முதலில் நீ உன் பாத்திரம் கொண்டு, உலகினுக்குத் தேவையான ஆருயிர் மருந்தினை அளிப்பாயாக' என்று அறிவுறுத்தினுர்.

**மக்கள் தேவர் என இரு சார்க்கும்**
**ஒத்த முடிபின் ஓரற முரைக்கேன்**
**பசிப்பிணி தீர்த்தல் ஒன்றே யாவரும்**
**தவப்பெரு நல்லறம் சாற்றினர்**—என்றனர்.

அதைக்கேட்ட மணிமேகலையும் 'அவ்வாறே நல்லறத்தை மேற்கொள்வேன்' என்று கூறினள்.

**ஆபுத்திரன் வரலாறு**

அறம் தொடங்குமுன் அந்த ஆருயிர் மருந்தளிக்கும் அமுதசுரபியைப் பற்றிய முழு வரலாற்றையும்,

அதை வைத்திருந்த ஆபுரத்தின் வரலாற்றையும் அறிய விரும்பினுள் மணிமேகலே. அவள் உளக் குறிப்பறிந்த அறவண அடிகள் ஆபுத்திரன் வரலாற்றைச் சொல்ல லானுர்.

வாரணுசி என்பது வடபுலத்தே உள்ள ஓர் ஊர். அவ்வூரில் வேதம் ஓதும் விழுமிய குலத்தில் பிறந்தவன் அபஞ்சிகன் என்னும் அந்தணன். அவனுடைய மனைவி சாலி என்னும் பெயரினள். அவள் பெண்களுக்கே உரிய காப்புக்கடை கழிந்து கற்பிழந்தாள். அதன் காரணமாகக் கருப்ப முற்ருள். ஆயினும் பின்னுல் தான் செய்த தவறு அறிந்து வருந்திஞள். பாவத்தின் கழுவாயாகக் குமரியம் பெருந்துறை சென்று தீர்த்த மாடினுள். தீர்த்தமாடித் திரும்பிவரும்போது கருப்ப முதிர்ந்து மகப் பெறு காலம் அண்மிற்று. ஓர் ஆண் மகனையும் பெற்ருள். பெற்ற குழந்தையின் மீது இரக் கம் காட்டாது, அது தன் பாபத்தின் சின்னமாதலேப் பார்க்க விரும்பாதவளாகிய சாலி என்னும் அப் பெண், அதை அங்கேயே ஒரு பொழிலிடை விட்டுவிட்டுத் தன் வழியே செல்வாளாஞள். அக்குழந்தை வீறிட்டு அழத் தொடங்கியது. தூரத்தே மேய்ந்த ஒரு பசு அக் குழந்தையின் அழுகுரலைக் கேட்டு, அதன் அண்மையில் வந்து தன் நாவால் நக்கி, தன்பாலேயும் உண்பித்தது. அவ்வாறே ஏழு நாள் அக் குழந்தையைப் பசு பாது காத்தது.

நிற்க, வயனங்கோடு என்னும் ஊரில் வாழும் பூதி என்னும் அந்தணன் தன் மனைவியோடு அவ்வழியே வந்தான். வந்த அவன் அக்குழந்தையைக் கண்டான். அதன் குரலேக் கேட்டான். அழுகை அறிந்தான்

கழுமிய துன்பமொடு கண்ணீர் உகுத்து 'ஆ மகன் அல்லன் என்மகன்' என்று சொல்லி அக்குழந்தையை எடுத்துக் காதலி தன்னிடம் கொடுத்தான். அவளும் அன்போடு குழந்தையை ஏற்று ஊர் சென்று வளர்த்து வருவளாயினள். அவர்கள் தம் ஊரில் சென்று குழந்தை வளர வளர, அந்தணர்குலச் சடங்குகளை யெல்லாம் விதிமுறை தவறாது செய்து, பூணுல் அணி வித்துச் சிறப்புற வளர்த்து வருவாராயினர்.

சிறுவன் நன்கு பாதுகாக்கப்பட்டு வளர்ந்து வந்தான். அந்த நாளிலே அவ்வூரில் வேள்வி ஒன்றைச் செய்ய அந்தணர் முயன்றனர். அவ்வேள்வியில் பசு வினைக் கொல்வார்கள் போலும். அதற்கெனக் கொண்டுவரப்பட்ட பசுவொன்று, கழுத்தில் மாலை யோடு தன் இறுதி வேளையை எண்ணி ஏங்கிக் கிடந்தது. வேடர் வலையிற் சிக்கிய மான் போல் வருந்திய அந்தப் பசுவினை எப்படியும் மீட்க வேண்டும் என்று கருதிய அச்சிறுவன் இரவில் ஒருபுறத்தே மறைந்திருந்து, அப்பசுவை பற்றிக் கொண்டு தனியாகப் புறப்பட்டுக் காட்டுவழியே செல்வானுனன்.

பின்னர் யாகத்துக்கெனக் கொண்டுவந்த பசு வினைக் காணமுடியாது போனமையினுலே, கவன்ற பார்ப்பனர் அப்பசுவினைத் தேடலாயினர். காட்டு வழியில் பசுவுடன் சென்ற அச்சிறுவனைத் துன்புறுத் தினர். 'நிகழ்ந்ததை உரையாய் புலைச் சிறுமகனே, போக்கப் படுதி' என்று சொல்லிக் கோல்கொண் டடித் தனர். அவருள் உயர்ந்த பெரியான் ஒருவனது கொடு மையைக் கண்ட பசு, அவனை வயிற்றிடை முட்டிக் கொன்று காட்டினுள் ஓடிவிட்டது. அது கண்டு

மற்றவர் மேலும் சினம் கொண்டனர். சிறுவனே அமைதியாக அப்பசு செய்த கொடுமை யாது என்று கேட்டான்.

'இருநில மருங்கில் படுபுல் ஆர்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டுச் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சொடு அருள் சுரந்து ஊட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை'

என்று அச்சிறுவன் கேட்கவும் அவனைப் பழித்தனர் வந்தவர். 'பிரமதேவன் அருளிய வேள்வியின் திறத்தை இகழ்ந்து நீ அந்தப் பசுவினை மீட்ட காரணத்தால் நீ பசு மகன் என்னப்படுவாயே யன்றி மனித மகனாக மாட்டாய்' என்றனர். அது கேட்ட சிறுவன் நகைத்து, மான் மகன், புலி மகன், நரி மகன் ஆகியோர் சிறந்த தவசிகளாகிய அவ்வந்தணரால் போற்றப்படுவதை உரைத்து, தான் பசு மகன் என்பதால் தாழ்ந்து விடவில்லை என்று கூறினான். அதற்குள் அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவன் முன்வந்து அனைவரிடத்தும் அச்சிறுவன் வரலாற்றைக் கூறினன். ஒழுக்கங் கெட்ட சாலி என்ற பார்ப்பனியின் மகன் என்பதையும், கொற்கைக்குக் காத தூரத்திலே அவன் பிறந்து, பசுவினால் காக்கப்பட்டு பின் அவ்வூர் அந்தணனால் கொண்டுவரப் பட்டதையும் கூறினன். கூறியபின் அவனைப் புலை மகன் என்று அனைவரும் ஒதுக்கித் தள்ளுங்கள் என்றான்.

அனைவரும் அவனை விட்டு நீங்கினர். அது வரை அவனை வளர்த்த பூதி என்னும் அந்தணனும் அவன்

Raja Muthiah Research Library
3rd Cross Road, CPT Campus
Taramani, Chennai - 600 113

பிழைபட்டவன் என்பதை அறிந்த காரணத்தால் அவனைத் தன் வீட்டிற்கு வரவேண்டாம் என்று கூறிவிட்டான். பிச்சையெடுத்தேனும் வாழலாம் என்று நின்ற அச்சிறுவனது பிச்சைப் பாத்திரத்திலே அப் பார்ப்பனர் கல்லிட்டுத் துன்பம் செய்தனர். ஆகவே அவர்கள் துன்பம் பொறுக்காது அவ்வூரையே விட்டு, தென் மதுரை சென்று சிந்தாதேவியின் திருக்கோயிலினுள் தங்கினான். அங்கிருந்த செழுங்கலை நியமத்து வாயிலில் தங்கி அவ்வூரில் பலவிடங்களிலும் பிச்சையேற்று வந்தான். ஏற்ற பிச்சையை தான்மட்டும் உண்ணாது,

> 'காணார் கேளார் கான்முடம் பட்டோர்
> பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்'

ஆகிய யாவரையும் வருக என்று அழைத்து அவர்களுக்கும் இட்டு, மிகுதி இருப்பதைத் தானும் உண்டு காலம் கழித்து வருவானாயினன்.

**பாத்திரம் பெற்றது**

பிச்சைக்காரனாக இருந்த அச்சிறுவன் பின் எப்படி வற்றாத பாத்திரம் பெற்று உலகம் போற்றும் புகழ் பெற்றான் என்பதை அறிய ஆவல் கொண்டனர் மணிமேகலையும் மற்ற இருவரும். எனவே அறவண அடிகள் மேலும் சொல்லலானார்,

பிச்சையேற்றும், பிறரை உண்பித்துத் தானும் உண்டு வாழ்ந்த அச்சிறுவனுக்கு மேலும் நலம் உண்டானதைக் கேள் என்றார். ஒரு நாள் பெருமழை பெய்தது. மழைக்குப்பின் இருட்டிவிட்டது. நடு இரவிலே ஒரு சிலர் ஆபுத்திரன் தங்கியிருந்த அந்த மண்டபத்துக்கு வந்தார்கள். வந்து உறங்கும் அவனை எழுப்பித்

தங்கட்குப் பெரும் பசி உண்டென்றும் அதன் வருத்தம் நீங்க ஏதேனும் உணவளிக்கவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டனர். ஆனால் பிச்சையேற் றுண்ணும் வழியன்றி, வேறு வகையில் வாழாத அவன் செய்வதறியாது திகைத்தான், தான் பிச்சையேற்றுக் கொண்டு வந்ததை மாலையே மற்றவர்களுக்கு இட்டுத் தானும் உண்டு விட்டான். வேறு வழியில்லை என்று எண்ணி வருந்திக்கொண் டிருக்கையில் சிந்தாதேவியின் திருக்கோயிலில் பேரொளி புகுந்தது. ஒளி வந்த திசை நோக்கினன் ஆபுத்திரன் ; சிந்தாதேவி அவன் முன்னே நின்றிருந்தாள். அவள் கையிலே ஒரு பாத்திரத்தைக் கொடுத்து அத்தெய்வம்,

**'ஏடா அழியல் எழுந்திது கொள்ளாய்**
**நாடு வறங் கூறினும் இவ்வோடு வறங்கூராது**
**வாங்குநர் கையகம் வருத்தல் அல்லது**
**தான் தொலை வில்லாத் தகைமையது'**

என்று சொல்லிற்று. அதுகண்ட ஆபுத்திரன் தன்னை மறந்து, பிறர் துயர் களையும் பெரியாளாகிய அச் சிந்தா தேவியைப் பல் வேறு வகையில் பரவிப் போற்றினன். பின்னர் அங்கு வந்தவர்கள் அனைவருக்கும் உணவினை அப்பாத்திரத்திலிருந்து வாரி வாரி வழங்கினன். அப் பாத்திரத்தில் உள்ள உணவோ எடுக்க எடுக்கக் குறையாது வளர்ந்து கொண்டே வந்தது. அனைவரும் வியந்தனர்.

**தெய்வலோக வாழ்க்கை**

பெற்ற பாத்திரத்தைக் கையிற் கொண்டு ஆபுத்திரன் அந்நாடு முழுதும் சென்று, பசித்திருப்பார்

உண்டோ என்று கேட்டுக் கேட்டு அனைவருக்கும் பாத்திரத்திலிருந்து சோற்றினை வாரி வாரி அளித்து வந்தான். அவன் புகழ் நாடு முழுவதும் பரவியது. இவ்வுலகில் மட்டுமன்றி தேவ உலகினுக்கும் சென்றது அவன் புகழ்.

தெய்வ உலகத்தின் தலைவனாகிய இந்திரன் இவன் செயலைத் தன் பாண்டு கம்பள நடுக்கத்தால் அறிந்து கொண்டான். பாண்டு கம்பளமென்பது வெள்ளைக் கம்பளம் போர்த்த இந்திரனுடைய ஆசனம் போலும். இவ்வுலகில் நல்லறம் செய்து பெருநிலை பெறினும், அதனால் இந்திரர்க்கு அல்லல் உறினும் அந்த ஆசனம் நடுங்கும் என்பது பௌத்த தர்மக் கொள்கை போலும். நடுக்கத்தின் காரணத்தை அறிந்த இந்திரன் கிழ அந்தணர் வேடம் கொண்டு மாயிருஞாலத்து மன்னுயிர் ஓம்பும் ஆருயிர் முதல்வன் முன்னே தோன்றினான். எதிரில் வந்து நின்ற இந்திரனை நோக்கினான் ஆபுத்திரன். இந்திரனும் தான் இன்னானென்று கூறி அவன் தானத்தின் பலனைத் தன்னிடத்திலிருந்து கொள்ளுமாறு கூறினான். அவன் கூறியதைக் கேட்ட ஆபுத்திரன் விலா ஒடியச் சிரித்தான். தெய்வலோக வாழ்வைப் பற்றி எள்ளி நகையாடினான்,

> 'ஈண்டுச் செய்வினை யாண்டு நுகர்ந்திருத்தல்
> காண்தகு சிறப்பினும் கடவுளர் அல்லது
> அறஞ் செய் மாக்கள் புறங்காத்து ஓம்புநர்
> நற்றவம் செய்வோர் பற்றற முயல்வோர்
> யாவரும் இல்லாத் தேவர்நன் னாட்டுக்கு
> இறைவ னாகிய பெருவிறல் வேந்தே'

என்று அந்நாட்டு இழிவு தோன்றக் கூறி அவனை விளித்தான். மேலும் பசியென வருந்தி வந்தோர் தம் வாடியமுகம் கண்டு, அவர்கட்கு வேண்டிய உணவிட்டு, வயிறு நிரம்பப் பெற்ற பின் வாடிய முகம் மலரப் பெற அவனை வாழ்த்திச் செல்வோர் பலர். அம்மலர்ந்த முகம் காணும் வாழ்வு தேவ உலகில் கிடையாதே என்றான். மற்றும் இந்திரன் அளிப்பன யாவும் பலனற்றவையே என்று பரிகசித்தான். இவற்றையெல்லாம் கேட்ட இந்திரன் பெருஞ் சீற்ற முற்றான். பசி இருந்தாலன்றோ மக்கள் இவனை வந்து சோறு என்று வருந்திக் கேட்க, அவர்கட்டு உணவளித்து, அவர்தம் திருந்து முகத்தை இவன் காணப் போவது என நினைத்தான். நாட்டில் பசி உண்டாகாத படி நல்ல மழையினைப் பெய்வித்து விளைவினைப் பெருக்கிவிட்டால் இவனும் இப்பாத்திரமும் பயனற்று நிற்க, இவன் தனக்கு அகப்படுவான் என நினைத்தான். நினைத்து மழை பெய்யச் செய்தான்.

### மணிபல்லவம் சேர்ந்தான்

பாண்டிநாட்டில் பன்னிரண்டாண்டு பற்றியிருந்த பஞ்சம் நீங்க நல்ல மழை பெய்தது. வரண்டு பயிராகா திருந்த நிலன்களெல்லாம் நல்ல பயனைத் தந்தன. விளைவு ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிற்று. மக்கள் நிறைய உணவைப் பெற்றார்கள். எனவே ஆபுத்திரனை அண்டி 'உண வுண்டோ' என்று வேண்டுவார் இல ராயினர். வருந்திய ஆபுத்திரன் வருவோர் இலரே என்று எண்ணி அப்பாத்திரத்தைத் தான் கையிலேந் திக் கொண்டு ஊர் தொறும் சென்று உண்பார் உள ரோ என்று காண விரும்பினான். அவ்வாறே சிந்தா

தேவியை வணங்கி வரங் கொண்டு ஊர்தோறும் சென்று உணவு உண்ண வாருங்கள் என அழைத்தான். ஆனால் யாங்கும் அவனை இகழ்வோர் பலராயினர். நல்ல வினையுள் பெருகிய பின் பிச்சை ஏற்பார் இல்லை. இந் நிலையினை எண்ணிய ஆபுத்திரன் திருவின் செல்வம் பெருங் கடல் கொள்ள, ஒரு தனியே வரும் பெருமகன் போல் வருத்தம் அடைந்தான்.

அவன் வருந்தி யிருக்கும் கால் ஒரு நாள் கப்பலில் வந்து இறங்கிய சிலர் அவனைக் கண்டு தூரத்தே உள்ள சாவக நாட்டில் மழை இன்மையால் பலர் உணவின்றி மடிகின்றார்க ளென்றும், உடனே அவன் அங்குப் புறப் பட்டுச் சென்றால் அனைவரும் அவன் அளிக்கும் உண வினைக் கொண்டு உயிர் பிழைப்பார்க ளென்றும் கூறி னர். அவர்கள் கூறியதைக் கேட்ட ஆபுத்திரன் வறி யோன் பெருஞ் செல்வம் பெற்றதைப் போன்று பெரு மகிழ்வுற்று உடனே அந்நாட்டுக்குப் புறப்பட்டான்.

சாவக நாடு செல்லும் கப்பலில் புறப்பட்டான் ஆபுத்திரன். கப்பல் கடலைக் கிழித்துக் கொண்டு சென்றது. ஒரு நாள் அது மணிப்லலவம் என்ற தீவிடை நின்றது. கப்பலில் உள்ளார் சிலர் இறங்கி அத்தீவின் நலம் காணச் சென்றனர். ஆபுத்திரனும் சென்றான். அனைவரும் அத்தீவின் நலம் கண்டு திரும் பினர். ஆபுத்திரன் சற்று உள்ளே சென்று விட்டான் போலும். அனைவரும் வந்து விட்டார்கள் என்று எண்ணிய கப்பற் றலைவன் கப்பலைச் செலுத்திக் கொண்டு நடுக் கடலுக்குச் சென்று விட்டான். பிறகு கரைக்கு வந்து, கப்பல் சென்றதை அறிந்த ஆபுத்திரன் செய்வதறியாது திகைத்தான். அத்தீவில் மக்களே

இன்மையால் அப்பாத்திரத்தால் அங்கு யாது பயன் என்று நினைத்தான். தான் அதில் வரும் உணவினை உண்டு வாழத் தேவையில்லை என எண்ணி வருந்தினான்.

யாருக்கும் பயன்படாத அப் பாத்திரத்தில் வரும் உணவினைத் தான் மட்டும் உண்டு உயிர் வாழலாகாது என்று கருதிய ஆபுத்திரன் உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்க நினைத்தான். அதற்கு முன்னாகச் சிந்தாதேவி அளித்த அந்த நந்தாப் பாத்திரத்தை அருகிலுள்ள கோமுகி யென்னும் பொய்கையில் இட்டு, ஆண்டுக்கு ஒரு முறை அது வெளிவர வேண்டும் எனவும், அப்போது யாரேனும் 'அருளறம் பூண்டு ஆங்கு ஆருயிர் ஓம்புநர் உளரெனில் அவர் கைப் புகுவாய்' எனவும் கூறினன். பின்னர் அப்பொய்கையின் பக்கலிலேயே உண்ணா நோன்பினை மேற்கொண்டான். அப்போது அறவணவடிகள் அங்குச் சென்று அவன் பெற்ற பெருந்துயர் யாது எனக் கேட்க, அவன் எல்லாவற்றையும் அவருக்கு உரைத்தனன். பின்னர் அவன் உயிர் துறந்து சாவக நாட்டினை ஆளும் அரசனது பசு வயிற்றில் மகனாகப் பிறந்தான்.

பெற்ற அப்பசு முன்னமே அவனைச் சாலிவிட்டுச் சென்றபோது பாதுகாத்த அந்தப் பசுதான். அவனைப் பாலூட்டிப் பாதுகாத்த அப் புண்ணியச் சிறப்பினால் சாவக நாட்டில் தவளமால் வரையினிடத்து வாழ்ந்த மண்முக முனிவன் தங்கிய சோலையில் பிறந்தது. அதன் கொம்பும் குளம்பும் பொன்மயமாக இருந்தன. கன்றைப் பெற்றெடுப்பதன் முன்னே கறவையாகித் தானே பற்பல விடங்களுக்கும் சென்று பால் சொரிந்து

நாட்டு மக்களை உண்பித்தது. அதன் செயலை யெல்லாம் கண்டறிந்த, காலம் மூன்றும் உணர வல்லவனாகிய அம் முனிவன் 'அதன் வயிற்றினிடத்துத் தோன்றும் பொன் முட்டையிலேயே மஃழை வளம் சுரப்பவும் மன்னுயிர் ஓம்பவும், உயிர்க் காவலன் ஒருவன் வந்து தோன்று வன்,' என்று கூறினான். அவன் கூறியபடியே நல்ல தொரு நாளிலே ஆபுத்திரன் அப்பசு வயிற்றில் பிறந் தான்.

நோயின்றியும் கூட, 'அறமாற்ற வழியில்லையே; இறந்து வேறிடத்துப் பிறந்தாயினும் அறஞ் செய் வோம்' என்ற செம்மை உள்ளத்தோடு மணிபல்லவத் தில் இறந்த ஆபுத்திரன் பிறந்த நாள் வைகாசி மாத நிறைமதி நாளாகும். அவன் பிறந்த நாளை

'இருது இளவேனில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் மூன்றும் சென்றபின்
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்
போதித் தலைவனோடு பொருந்தித் தோன்றும்'

நாள் என்று கூறுகின்றார் சாத்தனார். அவர் பிறந்த நாளில் நாட்டில் பல நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன.

புத்ததேவன் பிறக்கும் காலத்தில் நிகழ்ந்த நிமித் தங்கள் அவையென்று அறிந்த சக்கரவாள கோட்டத் தில் வாழும் தவசிகள் என்னகாரணமோ இவ்வேதுக் களுக்கு என்று எண்ணியிருந்தனர். 'மண்ணக மெல் லாம் மாரி யின்றியும், புண்ணிய நன்னீர் போதொடு சொரிந்த' அந்த அற்புதத்தை அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கையில், அவர்களுக்கு அண்மையிலிருந்த கந்திற்பாவை நிகழ்ந்ததை உரைத்தது. மணிபல்ல

வத்தில் 'மன்னுயிர் நீத்த ஆபுத்திரன் சாவக நாட்டில் பிறந்ததன் அறிகுறி யிவைகள் ; அவனைப் பற்றி அற வண அடிகளிடம் கேட்டறியுங்கள்' என்று கூறிற்று. அவர்களும் அவ்வாறே அறவணரைச் சார்ந்து அனைத் தும் அறிந்தனர்.

பிறந்த ஆபுத்திரன் பெருமையை அறிந்த அச் சாவக நாட்டை ஆண்ட மன்னனான பூமிசந்திரன் என் பவன் மண்முக முனிவனிடம் வந்து அவனடி வீழ்ந்து வணங்கி, தனக்கு மகப்பேறில்லாமையை எடுத்து விளக்கி, அந்த ஆபுத்திரனைத் தனக்கு மகனாக அளிக்க வேண்டினன். முனிவனும் இளையோன் அரசாளத் தகுதியும் அமைப்பும் உடையவன் என்பதை அறிந்த வன் ஆதலின், அவ்வாறே அரசனிடம் ஒப்படைத்தான். அவன் பின்னர் அரசனாகிச் சாவக நாட்டை ஆள்கிறான் என்று ஆபுத்திரன் வரலாற்றை அப்படியே எடுத்துக் கூறினார் அறவணவடிகள். பின்னர் அப்போது காவிரி வளம் சுரக்கும் நாட்டிலும், பஞ்சம் தலையெடுத் துள்ள தால் உயிர்கள் வருந்தும் வருத்தத்தைக் கூறி, பய னுள்ள பாத்திரத்தை அப்போதே பயன் படுத்தவேண் டும் என்பதையும் எடுத்துக்காட்டி மன்பதையின் துயர் நீக்கவும் ஆணையிட்டார். அனைத்தும் அறிந்த மணிமேகலை அவ் வறவண வடிகளைப் போற்றி வணங்கி அவர் ஆணை வழியே ஆருயிர் மருந்தாகிய உணவினை அனைவருக்கும் வாரி வழங்கப் புறப் பட்டாள்.

## பிக்குணிக் கோலம்

அமுத சுரபியைக் கையிலேந்திய மணிமேகலை அப் புகார் நகரின் தெருவு தொறும் பிச்சை ஏற்கப் புகுந்

தாள். ஆம்! அனைவருக்கும் வற்றாது வாரி வழங்கும் அப்பாத்திரம் மணிமேகலை கையை அடையும்போது காலியாக உணவற்றிருந்தது. ஆகவே அதில் எடுத் துக் கொடுக்க ஒன்றும் இல்லை. எனினும் நல்லறஞ் செய்யும் தூய உள்ளமும் நற்சொல்லும் நற்பண்பும் நிறைந்த மங்கை நல்லாள் 'நாடு வாழ்க' என்று வாழ்த்தி அதில் பிச்சை இடுவாளாயின் பின்னர் அது எடுக்கக் குறையாது பெருகிக் கொண்டிருக்கும் போலும். இதை அறிந்த அறப்பெருஞ் செல்வி மணிமேகலை அம்மாநகர்த் தெருவு தோறும் நல்லார் அளிக்கும் பிச்சையேற்பதற் காகப் பிக்குணிக் கோலத்தோடு சுற்றி வருவாளானாள்.

மணிமேகலை பிக்குணிக் கோலத்தோடு கையில் பிச் சைப் பாத்திரத்தை ஏந்தி அந்நகர்த் தெருவு தொறும் செல்லும் காலை அவளைக் கண்ட மக்கள் கருத்தழிந் தனர். அரச குமாரனாகிய உதய குமரன் கண்டு விரும் பிய இவள்—அவன் உள்ளக் கோயிலில் குடிகொண் டிருக்கும் இவள்—இப்படிப் பிச்சை எடுக்கின்றாளே என்று பேசி வியப்பெய்தினர். அவர்கள் கூறியதை ஒன்றும் செவியில் ஏற்றுக் கொள்ளாது, மணிமேகலை 'இப்பிச்சைப் பாத்திரத்தில் கற்புடை மாதர் இடும் பிச் சையை ஏற்றுக் கொள்வேன்' -என்று சொல்லிக் கொண்டே தெருவில் நடந்தாள். அப்போது காய சண்டிகை என்னும் கந்தருவமாது ஒருத்தி அவள் முன் வந்து நின்றாள். நின்று 'வான்தரு கற்பின் மனையுறை மகளிரில், தான் தனி ஓங்கிய தகைமைய ளன்றே, ஆதிரை நல்லாள்' என்று கூறி, மணிமேகலையை அவ ளிடம் சென்று பிச்சை ஏற்குமாறு கேட்டுக்கொண் டாள்.

## ஆதிரை வரலாறு

ஆதிரையைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள விரும்பினாள் மணிமேகலை. அதை அறிந்த விஞ்சை மகளாகிய காயசண்டிகை அவள் வரலாற்றையும் சிறப்பையும் சொல்லுவாளானாள். 'ஆதிரை என்பாள் சிறந்த கற்புடையவள். அவள் கற்பினை உலகம் அறிந்து போற்றக் கூடிய ஒரு செயல் நிகழ்ந்தது. அவள் கணவனாகிய சாதுவன் என்பான் தீநட்புடையனாகி, கணிகை ஒருத்தியொடு வாழ்ந்து, பெற்ற செல்வத்தை யெல்லாம் இழந்து விட்டனன். அக்கணிகையும் அவன் பொருளற்றவன் என்ற காரணத்தால் புறக்கணித்தாள். அவன் மனம் வருந்தி, அக்காலத்தில் புறப்பட்ட ஒரு கப்பலில் செல்லும் வணிகர்களோடு தானும் புறப்பட்டுச் சென்று பொருள் சம்பாதித்துத் திரும்பி வருதற்கு நினைத்து புறப்பட்டான். ஆனால் ஏறிச் சென்ற கப்பல் நடுக்கடலில் நாசமுற்று அழிந்தது.

அழிந்த கப்பலில் தங்கிய பலரும் மாய்ந்தனர். சாதுவன் அருகே உள்ள ஒடிந்த மரம் ஒன்றைப் பற்றி ஊர்ந்து சென்று, உடைந்த அந்த இடத்தின் அருகிலுள்ள நாகர் வாழ் நாட்டைச் சேர்ந்தான். அக்கப்பலி லிருந்து வேறு முயற்சிகளால் தப்பியவர்கள் திரும்பி நாடு வந்து, கப்பல் அழிவுற்றதையும் சாதுவன் உள்ளிட்ட பலரும் அழிந்ததையும் கூறினர். அதுகேட்ட இவ்வாதிரை நல்லாள் மிகவும் வருந்திச் சுற்றத்தார் அனைவரையும் அழைத்துத் தான் மேலும் உயிர் வாழ விரும்பாத் தன்மை கூறித் தீ வளர்த்தச் சொல்லி அதில் வீழ்ந்து இறக்கப் போவதாகவும் கூறினள். அவள் சுற்றத்தாரும் அவ்வாறே தீ வளர்த்

Roja Muthiah Research Library
3rd Cross Road, CPT Campus
Taramani, Chennai - 600 113

தனர். அவள் தீப்புகும் சிறப்பினைக் காண நகரமக்கள் ஒரு சேரக் கூடி விட்டனர். ஆதிரை தூய நீரில் மூழ்கி, 'கணவன் சென்றவழித் தானும் செல்வேன்' என்று கூறிக் கொண்டு, அத்தீயிடைப் புகுந்தாள்.

தீயிடைப் புகுந்த செல்வியை அங்கியங்கடவுள் ஒன்றும் செய்யவில்லை. அவள் ஆடை தீப்பிடிக்க வில்லை. வெம்மை அவளை வருத்தவில்லை. சூடிய மலர் மாலைகள் தீய்ந்து கருகவில்லை. 'விரைமலர்த் தாமரை யொருதனி இருந்த, திருவின் செய்யோள் போன்று' சிறக்க இருந்தாள். எனினும் அவள் உள்ளம் சுட்டது. 'ஐயோ, தீயும் கொல்லாத் தீவினை யாட்டியேன், யாது செய்வேன்' என்று கூறி ஏங்கினாள். அதே வேளையில் வானிலிருந்து ஒரு ஓசை வந்தது. அனைவரும் வியந் தனர். அது சாதுவன் இறக்கவில்லை என்றும், நாகர் மலையில் நலமே இருக்கிறான் என்றும், சில ஆண்டுகளில் அப்பக்கம் செல்லும் சந்திரதத்தன் என்னும் வணிகனின் கப்பல் மூலம் வீடு வந்து சேர்வானென்றும், அதுவரை ஆதிரை ஆற்றியிருக்க வேண்டும் என்றும் கூறிற்று. அதுகேட்ட அனைவரும் மகிழ்ந்தனர். ஆதிரையோ நெருப்பை விட்டு, 'பொய்கை புக்கு ஆடிப் போதுவாள் போன்று' வெளிவந்து வீடுசென்று கணவன் வரும் நாளை நோக்கிக்கொண்டிருந்தாள்.

**நாகர் மலையில் சாதுவன்**

இனி நாகர் மலையில் சாதுவன் என் ஆனான் என்பதைக் காணல் வேண்டும். கடலில் நீந்திக் கரையை அடைந்ததும், வந்த அயர்ச்சி மிகுதியால் அப்படியே ஒருமர நிழலில் படுத்து உறங்கிவிட்டான். அப்போது அந்த மலையில் வாழ்கின்ற நாகர் பலர் அவனைச் சுற்றிச்

சூழ்ந்து கொண்டார்கள். அவனைக் கண்டு அவன் தவறி வந்த தனியன் என உணர்ந்தனர். 'அவன் உடல் நல்ல உணவாகும் என்று' கூறி அவனை எழுப்பினர். ஆனால் அச் சாதுவன் அவர்கள் பேசும் மொழியை நன்கு அறிவான் ஆதலின் அவர்களோடு பேசி அவர்கள் எண்ணத்தை மாற்றினான். அவர்கள் தங்கள் குரு மகன் ஓரிடத்துள்ளான் என்றும், அவனை வந்து காணவேண்டுமென்றும் அழைத்தார்கள். அவனும் அவர்களோடு சென்று குருமகனைக் கண்டான்.

குருமகன் கொலைமகனே என்னுமாறு வீற்றிருந்தான். சுற்றிலும் கள்ளடு குழிசியும், கழிமுடை நாற்றமும், வெள்ளென்பு உணங்கலும் நிறைய இருந்தன. அவற்றின் நடுவில் ஒரு பெண்ணோடு கரடியைப் போன்று அவன் உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டு சாதுவனும் அவனுடன் அவன் மொழியில் பல பேசினான். அதைக் கேட்ட தலைவன் அவனை அங்கு வந்த காரணம் என்ன என்று கேட்டான். சாதுவன் தான் கப்பல் உடைந்து கரை சேர்ந்ததைக் கூறினான். அதுகேட்ட தலைவன்

'வருந்தினன் அளியன் வம்மின் மக்காள்
நம்பிக்கு இளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களும் ஊனும் வேண்டுவ கொடும்.'

என்று ஆணையிட்டான். அதுகேட்ட சாதுவன் நடு நடுங்கினான். 'அவை ஒன்றும் தனக்கு வேண்டாம்' என்றான். தலைவனோ 'பெண்டிரும் உண்டியும் இன்றெனில் மாக்கட்கு ஞாலத்து உறுபயன் உண்டோ?' என்று கேட்டான். சாதுவன் அவற்றை யெல்லாம்

அறிவுடை மக்கள் வேண்டாம் என்று ஒதுக்கி நல்லறம் புரிந்து நல்லுலகடைந்த வரலாற்றை எல்லாம் கூறினான்.

'மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்
நல்லறம் செய்வோர் நல்லுலகு அடைதலும்
அல்லறம் செய்வோர் அருநரகு அடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்
கண்டனை யா'

வென்று சாதுவன் விளக்கினான்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நாகர் வியந்தனர். தலைவன் வியப்புற்று மேலும் சில அறிந்து கொள்ள விரும்பினான். உடலைவிட்டுச் செல்லும் உயிர் மேலும் பிறிதோரிடம் செல்லும் என்று சாதுவன் கூறியதை நன்கு விளக்கமாக அறிய விரும்பினான். அது எவ்வாறு எங்கு செல்லும் என்று கேட்டான். அதை ஏதுக்கள் மூலம் எடுத்துக்காட்டி அறம் உணர்த்தினான் சாதுவன்.

அறமுணர்ந்த நாகர் தலைவன் மேலும் சாதுவனைப் போற்றி, அவன் முன்னே வந்த வணிகர்களிடம் கவர்ந்த பொருள்களையெல்லாம் கொண்டு வந்து வைத்து, கொள்க என்று வேண்டிக் கொண்டான். பின்னர் சந்திரதத்தன் என்னும் வணிகனது கப்பல் அங்கு வர, அதில் சாதுவனை ஏற்றித் தான், உணர்ந்த அறம் தவறாது என்றும் வாழ்வதாக வாக்களித்து,

பொன்னும் பிறவும் கொடுத்து, 'சென்றுவருக' என்று வழியனுப்பினான். சாதுவன் அனைத்தையும் ஏற்றுக் கொண்டு இந்நகர் வந்து தன் மனைவியொடு கலந்து மகிழ்ந்து வாழ்வானாயினான். கணவனும் மனைவியும் கலந்து இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்து வருகின்றார்கள். அத்தகைய அரும்பெருங் கற்புடைப் பெண்ணாகிய ஆதிரை, தன் கையால் அமுத சுரபியில் சோறிட வேண்டும், என்றாள் காயசண்டிகை.

ஆதிரையின் சிறப்பறிந்த மணிமேகலை அச் செல்வி வாழும் மாளிகையின் தலைவாயிலில் சென்று எழுதாத ஓவியம் போன்று அசையாது நின்றனள். அவள் நிற்பதை அறிந்த ஆதிரை நல்லாள் அவளைத் தொழுது வலம்கொண்டு, நாட்டில் துயர்கெட, பசிப்பிணி அற, அமுத சுரபி நிறைதர, 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுவதாக' என்று சொல்லி **ஆருயிர் மருந்தாகிய** உணவினை இட்டாள். நாடு நலம் பெற்றது.

# பற்றும் பழியும்

## காயசண்டிகை வரலாறு

ஆதிரை நல்லாள் இட்ட பிச்சையினை ஏற்ற அமுதசுரபி, எடுக்க எடுக்கக் குறையாத வகையில் உணவினைப் பெருக்கிற்று. மணிமேகலையும் மகிழ்ச்சி கொண்டவளாகி, அனைவருக்கும் வாரி வாரி உண வளித்தாள். அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அற வோன், திறத்து வழிப்படும் செல்கைபோல், அவ்வமுத சுரபி அறப்பெருஞ் செல்வியாகிய மணிமேகலையின் கையகம் பொருந்தி, நன்கு பயன் தந்தது. வற்றாப் பாத்திரத்தைக் கண்ட காயசண்டிகை மகிழ்ந்து, தன் யானைத்தீ யென்னும் பசிப் பிணி நீங்குமென்று கருதி, தான் பெரும்பசி யுற்று வருந்தியதைக் கூறி உணவு கேட்டனள். மணிமேகலையும் மகிழ்வுடன் அளிக்க, இட்டசோறு அக் காயசண்டிகையின் நெடுநாளைய கொடும் பசிப்பிணியை நீக்கிற்று.

பசிப்பிணி நீங்கிய காய சண்டிகை தன் வரலாற் றை மணிமேகலைக்குக் கூறுவாளானாள். வடதிசைக் கண்ணுள்ள விஞ்சையர் உலகில் உள்ளது வித்தியா புரம் என்ற ஊர். அந்த ஊரில் பிறந்து வளர்ந்தவள் அவள். அவளும் அவள் கணவனும் தெற்கேயுள்ள பொதிய மலையின் எழிலை யெல்லாம் கண்டு களிக்கத் தெற்கு நோக்கி வந்தனர். அவ்வாறு புறப்பட்டு வந்த போது, வழியில் ஒரு சிற்றாற்றின் கரையிடத்து அவ ளும் அவள் கணவனும் தங்கினர். அவர்கள் தங்கிய இடத்துக்குப் பக்கத்தில் அங்கு தவம் செய்துகொண் டிருந்த விருச்சிகன் என்னும் முனிவன் தான் உண்பதற்

கெனப் பழுத்த நாவற்கனி ஒன்றை ஒரு தேக்கிலையில் வைத்துவிட்டு நீராடச் சென்றான். அவள் அறியாமையால் நடக்கும்போது தவறிக் காலால் மிதித்து அக்கனியைச் சிதைத்து விட்டாள்.

நீராடிவந்த விருச்சிக முனிவன் தன் உணவாகிய கனி சிதைந்திருப்பதைக் கண்டு வயாவும் வருத்தமுமுற்று, கோபங்கொண்டு அவளைச் சபித்தான். அக்கனி பன்னிரண்டாண்டுக்கு ஒரு முறை பழுப்பதென்றும், தான் பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை உணவு கொண்டு யோகம் புரிபவனென்றும், அக்கனியை உண்டால் பன்னீராண்டு பசியே தெரியாதென்றும் கூறி, அப்பழம் சிதையுண்டமையின் அடுத்த பன்னிரண்டு ஆண்டும் தான் பசியோடு இருக்க வேண்டுமென்றும், அதுவரை அக்காயசண்டிகையும் யானைத்தீ யெனும் பசிநோயால் வருந்தவேண்டும் எனவும் சபித்தான். பன்னிரண்டாண்டுகள் கழித்து மறுபடியும் தான் அக்கனியினை உண்ணும்போது அவளும் அந்நோய் நீங்கப் பெறுவாள் என்று சாப நீக்கமும் செய்தருளினான். அத்துடன் அவள் விஞ்சையளாதலால் ஆகாயவழியே பறந்து செல்ல அவள் கற்றிருந்த அந்த மந்திரமும் அவளுக்குப் பயன்படாது போக ஆணையிட்டான். அது முதல் ஆனைத்தீ அவளைப் பற்றியது. அவள் கணவன் சிறந்த கனிகள் பலவற்றைக் கொண்டு வந்து கொடுத்தும் அவள் பசி நீங்கப் பெற்றாள் இல்லை. வான் வழிப்பறந்து செல்ல முயன்றபோது, அவள் கற்ற மந்திரமும் அவளுக்குப் பயன்படவில்லை. அது கண்ட கணவன்,

'சம்புத் தீவினுள் தமிழக மருங்கின்
கம்ப மில்லாக் கழிபெருஞ் செல்வர்
ஆற்ரு மாக்கட்கு ஆற்றும் துணையாகி
நோற்ருேர் உறையும்'

காவிரிப்பூம் பட்டினத்தில் அவளைச் சென்று தங்கு மாறு பணித்தான். அங்கு பன்னிரண்டு ஆண்டுகள் இருப்பின், பின் அந்நோய் நீங்கப் பெறுமென்றும் பின்னர் தன்னை வந்து அடையலாம் என்றும் அவள் கணவன் கூறி அவளை விட்டு, விண் வழிச் சென்ருன். அது முதல் ஆண்டுதோறும் நடைபெறும் இந்திர விழா விற்கு அவள் கணவன் வரும்போது கண்டு செல்வான். அம்முனிவன் கனி உணவுண்ணும் நாள் அந்நாள் போலும். ஆண்டுகள் பன்னிரண்டு அகன்றிருக்கும். அதனுற்ருன் அவள் பசிப்பிணி அற்றவளானுள்.

**உலக அறவியல்**

இவ்வாறு காயசண்டிகை தன் வரலாற்றை மணிமேகலைக்கு எடுத்துரைத்தாள். மேலும் அவ்வூரில் உள்ள சக்கரவாள கோட்டத்தில் யாரும் எப்போதும் வந்து தங்குவதற்கென, என்றும் திறந்துள்ள 'உலக அறவி' என்ற ஓர் இடம் உண்டென்றும், அதில் ஊர் தொறும் பசிப்பிணியால் உழன்று, தீர்க்கவகையற்ற மக்கள் பலர் வந்திருக்கின்ருர்கள் என்றும், அங்கு மணிமேகலை சென்று அவர்தம் பசியை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். பின்னர் அக்காய சண்டிகை மணிமேகலையை வணங்கித் தன் நாட்டுக்குச் செல்வதற்கு விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

விஞ்சை மகள் நீங்கிய பிறகு மணிமேகலை தெரு விடை ஒரு புறமாக ஒதுங்கிச் சென்று உலக அறவியை அடைந்தாள். அடைந்து அதை மும்முறை வலம்வந்து வந்தனை செய்து, அதில் கால் வைத்து ஏறி அங்கு கோயில் கொண்டுள்ள சம்பாபதி என்னும் தெய்வத்தையும், தனக்கு முன் வழிகாட்டிய அந்தக் கந்திற் பாவையையும் பலமுறை வணங்கினாள். பின்னர் கொடும் கானகத்து வெயில் வருத்தப் பசியால் பட்டு வாடும் மக்களுக்கு மழை போன்று, ஆண்டு வருந்தும் மக்கள் முன் தோன்றி,

> ' ஆபுத்திரன் கை அமுதசுரபி யிது
> யாவரும் வருக ஏற்போர் தாம் '

என அனைவரையும் அருகழைத்து, அவர்தம் பசி நீங்குமளவும் தன் வற்றுப் பாத்திரத்திலிருந்து வாரி வாரி அனைவருக்கும் உணவளித்து வருவாளானாள். அவள் அறநிலையை ஊராரும் நாட்டு மக்களும் ஒரு சேர அறிந்து போற்றுவாராயினர்.

### சித்திராபதியின் சீற்றம்

மணிமேகலை பிக்குணிக் கோலம் கொண்டு, உலக அறவியேறி அமுதசுரபியைத் தாங்கி அனைவருக்கும் உணவளிக்கிறாள் என்ற செய்தியைச் சித்திரபதியாகிய அவளுடைய பாட்டி அறிந்தாள். அறிந்து மிகவும் வருத்த முற்றாள். அழகுத் தெய்வமாகத் திகழ வேண்டியவளாகிய மணிமேகலை இப்படிப் பாழாகி விட்டாளே என்று மணிமேகலையை நொந்து கொண்டாள். ' எப்படியாவது முயன்று உதய குமரனிடம் சொல்லி, மணிமேகலையைப் பரத்தமை வாழ்வுக்குப்

பற்றி வருவேன்' என்று சூளுரைத்தாள். அருகே இருந்த நாடகக் கணிகையரை யெல்லாம் நோக்கினாள். பின் பேசினாள்.

'கோவலன் இறந்தால் மாதவி இப்படியா மாறிப் பிக்குணிக் கோலம் கொள்ள வேண்டும். இது நம் குலத்துக்கு அடுக்கும் செயலன்றே! இது நகைப்புக்கு இடமாகிய ஒன்றாகும். நாம் கணவனோடு இறக்கும் கற்புடை மகளி ரல்லோம். பாணன் இறந்தும் அவனோடு இறவாத யாழ் போல்வோம். தேனை உண்டு வறிதாக்கிய பின் மலரை விட்டுப் பிரியும் வண்டு போல்வம் தான் கெட்டதோடன்றி, தன் மகள் மணிமேகலையையும் இவ்வாறு பாழ்படுத்திவிட்டாள் மாதவி. நான் உதய குமரன் மூலம் அவளது பிக்குணிக் கோலத்தைமாற்றி, அவனோடு தேரில் ஏறி வரும்படி செய்வேன், என்று கூறினாள் சித்திராபதி.

**உதய குமரன் மனமாற்றம்**

உதய குமரன் முதலில் மணிமேகலையை விரும்பினான் ஆயினும், பின்னர் மணிமேகலா தெய்வம் உணர்த்திய நெறியாலும், மணிமேகலை துறவொழுக்கம் தெய்வத் தன்மை ஆகியவற்றை அறிந்தமையாலும் ஒருவாறு அவளை மறந்தே இருந்தான். அவனைக் கொண்டு தன் காரியத்தை முடிக்கச் சூள் செய்த சித்திராபதி தெருவெலாம் கடந்து அவன் இருக்குமிடத்தை நாடி வந்தடைந்தாள். அவன் தன் அரண்மனையில் அழகு பொருந்த வீற்றிருந்தான். அவனைக் கண்டு வணங்கித் தான் வந்த காரணத்தைச் சித்திராபதி எடுத்துக் கூறினள். அழகார் செல்வியாகிய மணிமேகலை அம்பலத்துள்ளாள் என்றும், உதய குமரன் விரைந்து சென்றால்

பற்றலாம் என்றும் எடுத்துரைத்தாள். ஆனால், அவன் முன்னர் பளிக்கறையில் அவளைக் கண்டு காமுற்றதையும், பின் கையகப் படுத்த முடியாது திரும்பியதையும், பின்னர்க் கனவிடைத் தோன்றி ஓர்தெய்வம் அவள் செம்மையை எடுத்துணர்த்தியதையும், அச்சத்தோடு கூறினான். அது கேட்ட சித்திராபதி நகைத்து முன் னாட்களில் பெண்டிர் வயப்பட்ட சிறந்தவர்களைப் பற்றியெல்லாம் கூறி, உதய குமரனைப் போன்ற காளையர் மணிமேகலை போன்ற கன்னியரை அடைதல் கடன் என்றும் வற்புறுத்தினாள். உதயகுமரன் உள்ளமும் அவன் ஊழ்வினை வசத்தால் தளர்ந்தது.

அம்பலம் புகுதல்

மனம் மாறிய அரசமைந்தன் சித்திராபதியைச் செல்க என்று அனுப்பித் தான் உடனே மேகலையைக் கொண்டு வருவதாகக் கூறித் தேரேறிப் புறப்பட்டான். விரைந்து மணிமேகலை தங்கியிருந்த-உணவினை வாரி அளிக்கும்-அந்த அம்பலத்தை அடைந்தான். அடைந்து, பிக்குணிக் கோலத்தோடு, பிறர்க்கு உணவளிக்கும் செல்வியைக் குறுகி,

‘உடம்போடு என்தன் உள்ளகம் புகுந்தென்
நெஞ்சம் கவர்ந்த வஞ்சக் கள்வி
நோற்றான் வாழ்க்கையின் நொசிதவம் தாங்கி
யேற்று ஊன் விரும்பின காரணம் என்?’

என்று கேட்க விரைந்து அவ்வாறே அவள் அருகே சென்று கேட்பானாயினான். உதய குமரனை எதிரில் கண்ட காரிகை முன்பிறப்பின் தன் கணவனாயிருந்த இராகுலன் இவனே என்று அறிந்த காரணத்தாலே

அருகே சென்று அவனை வீழ்ந்து வணங்கினள். வணங்கித் தான் துறவு பூண்ட காரணத்தையும் உரைப் பாளாயினள்.

'பிறத்தலும் மூத்தலும் பிணிபட்டு இரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்'

என்று உரைப்பாளாயினள்.

**மணிமேகலையின் மாற்று வேடம்**

இவ்வாறு அவனுக்குத் தன் துறவு நிலையின் காரணத்தை எடுத்துக் காட்டிய மணிமேகலை விரைந்து அருகிலுள்ள சம்பாபதிக் கோயிலுள்ளே புகுந்தாள். அங்கு சம்பாபதியை வணங்கி, ஆடவர் திறம் அறியாக் காரணத்தால், உதயகுமரன் எதுவும் செய்யக்கூடும் என்று அஞ்சினவளாகி, தான் கற்ற மாற்றுருக் கொள் ளும் மந்திரத்தால் காயசண்டிகையின் வடிவினைப் பெற்று, பாத்திரம் ஏந்தி, மறுபடியும் வெளிவந்து அனைவருக்கும் சோறு அளிப்பாளாயினள். அது கண்ட உதய குமரன் வருந்தி மணிமேகலை சம்பாபதிக் கோயி லுள்ளேயே ஒளித்துக் கொண்டாள் என்று கருதிய வனாகி, அங்கு கோயினுள் புகுந்து அத் தெய்வத்தை வணங்கி மணிமேகலையைப் பற்றிக் கேட்பானாயினன். தன் பிச்சைப் பாத்திரத்தைக் காயசண்டிகையின் கையிற் கொடுத்து, மணிமேகலை உள்ளே எங்கே ஒளித் துக் கொண்டாள் என்றான். அவளை அவ்வுள் ளிடத்து எங்கே கண்டு தேடுவது என்று வருந்தினான்.

அவளைக் காட்டித் தருமாறு தெய்வத்தை வேண்டி ஞன். மேலும் எத்தனை நாளாயினும் அவளைக் கண்டு கைப்பற்றி உடன் தேரேற்றிக்கொண்டு அல்லால் அவ் விடத்தை விட்டுச் செல்ல மாட்டாத ஒரு பெரும் சூளு ரையும் மேற்கொண்டான். வஞ்சினம் கூறி அத்தெய் வத்தை மும்முறை வலம் கொண்டு பணிந்தான். அப் போது அங்குள்ள ஒரு தெய்வம் அவனை நோக்கி, அவன் அறியாது சூள் உரைத்தான் என்றும், அவனால் அச்செயல் ஆற்றமுடியா தென்றும் எடுத்து விளக் கிற்று. இவற்றைக் கேட்ட உதய குமரன் எல்லாம் ஓரே வியப்பாக உள்ளதை உற்று அறிந்து, மேலும் அவள் திறம் அறிந்து கொண்டு அச்செயலை மேற் கொள்ளவேண்டும் என்று எண்ணினவனாய் அவளை விட்டு அகன்றான்.

**அரசன் அறிந்தான்**

உதயகுமரன் அம்பலம் விட்டுச் சென்றான் என் பதை அறிந்த மணிமேகலை அச்சம் அகன்றவளானாள். மேலும் தன் இயற்கை வடிவோடு சென்றால் உதய குமரன் தன்னைப் பற்றப் பலவகையில் முயல்வான் என்று கருதினவளாகி அக்காயசண்டிகையின் வடிவை மாற்றாமலே அப்படியே தெருவு தோறும் சென்று ஆற்றா மக்கட்கு அமுத சுரபியிலிருந்து உணவளித்து வந்தாள். நகர தெருக்கள் பலவினும் சென்று அழிபசி யால் வாடினவர் வருத்தம் தீர்ந்த பின், அவள் ஊரில் உள்ள சிறைக் கோட்டம் சென்று சேர்ந்தாள். சிறை யிடை வாடிய மக்களுக்கெல்லாம் அவர் தம் வருத்தம் நீங்க நல்லுணவு ஈந்தாள். ஒரு பாத்திரத்திலிருந்து வற்றாமல் உணவினை எடுத்து அனைவருக்கும் அளித்த

லையும், அவர்கள் அதை உண்டு மகிழ்வதையும் கண்ட காவலர், தாம் கண்டவற்றை அரசனுக்கு அறிவிக்கச் சென்றனர்.

## அரசன் திருவோலக்கம்

சோழன் மாவண்கிள்ளி யென்னும் மன்னன் தன் கோப்பெருந்தேவி யோடு சோலைவளம் காண அழகிய பூம் பொழில் புகுந்தான். பூம் பொழிற் சோலையிலே அவன் கண்ட காட்சிகள் பலப்பல. எத்தனையோ வகையில் சிறந்த இயற்கை வளங்கள் நிறைந்த அம் மலர்ச் சோலையில் மகிழ்ந்து அரசியோடு சுற்றி வந்தான் சோழன். பின்னர் அரசியல் அரங்கில் ஆடுகள மகளிரும், பாடுகள மகளிரும் ஆடியும் பாடியும் அரசனுக்கு மகிழ்ச்சியை விளைவித்தனர். அப்பெருஞ் சோலையினிடத்து அரசனோடு வந்து நகர மக்கள் பலரும் சுற்றிச் சுற்றிப் பல்வேறு வகையில் ஆடலும் பாடலும் இயற்றி மகிழ்ச்சிக் கடலுள் மூழ்கி இருந்தனர். மன்னனும் பல்வேறு வகைப் பாடல் ஆடல்களிலும் கலந்து, மகிழ்ந்து, பின்னர் அழகிய மணி மண்டபத்துக் கால் வைத்தேறினன்.

இவ்வாறு சிறக்க விற்றிருந்த செந்தமிழ் வேந்தன் முன்பு, சிறை கோட்டத்திலிருந்து வந்த காவலர் 'ஒளியொடு வாழி ஊழிதோ றூழி, என்று வாழ்த்தி மணிமேகலை சிறைக் கோட்டத்தில் சோறளிக்கும் சிறப்பினை எடுத்துக் கூறினர். அது கேட்ட அரசன் வியந்து, 'அம் மடக் கொடியை அழைத்து வருக' என்று ஆணை தந்தனன். அவன் வாய்மொழிப் படி காவலர் சென்று மணிமேகலையை அழைத்துச் சென்று மன்னவன் முன்னர் நிறுத்தினர். அவளைக் கண்ட அரசன் 'யார்' என

வினவினன். மணிமேகலை தான் காய சண்டிகை வடிவோடு இருந்ததால் தன்னை ஒரு விஞ்சை மகள் என்று கூறிக் கொண்டு அரசனை வாழ்த்தி அமுத சுரபி அங்கே கோயிலுள்ள ஒரு தெய்வம் தந்தது என்று கூறி, அப் பாத்திரம் யானைத்தீயெனும் நோயைப் போக்கியதையும் வற்ரு வளமுடைய தன்மையையும் எடுத்துரைத்தாள். அவற்றைக் கேட்ட மன்னன் தான் அவள் பொருட்டு ஏதேனும் செய்ய வேண்டுமோ என்று வினவினன். தனக் கென வாழாத் தன்மையளான மணிமேகலை சிறைக் கோட்டத்தைத் திருத்தி, அனைவரையும் விடுவித்து அக்கோட்டத்தை அறக் கோட்டமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். அரசனும் அவள் வாய் மொழியேற்று விரைந்து சிறையைச் செப்பனிடு செய்து, அறவோர் வாழும் அரும் பள்ளியாக மாற்றினன். சிறைச்சாலை அறச்சாலையாக விளங்கிற்று.

**மீண்டும் உதயகுமரன்**

தன் தந்தையாகிய சோழ வேந்தன் அவைக் களத்தே மணிமேகலை வந்து சென்றதையும், அவள் வாய்மொழிப்படியே அரசன் சிறைக் கோட்டத்தை அறக்கோட்ட மாக்கியதையும், பிற செயல்களையும் உதயகுமரன் கேட்டறிந்தான். எப்படியும் மணிமேகலையைப் பற்றிக் கொண்டுவர வேண்டும் என்று முடிவு செய்தான். 'மதியோர் எள்ளினும், மன்னவன் காயினும் அதற்காகக் கவலாது, அவள் அம்பலம் நீங்கி வரும்போது, அவளைப் பற்றித் தேரேற்றி வந்து, அவள் விஞ்சையைப்பற்றி யெல்லாம் அவள் வாய்மொழியாலேயே கேட்டறிவேன்' என்று கூறித் தேர் ஏறிப் புறப்பட்டான். புறப்பட்டவன் உலக அறவியைச் சென்று சேர்ந்தான்.

**காஞ்சனன் வருகை**

ஏறக்குறைய அதே வேளையில் காஞ்சனன் என்ற விஞ்சையன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் யார்? எதற்காக வந்தான்? ஆம். அவன்தான் காயசண்டிகையின் கணவன். யானைத் தீ யென்னும் நோயினைப் பெற்று அவள் வருந்திய காலத்து, காவிரிப்பூம்பட்டினம் செல்க என்று பணித்து, ஆண்டுதோறும் நடைபெறும் இந்திர விழாவிலே வந்து கண்டு சென்ற அந்த விஞ்சையன் தான் காஞ்சனன். தன் மனைவி பன்னிரண்டாண்டு கழிந்ததும், நோய் நீங்கப் பெற்ற பின், தன்னிடம் வந்து சேர்வாள் என்று நினைத்திருந்தான் அவன். ஆண்டுகள் பன்னிரண்டாயினும் அவள் வராதிருக்கவே தானே நேரில் புறப்பட்டு அவளைக் காணக் காவிரிப்பூம்பட்டினம் வந்து சேர்ந்தான். அவ்வூரில் 'பூத சதுக்கமும் பூ மலர்ச்சோலையும், மாதவர் இடங்களும் மன்றமும் பொதியிலும்' எங்கும் தன் மனைவியைத் தேடினான். அவளைக் காணவில்லை. இறுதியில் காயசண்டிகை வடிவில் கையில் ஏந்திய பாத்திரத்தோடு அனைவர்தம் பசிப்பிணியையும் நீக்கி நிற்கும் மணிமேகலையைக் கண்டு அவளே காயசண்டிகை என முடிவு செய்துவிட்டான். உடனே மணிமேகலை அருகு சென்று அவளைப் பலவாறு புகழலானான். அவளது வருத்தம் அறிந்த தேவர்கள் அப்பாத்திரத்தை அவளுக்குக் கொடுத்தார்களோ என வியந்தான். மணிமேகலையோ அவனை அறியாளாகையால் அவனிடம் ஒன்றும் பேசவில்லை. தன்னை நோக்கிப் பேசாத காயசண்டிகையின் வடிவிலுள்ள மணிமேகலையை மேலும் பற்பல காதல் வார்த்தைகள் புகன்றும், பழைய வாழ்

வை நினைவூட்டியும் தன் பக்கல் திருப்ப முயன்றான். மணிமேகலையோ அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, அப்போதுதான் அங்கு வந்த உதயகுமரன் பால் விரைந்து சென்றாள். சென்றவள் அவன் காமக் குறிப்பொடு வந்திருக்கின்றான் என்பதை அறிந்து, இளமையும் யாக்கையும் நிலையாதென்பதை நரைமூதாட்டி ஒருத்தியைக் காட்டி எடுத்துரைத்தாள்.

**காஞ்சனன் சீற்றம்**

'பூவினும் சாந்தினும் புலால் மறைத்து யாத்துத், தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த, வஞ்சம் தெரியா மன்னவன் மகனே' என்று மணிமேகலை, காயசண்டிகையின் வடிவில் உதயகுமரனுக்கு உணர்த்தியதைக் கேட்ட காஞ்சனன் சீற்ற முற்றான். தன் மனைவி தன்னை வெறுத்து தன் முன்னமேயே இந்நாட்டு மன்னவன் மகன் போலுள்ள மாற்றானிடம் காதல் குறிப்புத் தோன்றப் பலப்பல பேசியும் குறிப்புணர்த்தியும் நின்றனள் என நினைத்தான். அக்கள்ளக் காதலின் காரணத்தினால்தான் அவள் அந்நாள் வரையில் அந்நகரை விட்டு நீங்கவில்லை என்றும் முடிவு செய்தான். அந்த முடிவு மேலும் அவன் எண்ணத்தைத் தூண்டிற்று. எப்படியும் அவள்மேல் காதல் கொண்ட அரசகுமரன் அங்கு அடிக்கடி வருவான் என்றும், அவர்கள் நிலையை அறிந்துகொள்ள வேண்டும் என்று கருதி அந்த அம்பலத்தின் ஒரு பக்கத்திலேயே 'புற்று அடங்கு அரவின்' மறைந்து இருந்தான்.

**உதயகுமரன் முடிவு**

மணிமேகலை கூறியதையெல்லாம் எண்ணிப் பார்த்தான் உதயகுமரன். அவனுக்கு ஒன்றும் விளங்க

வில்லை. ஒரு வேளை மணிமேகலைதான் இவ்வாறு காய சண்டிகை உருவத்தில் உருமாறி உள்ளனளோ என எண்ணினான். எனவே அன்று இரவு எப்படியும் அந்த அம்பலத்தில் வந்து அவள் உண்மை அறியவேண்டு மென்று முடிவு செய்து, அப்போதே அந்த இடத்தை விட்டு வெளியேறினன்.

சென்றபின் அன்றைப் பொழுதுதைக் கழித்து, இரவினை எதிர் நோக்கி இருந்தான். இரவும் வந்தது; யாவரும் உறங்கினர். நடு இருள் யாமத்து 'வேழம் வேட்டு எழும் வெம்புலி போல' அரச மாளிகையை விட்டு வெளியேறினன். பின் தெருவெலாம் கடந்து மணிமேகலை யிருந்த அம்பலத்தினுள்ளே

'வேக வெந்தீ நாகம் கிடந்த
போகுயர் புற்றளை புகுவான் போலப்'

புகுந்தான். அவன் வருகையே எதிர்நோக்கியிருந்த காஞ்சனன், அவன் தன் மனைவியை நோக்கித்தான் வருகின்றான் என நினைத்து, அவன் பின்னேயே பதுங்கிச் சென்று, இடம் பார்த்து, அவனை வெட்டி வீழ்த்தினன். அந்தோ பாவம்! காமபரவசனாக வந்த உதயகுமரன் விஞ்சையன் வாளால் வெட்டுண்டு மடிந் தொழிந்தான்.

**காயசண்டிகை எங்கே?**

உதயகுமரனை வெட்டிய வீழ்த்திய காஞ்சனன் விரைந்து சென்று காயசண்டிகை வடிவிலுள்ள மணி மேகலையைக் கைப்பற்றிக் கொண்டு விரைந்து அந்தர வழியாகத் தன்னுடு செல்லக் கருதி உள்புகுந்தான்.

ஆனால் அவன் செல்வதைத் தடுத்து அருகேயுள்ள தூணிலிருந்த கந்திற் பாவை காயசண்டிகை எங்கே என்பதை எடுத்துரைத்தது.

'செல்லாதே நில்! அவள் உன் மனைவி யல்லள். காயசண்டிகை வடிவில் உள்ள அறச் செல்வி மணி மேகலை யாவாள். உன் மனைவி தன் பெரும் பசி நீங்கிய பின் இவளை வாழ்த்தி, உன்னை அடைய விரைந்து வான்வழிப் பறந்து வருவாளாயினள். அப்போது ஓர் கொடுமை நிகழ்ந்தது. வான்வழிச் செல்வோர் யாவரும், விந்தமாமலையின் மேல் பறந்து செல்ல மாட்டார்கள். அப்படிச் சென்றால் அல்லல் நேரும். அதை அறியாத உன் மனைவி விந்தமலைமேல் விரைந்து பறந்து உன்னை அடைய வந்து கொண்டிருந்தாள். அப்போது அம்மலையைக் காவல் புரியும் விந்தாகடிகை என்னும் தெய்வம் தன் சாயையினால் அவளை அருகில் பற்றித் தன் வயிற்றில் அடக்கிக் கொண்டது. அது பற்றி வருந்தற்க! இன்னும் கேள். உதயகுமரன் தன் ஊழ்வினையின் காரணத்தாலே வெட்டப் பட்டானா யினும், அவனைக் கொலை செய்த பாவம் உன்னைப் பற்றாது விடாது. எல்லாம் வினைப்பயன்' என்றது பாவை. பாவை சொல்லிய அனைத்தையும் கேட்ட காஞ்சனன் மிகவும் வருந்தி, வான்வழிச் சென்று விட்டான்.

## மணிமேகலையின் வருத்தம்

உதய குமரன் இருளூடு வந்ததையும், காஞ்சனன் ஒளித்திருந்ததையும் மணிமேகலை அறியாள். உள்ளே உறங்கிக் கொண்டிருந்தாள். எனினும் காஞ்சனன் வாள் வீச்சும், உதய குமரன் சாவுக்குரலும் அவளை

எழுப்பியிருக்க வேண்டும். அத்துடன் தூணிற்பாவை சொன்ன வரலாற்றையும் கேட்டு உதயகுமரன் இறந்ததை நன்கு அறிந்து கொண்டாள். உடன் தன் முந்தைப் பிறவியின் கணவனை இராகுலன் இறந்தான் என வருந்தினாள். காயசண்டிகை உருவல்லவா அவன் உயிருக்கு உலை வைத்து என்று கருதிக் 'கெடுக இவ்வுரு' என்று அதை விடுத்துத் தன் இயற்கை உருவினை யெய்தினாள். பின்னர் உதய குமரன், வெட்டுண்டு வீழ்ந்து கிடந்த இடத்தை நோக்கிச் சென்றாள். அவன் துணிபட்டுக் கிடப்பதைக் கண்டு கவன்று, சென்ற பிறவியில் அவன் திட்டிவிடத்தான் இறக்க, அவனுடன் சேர எரிப்புகுந்ததையும், பின் இப்பிறவியில் மலர்ச் சோலையில் அவனைக் கண்டதும் கருந்தழிந்ததையும். பின் மணி பல்லவத்தே இவர்தம் பழம் பிறப்புணர்ந்ததையும் ஒன்றன்பின் ஒன்றாக எண்ணி எண்ணி எடுத்துரைத்தாள். பின்னர் அவனை நல்வழியில் திருப்பவே அவனுக்கு அறம் கூறித் தான் காயசண்டிகையின் வடிவு பெற்றதையும் சொன்னாள்.

**' பிறந்தோர் இறத்தலும் இறந்தோர் பிறத்தலும்**<br>**அறந்தரு சால்பும் மறந்தரு துன்பமும்**<br>**யான் நினக்கு உரைத்து நின் இடரினை ஒழிக்கக்**<br>**காய சண்டிகை வடிவானேன் காதலா '**

என்று கவன்றான். அறியாது விஞ்சையன் இழைத்த கொடுமையைக் கூறினாள். கூறிக்கொண்டே உதய குமரன் அருகில் சென்றுவிட்டாள் மணிமேகலை. அதைக் கண்ட அங்கு கோயில் கொண்ட தெய்வம் ஒன்று,

'செல்லல் செல்லல் சேயரி நெடுங்கண்
அல்லியந் தாரோன் தன்பால் செல்லல்
நினக்கு இவன் மகனாய்த் தோன்றியதூஉம்
மனக்கினி யாற்கு நீ மகளாய் தூஉம்
பண்டும் பண்டும் பல்பிறப் புளவால்
கண்ட பிறவியே அல்ல காரிகை'

என்று அவர்கள் தொடர்பு பற்றி எடுத்துக் கூறி, பிறவி நிலையாமையையும் பிறவற்றையும் விளக்கி அவன் பக்கல் செல்ல வேண்டாம் என வற்புறுத்திற்று.

**கொலைக்குக் காரணம்**

தெய்வ வாக்கினைக் கேட்ட மணிமேகலை நடுங்கி, தன் மனம் சென்ற வழி குறித்து நாணினள். அவனை விட்டு விலகித் தூரத்தே வந்து, வாக்கு வந்தவழி நோக்கினான்.' யார் எங்கே யிருந்து கூறினார்கள் என்று அறியக்கூடவில்லை. எனினும் பொதுவாக அங்குள்ள தெய்வங்களை நோக்கி 'இவ்வறவியில் பொய்யா நாவொடு ஒரு தெய்வம் உண்டென்று அறிவேன். அது நீ தானோ! ஆயின் இந்த உதய குமரன் சென்ற பிறவியில் திட்டிவிடமுண்டு இறக்கவும், இப்பிறவியில் இவ்வாறு வெட்டப்படவும் காரணம் என்ன வென்று எனக்குரைக்க வேண்டும்' என்று கேட்டாள். தெய்வம் காரணத்தைக் கூறியது.

'சென்ற பிறவியில் இராகுலனும் அவன் மனைவி யாகிய மணிமேகலையும் காயங்கரை என்னும் ஆற்றங் கரையில் வருங்காலம் உணர்த்தி வாழ்ந்து வந்த பிரம தருமனை வணங்கித் தங்கள் இல்லத்தில் உணவுண்ணும் படி அழைத்தார்கள். அவனும் இசைந்து ஒருநாட்

Raja Muthiah Research Library
3rd Cross Road, CPT Campus
Taramani, Chennai - 600 113

காலையில் வருவதாகச் சொன்னான். எனவே இராகுலனும் அவன் மனைவியும் தம் சமையற்காரனை விடியற் காலையில் வந்து உணவு சமைக்குமாறு சொன்னார்கள். ஆனால் அவனோ எக்காரணத்தாலோ. காலம்தாழ்த்து வந்தான். தன் தவறு உணர்ந்து, தள்ளாடி நடந்து, கையிடைக் கொண்ட பாத்திரத்தையும் கீழே தவறிவிட்டு உடைத்தான். அவன் அச்சம் கண்டும் அவனிடம் பரிவு காட்டாது, முனிவற்கு உணவளிக்கக் காலம் தாழ்த்தது என்ற ஒன்றையே கருதி அவனை இராகுலன் வாளால் வெட்டி வீழ்த்தினான். அந்தப் பாவமே அவனை முற்பிறவியில் திட்டிவிடங்கனால் மாளச் செய்தது. இப்பிறவியில் காஞ்சனன் வாளுக்கு இரையாக்கியது, ஆகவே எவ்வளவு அறத்தாறு செல்லினும், அவற்றுள் புகும் மறச் செல்லுக்கு உரிய துன்பத்தைப் பெறத்தான் வேண்டும்' என்று எடுத்துரைத்தது.

**வருவது உரைத்தது**

இவற்றை உரைத்த தெய்வம் மணிமேகலைக்கு மேல் வரும் செயல்களைப் பற்றியும் சொல்லிற்று. 'தன் மகன் இறந்ததை' அறிந்த சோழன், மேலும் உன்னால் தீங்குண்டாகும் என்று கருதி உன்னைச் சிறை செய்வான். பின் சிறையிலிருந்து மீட்டுக் கோப்பெருந்தேவி தன்னுடன் வைத்துக்கொண்டு, உன்னைக் கொல்லவும் மாசு படுத்தவும் முயல்வாள். பின்னர் உன் ஆற்றல் உணர்ந்து கொள்வார்கள். அறவணவடிகள் மூலம் நீ விடுதலை பெறுவாய். பின்னர் நீ ஆபுத்திரன் நாடடைந்து அவனுடன் மணிபல்லவம் செல்வாய். அங்கு அவன் பிறப்பை யெல்லாம் தீவதிலகை வாய்மொழி

யினுல் சேட்டு அவன் தன் நாட்டிற்குச் செல்வான். நீயோ அத்தீவினை விட்டு வஞ்சிமா நகர் புகுவாய். அங்கு பல்வேறு சமயக் கணக்கர் தம் அறிவறிந்த உரைகளை யெல்லாம் கேட்பாய். அங்கு பல்வேறு சமயத்தவர்களும் உள்ளனர். ஆதலின் அவர் தம் வாதம் களை யெல்லாம் கேட்டு உன் சமயக் கொள்கையை உறுதிப் படுத்துவாய். இது இனி வரும் வாழ்வாகும். என்னை யார் என்று கேட்டாய். நான் தெய்வ கணத்தைச் சேர்ந்த ஒருவன். என் பேர் துவதிகன் என்பது. இத்தூணில் என்னைப்போன்று அழகாகச் செய்யப் பட்ட இவ்வுருவத்திலிருந்து என்றும் நீங்கேன்' என்று தெய்வம் எடுத்துரைத்தது.

**பின்னைப் பிறவிகள்**

அனைத்தையும் கேட்ட மணிமேகலை துணுக்குற்ருள். தன் வாழ்வில் இன்னும் எத்தனையோ நிகழ இருப்பவற்றை எண்ணி நெடிதுயிர்த்தாள். வஞ்சிமா நகர் சென்ற பின் தன் வாழ்வு என்னுகுமோ என்று நினைத்தாள். புத்த தேவன் பொன்னடி பொருந்தும் காலம் தனக்கு என்று வருமோ என்று ஏங்கினுள். ஆகவே அத்தெய்வத்தை நோக்கி, வஞ்சி நகர் சென்ற பின் நேரும் நிகழ்ச்சிகளையும், தான் நிர்வாணம் பெறும் நாளையும் கூற வேண்டுமென்று கேட்டாள். அத்தெய்வம் மேலும் சொல்லிற்று.

'வஞ்சியில் உன்தாய் கண்ணகியைக் கண்டு வழி படுவாய். அப்போது காஞ்சிமா நகரில் பெரும் பஞ்சம் தோன்றி மக்களை வருத்துவதையும், அனைவரும் உன் வரவை எதிர் நோக்கி யிருப்பதையும் உணர்ந்து கொள்வாய். பின் உன் தாய். அறவணடிகள் ஆகி

யோர் செல்ல, நீயும் காஞ்சி நகர் சென்று பசிப்பிணி களைவாய். அந்நாட்டு அரசன் உன்னை ஏற்று அங்கேயே அறமாற்றும் வகையில் உனக்கு ஆவன செய்வான். நீ அங்கே தங்கும் காலத்து நன்மழை பெய்து நாடு செழிக்கும். இன்னும் பல நன்னிமித்தங்கள் எழும். அங்கிருந்து அறவணடிகள் மூலமும், வேறு வகையி னும் பல்வேறு அறங்களை அறிந்தும், இயற்றியும், மற்ற வர்களுக்கு அறிவுறுத்தியும் இப் பிறவியைப் போக்கு வாய். பின், இப்பிறவியை விட்டு மேல் பிறப்புக்களை யெல்லாம் உத்தரமகதத்துப் பிறப்பாய். அப்பிறவிக ளெல்லாம் உனக்கு ஆண் பிறவிகளாகவே நிகழும். பல பிறவிகள் கழிந்த பின் புத்த தேவனது தலைமை மாணுக்கனுகிப் பற்றறுத்துப் பெரும்பே றெய்துவாய். இன்னும் கேள். முன்னொரு காலத்து உன் குல முன் னோன் ஒருவனைக் கடலிருந்து எடுத்துக் காப்பாற்றிய மணிமேகலா தெய்வம், நீ சென்ற பிறவியில் சாதுசக் கர முனிவனை உண்பித்த புண்ணியமிகுதியினாலே உன் னைக் கொண்டு சென்று உன் பழம் பிறப்பை உணர்த் திற்று' என்று தெய்வ வடிவிலுள்ள துவதிகன் சொன் ஞன். மணிமேகலையும் உதய குமரன் பால் தான் கொண்ட கருத்தை மாற்றி, வருவன வற்றை எண்ணி அமைதி பெறுவாளாளுள். அதற்குள் பொழுதும் விடிந்தது.

## முனிவர் செயல்

பொழுது விடிந்ததும் அங்கே சோலைகளில் தங்கி யுள்ள முனிவர்கள் கந்திற் பாவையையும், சம்பாபதி யையும் வழிபடலாயினர். அவர்கள் வழிப்பட்டு வரும் போது எதிரே உதயகுமரன் வாளால் வெட்டுண்டு

வீழ்ந்து கிடப்பதைக் கண்டனர். உடனே அவர்கள் மணிமேகலையை அழைத்து அவள் கொலைக்குக் காரணம் அறிவாளோ என்று கேட்டனர். அவளுந் தான் கண்டும் கேட்டும் அறிந்த அத்தனையும் ஒளியாமற் சொன்னாள். அவர்கள் வருந்தினர். பின், அரசன் சீற்றத்துக்கு அவள் உள்ளாதலும் கூடும் என்று அஞ்சி அவளையும் உதயகுமரன் உடலையும் மறைத்து வைத்து நேரே அரசமன்றம் சென்றனர்.

**மருதியின் வரலாறு**

வாயில் காவலன் வழிகாட்ட உள் சென்று அரசனைக் கண்ட அம்மாதவர் அவனை வாழ்த்தினர், அவனிடம் நேரே அவன் மைந்தன் செய்த கொடுமையையும் அவன் கொலைப்பட்டு வீழ்ந்ததையும் கூற அஞ்சினர். எனவே அவர் தம் சோழ நாட்டில் முன்னே நிகழ்ந்த சில வரலாறுகளை யெல்லாம் சொல்லி, அவன் மனமறிந்து பின் உதயகுமரன் வரலாற்றை உரைக்க முடிவு செய்தனர். அதன்படியே ஒரு முனிவர் அந் நாட்டுப் பழைய வரலாறு ஒன்றை உணர்த்தத் தொடங்கினர்.

'அரசே, இன்றுமட்டு மன்று, இந்நகரத்தே காம வயப்பட்டு கற்புடை மகளிரைக் கெடுக்க விழைபவர் வாழ்விழந்து இறந்த வரலாறு மிகப் பழங் காலத்திலேயும் உண்டு. கேள்!

ஒரு காலத்தில் சூரிய குலத்து அரசர்களை வேரறுத்த பரசுராமன் இச்சோழர் குலத்தைக் கருவறுக்க வந்தான். அது அறிந்த இந் நகர்த் தெய்வமாகிய துர்க்கை அப்போதாண்ட காந்தன் என்னும்

அரசனை அழைத்து அவனை அப்போது பரசுராம னிடம் போரிட வேண்டாம் என்று சொல்லிற்று. உடனே அவன் தான் அங்கிருத்தல் தகாதது என்று கருதினான். உடனே தன் நாட்டைத் தக்க ஒருவனிடம் ஒப்படைத்து அங்கிருந்து புறப்பட முடிவு செய்தான். தக்கவர் யார் என்று ஆராய்ந்தான். காதற் கணிகை யின் புதல்வனாகிய ககந்தன் என்பவன் தக்கவன் என அறிந்து, அவனை அழைத்து, அவன் சூரிய குலத்து அரச உரிமை பெறாத காரணத்தால் அவனைப் பரசு ராமன் ஒன்றும் செய்யமாட்டான் என்று கூறி, அகத் தியர் அருள் பெற்று வருமளவும் அவனை அரசனாக்கி விட்டுச் சென்றான். மேலும் ககந்தன் ஆண்ட காரணத் தில் இந்நகர் 'காகந்தி' என்று அழைக்கப்பட வேண் டும் என்றும் கூறினான்.

பிறகு இந்நகரம் ககந்தனால் ஆளப்பட்டது. அவனது மக்கள் மன்னனைப் போன்று அறவழி செல் லாதவர்கள் போலும். அவருள் ஒருவன், பத்தினிப் பெண்ணாகிய மருதி யென்பவளைக் காவிரியிலிருந்து நீராடி வரும்போது ஒரு நாள் கண்டான். அவள் பால் காம இச்சை கொண்டவனாகி, அவள் உறுதியற்றவள் என்று கருதி அவளைச் சென்று காதல் குறிப்புத் தோன்ற அழைத்தான். அதை அறிந்த மருதி மிகவும் வருந்தினவளாகி உலகில் 'மழைவளம் தரும் கற்பு டைப் பெண்டிர் கணவனன்றிப் பிறர் நெஞ்சு புகார்' என்று கூறும் மொழி பொய்யா? நான் அக் கொடிய வன் உள்ளத்தே புகுந்தமையான் என் கற்பு கெட் டதே; நான் என் கணவனுக்கு உரியவள் அல்லேன்' எனக் கலங்கி வீடு செல்லாது, அருகே உள்ள பூத

சதுக்கம் புகுந்தாள். அங்கு தன் குறைகளைக் கூறி, அக் கொடுமைக்குக் காரணம் யாது எனக் கலங்கிக் கேட்டாள். அங்குள்ள பூதம் அவள் முன் தோன்றி அவள் பிறன் நெஞ்சு புகுதற்குக் காரணத்தைக் கூறிற்று.

'தெய்வம் தொழான் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை, என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்
பிசியும் நொடியும் பிறர் வாய்க் கேட்டு
விசிபிணி முழவின் வீழாக் கோள் விரும்பிக்
கடவுள் பேணல் கடவியை ஆதலின்
மடவரல் ஏவ மழையும் பெய்யாது
நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
பிறர் நெஞ்சு சுடும் பெற்றியு மில்லை'

என்று உணர்த்தி, அவள் வள்ளுவர் வாய் மொழியை மறந்து, கணவனைத் தவிர, பிறதெய்வங்களை வணங்க விழாக்களுக்குச் செல்கின்றமையின் அவள் கற்பிற்கு இழுக்கு வந்ததென்றும், மேலும் அவள் அத்தகைய தவற்றைச் செய்யாதிருப்பின் அவள் வாய்மொழி வழி மழையும் பெய்யுமென்றும் கூறி அவளை விரும்பிய காமுகனை மன்னன் ஏழு நாளில் தண்டிப்பான் என்றும், அப்படித் தண்டியாதொழியின் பின் தான் தண்டிப்ப தாகவும் கூறிற்று. அப்படியே அக் கொடியோன் தன் தந்தையாகிய ககந்தனால் வெட்டப் பட்டனன்.

**விசாகையின் வரலாறு**

'இவ்வூரிலேயே நடந்த இன்னொரு வரலாற்றையும் கேட்பாயாக. தருமதத்தன் என்பானும் அவன் மாமன்

மகள் விசாகை என்பவளும் மிக்க அழகினர். தம்முள் நெருங்கிப் பழகினர். அதை அறிந்த ஊரார் அவர்கள் யாழோர் மணவினை மேற்கொண்டனர் எனக் குறை கூறினர். அதை அறிந்த விசாகை உலக அறவியில் சென்று கந்திற் பாவையிடம் தனக்குள்ள குறையைக் கூறினள். அத் தெய்வம் அவள் தவறிலள் என்பதை அனைவரும் அறியக் கூறியது. மக்கள் அவள் சிறப்பை வியந்தனர். எனினும் தெய்வம் இல்லெனில் தன் குறை நீங்கியிராதே என்று கருதிய விசாகை, தன் மைத்துனனை இம்மையிலன்றி, மறுமையில் தான் மணப்பதாக உறுதி கூறி, கன்னிமாடம் புகுந்து காலம் கழிப்பாளாயினள். தருமதத்தனும் இந்நகர் விட்டு நீங்கி, மதுரையை அடைந்து வாணிபம் செய்து சிறந்த செல்வனாயினன். அந்நகர வேந்தன் அவனுக்கு எட்டி முதலிய பட்டப் பெயர் கொடுத்துச் சிறப்புச் செய்தனன். அத் துணைச் சிறப்பு பெற்ற போதிலும் தன் மாமன் மகளன்றி மற்றொருத்தியைத் தீண்டாது, மணமின்றி வாழ்நாள் கழித்தான். அவனுக்கு அறுபது ஆண்டு வந்துற்றது. அப்போது ஒரு அந்தணன் அவனிடம் சென்றான்: எத்துணைச் செல்வம் இருப்பினும் பயனின்று என்று எடுத்துரைத்தான்.

‘பத்தினி யில்லோர் பலவறஞ் செய்யினும்
புத்தே ளுலகம் புகார் என்பது
கேட்டும் அறிதியோ; கேட்டனை யாயின்
நீட்டித் திராது நின்னகர் அடைக’

என்று கூறி, விரைந்து அவனை இந்நகர் செல்லப் பணித்தான். அவனும் அவ்வாறே புறப்பட்டுத் தன் வீடு வந்து சேர்ந்தான். அவன் வருகை அறிந்த

விசாகை புறப்பட்டு வந்து அவனைக் கண்டு, தாங்கள் எவ்வாறு மாறி யுள்ளனர் என்பதையும், மூப்பின் எல்லையில் உள்ளதையும் கூறினள். மேலும் அவள் மறுமையில் அவனை அடைய இருந்த விருப்பையும் உணர்த்தினள். அது கேட்ட அவன்

> 'இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
> வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா
> புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்
> மிக்க அறமே விழுத்துணை யாவது'

என்று கூறித் தன் பொருளை யெல்லாம் அவளிடம் கொடுத்து அறமாற்றி வாழ்ந்து வந்தான்.

அத்தகைய அற ஒழுக்கம் உடைய விசாகை இளையளாய் இருந்தபோது தெருவே சென்றாள். அவளைக் கண்டு காமுற்ற, முன் மருதியால் மடிந்த அரசகுமரனின் அண்ணன் தன் தலையிலிருந்த மாலையை யெடுத்து அவள் கழுத்தில் சூட்டுவதற்காகக் கையைத் தலையிடைச் செலுத்தினான். செலுத்திய கை அப்படியே நின்றுவிட்டது. அதை அறிந்த ககந்தன் அம் மைந்தனையும் வாளால் வீசினான் என்று கூறினர்.

**உதயகுமரன் செயல்**

முனிவர் கூறிய அனைத்தையும் கேட்ட மன்னன் மாவண்கிள்ளி ஒன்றும் அறியானாய் 'இன்று மட்டுமன்று' என்று தொடங்கி இத்துணையும் கூறிய முனிவர்களை நோக்கி 'இன்றும் அதுபோன்ற கொடுமை நிகழ்ந் துளதோ?' என்று கேட்டான், முனிவர் கூறுவதற்கு அஞ்சினராயினும் மெள்ள நிகழ்ந்ததைக் கூறினர். நிகழ்ந்ததைக் கூறுமுன் நன்னெறி கூறினர்.

'முடிபொருள் உணர்ந்தோர் முதுநீர் உலகில்
கடியப் பட்டன ஐந்துள; அவற்றில்
கள்ளும் பொய்யும் களவும் கொலையும்
தள்ளா தாகும் காமம் தம்பால்
ஆங்கது கடிந்தோர் அல்லவை கடிந்தோர் என
நீங்கின ரன்றே நிறைதவ மாக்கள்
நீங்கா ரன்றே நீணில வேந்தே
தாங்க நரகம் தன்னிடை உழப்போர்'

என்று உலக நெறியை விளக்கிய பின், கோவலன் இறந்தபின் மாதவி துறவு பூண்டதும், மணிமேகலை பிக்குணிக் கோலம் கொண்டதும், உதயகுமரன் காதலுற்றதும், காயசண்டிகை வடிவுடைய மணிமேகலையை விஞ்சையன் தன் மனைவியெனக் கருதியதால் உதயகுமரனை வெட்டி வீழ்த்தியதையும் கூறினர்.

**மணிமேகலை சிறைப்படல்**

தன் மகன் இறந்தான் என்பதை எண்ணி உள்ளம் வருந்தவில்லை மாவண்கிள்ளி. தன் அமைச்சனாகிய சோழிக ஏனாதியை நோக்கினான். தான் இடவேண்டிய தண்டனையை விஞ்சையன் செய்தது தவறு என்று சொல்லி வருந்தினான். 'மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றே' என்று கவன்றான். பின்னர் மகனை முறை செய்து தேர்க்காலில் மடித்த மனு வேந்தன் வழி வந்த இச்சோழர் குலத்திலே இக்கொடியனும் பிறந்தான் என்ற சொற் பிற மன்னர் செவிப் படுமுன் உதயகுமரனைத் தீயிடை யிடச் சொன்னான். மணிமேகலையையும் சிறை செய்யக் கட்டளையிட்டான். முனிவர் விடை பெற்றுச் சென்

றனர். அமைச்சனும் அரசன் ஆணைவழி உதய குமரனை எரியிடை யிட்டு, மணிமேகலையையும் சிறை செய்தான்.

அரசமாதேவியின் வஞ்சனை

மன்னவன் தன் மகன் பிரிவினைக் குறித்து அவ்வளவாக வருத்தமுறவில்லை யாயினும், அவன் தேவியார் துன்ப முற்றனர். ஆள இருந்த தம் குலக் கொழுந்து வாளால் மாளநேர்ந்ததே என்று மனம் மாழ்கினர். அவள் வருத்தமறிந்த மன்னவன் வாசந் தவை என்னும் வயதுமுதிர்ந்த ஒரு கிழவியை அனுப்பி அவளுக்கு ஆறுதல் சொல்லச் செய்தான். அவளும் 'கட்டுரை விரித்தும் கற்றவை பகர்ந்தும், பட்டவை துடைக்கும் பயங்கெழு மொழி'யினால் பற்பல சொல்லித் தேற்றினாள். அரசன்முன் தன் வாட்டத்தை எள்ள ளவும் காட்டலாகாது என்று வற்புறுத்திச் சொல்லி விட்டு அவள் சென்று விட்டாள்.

கிழவியும் மற்றவரும் எவ்வளவு கூறியும் கோப் பெருந்தேவியின் மனம் அமைதி பெறவில்லை. தன் மகன் மடியக் காரணமா யிருந்த மணிமேகலையை எப் படியாயினும் வஞ்சித்துக் கொண்டுவந்து பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று விரும்பினாள். அவ்வாறே அரசனை அணுகி மணிமேகலையைச் சிறை செய்திருத்தல் தவறென்றும், தன்னுடன் இருக்கத் தக்க வகையில் அவளை விடுதலை செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டாள். தன் மகன் தவறிழைத்த காரணத்தால் அவன் இறந்தது சரியே என்று கூறி, பிக்குணிக் கோலத் தோ டிருந்து இளமை கேடுறுவதைக் கருதாது நல்லறம் புரியும் மணிமேகலைக்குச் சிறை ஏற்ற இடம் அன்று எனவும், தன்னொடு அவளை இருக்க விடவேண்டும் என

வும் கேட்டுக்கொண்டாள். மன்னவன் அவள் வேண்டு கோளுக்கு இணங்கி மணிமேகலையைச் சிறை வீடு செய்து அரசியொடு அந்தப்புரத்துக்கு அனுப்பினான்.

## பூக்கொடுஞ் செயல்கள்

தன்னொடு வந்த மணிமேகலையை எப்படியாவது அறிவு திரித்துத் தெருவெலாம் பயித்தியமாகத் திரியும் படி செய்து, தன் மகனைக் கொன்ற வருத்தத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தாள் அரசி. எனவே பித்தேறுதற் கேற்ற வகையில் பலப் பல மருந்துகளைக் கொடுத்தாள். மணிமேகலையோ மறு பிறப்புணர்ந்தவ ளாதலால் அதனால் யாதொரு மாறு பாடும் அடையாது அமைதியாக இருந்தாள். பின்னர் ஒரு கல்லா இளைஞனை அழைத்து, அவனுக்குக் கை நிறையப் பொருள் தந்து, மணிமேகலை தனியாக இருக் கும் இடத்திற்குச் செல்லுமாறு பணித்து, அங்கு அவ ளைப் புணர்குறி செய்து, அதை நகரில் உள்ளார் பலருக் கும் உணர்த்தி இழிவு செய்ய ஆணையிட்டாள். அவ் வஞ்சத்தை அறிந்த மணிமேகலை தன் உருமாறும் மந் திரத்தால் ஆண் உரு எய்தி யிருந்தாள். அவ்வாண் உருவைக் கண்டான் அவன். அரசியின் அந்தப்புரத்தில் ஆடவரே அணுகார் என்பதை அக் காமுகன் அறிவா னதலாலும், தனக்கு முன்னமே அங்கொரு ஆண் இருப் பதாலும், அரசி ஏதோ வஞ்சனைக்குள் தன்னை உட் படுத்த எண்ணினாள் எனக் கருதி, சொல்லாமல் அவ் விடம் விட்டுத் தெரியாத தூரத்தில் சென்று மறைந்து விட்டான். தன் செயல் இரண்டும் பழுதுற்றதை அறிந்த அரசி அவள் நோய்வாய்ப் பட்டாள் என்றும் உணவு வேண்டாம் என்றும் கூறிப் புழுக்கறையில்

அடைத்தாள். மணிமேகலை அங்கும் தான் கற்ற பசியா மந்திர வலிமையால் யாதொரு வாட்டமும் உறாது இருந்தாள். இவற்றைக் கண்ட அரசி கருத்தழிந்தாள்.

**அரசியின் மன மாற்றம்**

கருத்தழிந்த அரசியார் அஞ்சித் தான் செய்த பிழைகளை யெல்லாம் நினைத்து மணிமேகலையிடம் மன்னிப்புக்கேட்டுக் கொண்டு ஒதுங்கி நின்றாள். கண்ட மணிமேகலை உலக நிலையாமையையும், மக்களுக்குள் உள்ள தொடர்பினையும் நன்கு விளக்கினாள். சென்ற பிறவியில் திட்டிவிடத்தால் கணவன் இறக்கத் தான் உடன் கட்டையேறி உயிர் துறந்தபோது அழாத அவள் இப்பிறவியில் மகனாகிய காரணத்தால் மட்டும் அழுவது ஏன் என்றாள். மற்றும் அழுவது உயிர்க்கா உடலுக்கா என்றாள். உடலுக்காயின் அழுத அவர் களே அவ்வுடலை எடுத்து நெருப்பி லிடுவானேன். உயி ருக்காயின் அவ்வுயிர் நிலை அறிந்து 'எவ்வுயிர்க்காயி னும் இரங்கல் வேண்டுமே' என்றாள். மேலும் இவ் வுதய குமரன் வாளால் வீழக் காரணமாயிருந்த, முன் னைப் பிறவியில் சமையலாளனைக் கொன்றதை எடுத் துக் காட்டினாள். பின்னும் தான் அவ்வூரிலும் மணி பல்லவத்திலும் தெய்வங்களால் அறிந்த அத்தனை உண்மைகளையும் உணர்த்தினாள், அவள் செய்த கொடு மைகளுக்குத் தப்பக் காரணமாயிருந்த முப்பெருமந்திர வலிமையையும் உரைத்தாள். தான் அங்கிருந்து உருக் கரந்து உயரப் பறந்து செல்லும் ஆற்றல் பெற்றும் அவ் வாறு செய்யாமைக்குக் காரணம், அவ்வரசி, தன் முன் னைப் பிறவியின் கணவனான இராகுலனுக்கு இப்பிறவி யில் தாயா யிருந்தமையே என்பதையும் எடுத்து விளக்

கிருள். மக்கள் காமத்தையும் கொலையையும் நீக்கி வாழின் நலம் உண்டு என்று பல்வேறு வகையில் அற வுரை புகன்ருன்.

அரசிக்கு அறவுரை

அறிஞர்தம் உரை கேட்டும், உலக நிகழ்ச்சிகளைக் கண்ணாரக் கண்டும் மக்கள் மனமாற்றம் உற்று அறிவு வரப் பெற்று அறமாற்றவேண்டிய நெறிக ளனைத்தை யும் மணிமேகலை எடுத்து விளக்கினாள். உலகில் கல்வி முற்ற அறிவை வளர்க்கும் என்ருலும் அதற்கும் மேம் பட்டது செற்றம் விடுத்து மற்றவர் துயர் துடைப்ப தாகும் என்ருள்,

'கற்ற கல்வி அன்ருல் காரிகை
செற்றஞ் செறுத்தோர் முற்ற உணர்ந்தோர்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோர் என்போர்
அல்லல் மாக்கட்கு இல்லது நிரப்புனர்
திருந்தோர் எல்வினை செல்லுலகு அறிந்தோர்
வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தோர்
துன்பம் அறுக்கும் துணிபொருள் உணர்ந்தோர்
மன்பதைக் கெல்லாம் அன்பொழியார்'

என்று பல்வேறு வகையில் கல்வியும், உலக வாழ்வும், செல்லுலகச் சிறப்பும், துணிபொருள் உணர்வும் எல் லாம் மற்றவர் துன்பம் துடைக்கும் செந்நெறியில் அமைந்துள்ளன என்பதை முறைப்படி எடுத்துக் காட்டினள் மணிமேகலை,

தன்மகன் இறந்த காரணத்தால் சுடப்பட்ட உள் ளத்தை உடைவளாகிய அரசியார், மணிமேகலை கூறிய நன்மொழிகளால் அச்சூடு மாற்றப் பட்டவளாகித்

தூய உள்ளம் பெற்று, உலக நிலையையும், தன் உள்ள நிலையையும், மணிமேகலையின் மாண்பினையும் நன்கு உணர்ந்தாள். உணர்ந்த உடனே அவ்வுணர்ச்சிப் பெருக்கால் அப்படியே மணிமேகலை அடிகளில் வீழ்ந்து வணங்கினாள். அச்செயலைச் சிறிதும் எதிர் பாராத மணிமேகலை, அரசியார் தன் முந்தைக் கணவ னின் தாயானமையாலும், நாடாளும் அரசியாதலா லும் அவ்வாறு செய்யத்தகாதது என்று சொல்லி, அவ்வரசியின் பாதங்களில் தானும் எதிர்விழுந்து வணங்கினள்.

## சித்திராபதியின் செயல்

அரசி மணிமேகலையின் பெருமையை உணர்ந்த பின் சில நாட்கள் அவளைத் தன்னுடனேயே இருத்தி, சிறக்கப் போற்றி வந்தாள். மணிமேகலையும் மனக் கவலை ஒன்றும் இன்றி, தனக்குமேல் நிகழ இருக்கும் செயல்களைப் பற்றியெல்லாம் சிந்தை செய்து கொண் டிருந்தாள். அப்போது அவளது பாட்டியாகிய சித் திராபதி மறுபடியும் மணிமேகலையை எப்படியும் தன் வழிக்குக் கொண்டுவர முயன்றாள். மணிமேகலை பிக்குணிக் கோலத்தோடு வீதிதோறும் சுற்றியதை யும், உதயகுமரன் தன் வாய்மொழிப்படி அவளை அடைய முயன்று அம்முயற்சியிலேயே கொலையுண் டிறந்ததையும் அரசியிடம் கூறிப் பின் மணிமேகலை யைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கேட்க விழைந்தாள்.

தன் விழைவின் படியே சித்திராபதி விரைந்து புறப்பட்டு அரசியைக் கண்டு வணங்கினாள், வணங்கி மணிமேகலையைத் தன்னிடம் அனுப்பி விடுமாறு

வேண்டினள். மேலும் மணிமேகலையைத் துன்புறுத்தினால் அரசகுமாரன் இறந்தது மட்டுமன்றி அந்நாட்டில் பலவகைத் துன்பங்கள் நிகழும் என்று எச்சரித்தாள். அதற்குரிய காரணத்தையும் கூறுவாளானாள்.

'முன்னொரு நாளில் நெடுமுடிக் கிள்ளி என்பான் இந்நாட்டை ஆண்ட காலத்தில் அழகார் சோலை ஒன்றில் அமர்ந்திருந்தான். அதுகாலை அங்குத் தமியளாகி ஒரு தையல் அழகு நிறையப் பெற்றவளாகி வந்து சேர்ந்தாள். அவளைக் கண்ட மன்னவன் காதல் வயப்பட்டு, அவளைப் பற்ற நினைத்தான். நினைத்த கருத்தை முடித்தான். அவளும் அவனுடன் ஒரு திங்கள் அச்சோலையிலே தங்கி மகிழ்ந்துறைவா ளாயினள். ஒரு நாள் திடீரென அவள் மறைய வருத்தமுற்ற மன்னவன் அவளை எங்கும் தேடினன். காணப்பெறாது கலங்கினன். பின் தன்முன் எதிர்ப்பட்ட சாரணர் ஒருவரை அவளைப் பற்றிக் கேட்டனன். அவர் அவளை அப்போது அறியாவிடினும் முன்னமே அறிந்ததாகக் கூறி அவள் பிறந்ததும், அவள் ஒரு சூரிய குலத்தரசனைச் சேர்ந்து கருப்பெற்று வருவாள் என்று கணி சொன்னான் என்றும், அதன்படி அவள் வந்து, அவனுடனிருந்து சென்றாள் என்றும் கூறி, இனி அவள் பெறுமகனல்லது அவள் வாராள் என்றும் எடுத்துரைத்தார். மேலும் என்றாயினும் ஒரு நாள் மணிமேகலா தெய்வத்தின் வாக்கின் படியும், இந்திரன் சாபப்படியும் இந்நகரைக் கடல் கொள்ளுமென்றும், அதற்குப் பரிகாரமாகத் தவறாது இந்திரவிழாவை விடாது நடத்தவேண்டு மென்றும் கூறினன். அதை அறிந்த சோழன் தவறாது இந்திரவிழாவை நடத்தி

வருகின்றான்' என உரைத்தாள். மேலும் தன் பெயரை உடைய மணிமேகலை வருந்துவாளானால் 'அத்தெய்வம்' அந்நகர்க்குத் தீங்கிழைக்கு மென்றும், ஆகவே அவளைத் தன்னுடன் அனுப்பவேண்டு மென்றும் கேட்டுக் கொண்டாள்.

அவள் கூறியவற்றை யெல்லாம் கேட்ட அரசி பெருஞ் செல்வியாகிய மணிமேகலை கள்ளும் பொய்யும் காமமும் பிறவும் நிறைந்த அப்பரத்தையர் சேரியில் வருவதற்கு உரியவள் அல்லள் என்று கூறி அவளைத் தன்னோடு இருத்திக் கொண்டாள்.

அறவணர்த் தொழுதல்

அவ்வாறு அரசியும் சித்திராபதியும் மணிமேகலையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, மாதவி, சுதமதியையும் அறவணவடிகளையும் அழைத்துக் கொண்டு மணிமேகலையைக் காண்பதற்காக அரசியாரின் அந்தப்புரம் வந்தாள். அறவண அடிகளைக் கண்ட அரசி தன் ஆயத்தோடு எழுந்து சென்று அவர் தம் அடிகளில் வீழ்ந்து வணங்கினாள். அவரும் அறிவுண்டாக என வாழ்த்தி அருளினார். அரசியும்,

'யாண்டுபல புக்கநும் இணையடி வருந்த என்
காண்டரு நல்வினை நும்மைஇங் கழைத்தது
நாத்தொலை வில்லை யாயினும் தளர்ந்து
மூத்ததிவ் யாக்கை வாழ்க பல்லாண்டு'

என்று கூறி வணங்கினாள். அடிகள் தான் மாலைத் திங்க ளென்ன வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இருப்பதை எடுத்துக் கூறிப் பின் புத்த சமயத்துப் பன்னிரு நிதானங்களையும் அவருக்கு அறிவுறுத்தினர். உலகில்

மக்கள் பட்டொழுகும் தீவினையின் திறத்தையும அவை எவ்வெவ்வகையில் மக்களை மயக்குகின்றன வென்பதையும் எடுத்துரைத்து அவற்றின் நீங்கிச் சீலம் பெற்றுச் சிறக்க வேண்டுமென அருளினார்.

'கொலையே களவே காமத் தீவிழை
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சி என்று
உள்ளந் தன்னில் உதிப்பன மூன்றுமெனப்'

பத்து வகையாலே பாகு படுத்தப்படும் குற்றத்தினைக் கூறி, இக்குற்றத்தின் நீங்கியோரே தானம் தலைநின்று சீலம் தாங்கிச் சீர்பெறுவர் என்றும் விளக்கினார். அவர் தம் அறிவுரை கேட்ட அனைவரும் அசையா ஓவிய மென அமைந்திருந்தனர்

# ஆபுத்திரனுடன்

## புகாரில் இறுதி நாள்

அறவண அடிகளுடைய அருள் மொழியைக் கேட்டு அனைவரும் அமைதி யுற்றிருந்தனர். அந்த வேளையில் மணிமேகலை தன் இடம் விட்டு எழுந்து அனைவரையும் வணங்கிப் பேசுவாளானாள். "அடிகளார் சொற்படி அரசியும் அன்னையும் சுதமதியும் சித்திராபதியும் வாழ்ந்து புத்ததேவன் அருளுக்கு உரியவராகுங்கள். நான் இனி இந்நகரில் இரேன். இருப்பின் அரசகுமரன் கொலைப்பட்டதற்குக் காரண மானவள் என்று பலரும் கூறும் வகையில் நான் வாழ நேரும். நான் உடனே ஆபுத்திரனது புண்ணிய நாடு சென்று அவனைக் கண்டு அவனையும் உடன் அழைத்துக்கொண்டு மணிபல்லவம் சேர்ந்து அவன் பழம் பிறப்பை உணர்த்தி, பின் அவனைவிட்டு நீங்கி வஞ்சியுட் புகுந்து என் தந்தையும் அன்னையும் அமர்ந்திருக்கும் திருக்கோலத்தைக் கண்டு போற்றி, நாடு முழுதும் சுற்றி உணவளித்தல் என்ற அற வேள்வியைச் செய்து வருவேன். எனக்கு ஏதேனும் இடர் வருமோ என்று அஞ்ச வேண்டா. நான் சென்று வருகிறேன்" என்று கூறி மறு முறையும் அனைவரையும் வணங்கி விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

## நாகபுரம் நோக்கி

அனைவரிடமும் விடை பெற்ற மணிமேகலை நேராக உலக அறவியுள் புகுந்து அங்குள்ள சம்பாபதியையும், கந்திற் பாவையையும் போற்றி வலங் கொண்டு

காவிரிப்பூம்பட்டினத்திற்கே வணக்கம் செலுத்திவிட்டு வான் வழிப் பறந்து செல்வாளானுள். நெடுந் தூரம் சென்று இந்திரன் வழித் தோன்றலாகிய ஆபுத்திரன் ஆளும் நாகநகர் எல்லையில் ஒரு சோலையுள் இறங்கி, அங்கிருந்த மாதவன் அடியிணைகளில் வீழ்ந்து வணங்கி 'இந்நகரின் பேர் யாது? இந்நகராளும் மன்னவர் யார்?' என்று கேட்டாள். அம்மாதவரும் அது நாகபுரமென்றும் அந்நகரை ஆளும் மன்னன் பூமிசந்திரன் மகனுகிய புண்ணியராசன் என்றும் கூறி, அவன் பிறந்த நாள் தொட்டு அந்நாட்டு வளம் குறையாது, மழை தவருது, மண்ணும் வானும் வளம் பிழையாது, உயிர்களும் நோயில்லாது உயர்ந்துள்ளதையும் எடுத்துரைத்தார். மணிமேகலையும் அவன் புகழ் கேட்டு அச்சோலையில் தங்கியிருந்தனள்.

## ஆபுத்திரனைக் காணல்

மணிமேகலை அச் சோலையில் தங்கியிருந்த அதே வேளையில் ஆபுத்திரனுகிய அந்நாட்டு அரசன் தன் உரிமை மனைவியோடு அப்பொழிலிடைப் புகுந்து ஆண்டு தங்கிய தருமசாவகன் அடியினை வீழ்ந்து வணங்கினன். வணங்கி அறநெறி பற்றியெல்லாம் கேட்டு அறிந்துகொண்டான். பிறகு அவன் அங்கே பக்கத்தில் நின்ற மணிமேகலையைக் கண்டு 'இளமையும் எழிலும் ஒரு சேரப் பொருந்தியும் பிக்குணிக் கோலம் கொண்டு கையில் பிச்சைப் பாத்திரத்தை ஏந்திய இவ் விளங்கொடி யார்? என்று கேட்டான். அனைவரும் அறியாது நிற்கின்ற அளவில், அவன் பக்கத்தில் இருந்த சட்டையிட்ட பிரதானி ஒருவன், முன் ஒரு காலத்தில் கிள்ளிவளவனது கேண்மை நாடி காவிரிப்பூம்பட்டி

னம் சென்ற காலத்து அவளைப் பற்றி அறிந்தவனாதலால், மணிமேகலையைப் பற்றிய எல்லா வரலாறுகளையும் எடுத்துரைத்தான். அதைக் கேட்டபின் மணிமேகலை,

'நின்கைப் பாத்திரம் என்கைப் புகுந்தது
மன்பெருஞ் செல்வத்து மயங்கினை அறியாய்
அப்பிறப் பறிந்திலை யாயினும் ஆவயிற்று
இப்பிறப்பு அறிந்திலை என் செய்தனையோ'

என்று ஆபுத்திரனுக்கு அறிவுறுத்தினாள்.

மேலும் அவன் மணிபல்லவம் வந்தால் அவன் பிறவியைப் பற்றியும், பிறவற்றைப் பற்றியும் அறிய வழி உண்டு என்று கூறி அவனை அங்கு வருமாறு பணித்துத் தான் வான் வழிப் பறந்து, அன்றைப் பகலோன் மறையுமுன் மணிபல்லவம் சென்று அத் தீவை வலம்கொண்டு, பின் பீடிகையை வந்து வணங்கினாள். வணங்கும்போது மேலும் மேலும் அப்புத்த பீடிகைத் தன் பழம் பிறப்பை உணர்த்தியதை உணர்ந்து உணர்ந்து நின்றாள்.

**ஆபுத்திரன் மணிபல்லவம் செல்லல்**

நிற்க, அங்கு மணிமேகலையால் உணர்ச்சி வரப் பெற்ற புண்ணியராசன் அந்தப் பொழிலை விட்டுத் தன் மாளிகை அடைந்தான். அங்கிருந்த தன் தாய் அமுதசுந்தரி வாயிலால் தான் பொற் பசுவின் வயிற்றினின்று வந்த முட்டையுட் பிறந்ததையும், மகனின்மையால் பூமிசந்திரன் அவனைப் பெற்று வந்து போற்றிப் பின் அரசனுக்கியதையும் அறிந்தான். அறிந்ததும் மிகவும்

Raja Muthiah Research Library
3rd Cross Road, CPT Campus
Taramani, Chennai - 600 113

ஆழ்ந்த துன்ப முற்றான். அத்துன்பத்தின் காரணமாக அரச போகங்களை வெறுத்தான். மகளிர் தம் ஆடலும் பாடலும் அழகும் பிறவும் அவனை மயக்கா தொழிந் தன. துறவு கொள்ள வேண்டும் என்ற ஓரே எண்ணம் அவன் உள்ளத்தைத் துளைத்தது. அவ்வுள்ளத்தைத் திறந்து காட்டவும் செய்தான்.

அரசனின் துறவெண்ணத்தை அறிந்த சனமித் திரன் என்னும் அமைச்சன் அவனை அடைந்து அவன் எண்ணத்தை மாற்ற முயன்றான். அவன் பிறக்குமுன் நாட்டில் நிலவிய கொடிய பஞ்சத்தையும் பட்டினியை யும் விளக்கிச் சொல்லி, பின் அவன் பிறந்து நாடு நலம் பெற்று வளமுற்று ஓங்குவதையும் எடுத்துக்காட்டி, இந்நிலையில் அவன் பிரிவானாயின் நாட்டு மக்கள் பெரும் துயருற்று வாடுவார்களென்றும், இத்துணை மக்களை வாட விட்டுச் சுயநலம் நாடும் துறவற நெறியை மேற்கொள்ளுதல் தக்கதன்றென்றும் எடுத் துரைத்தான். 'தன்னுயிர்க்கு இரங்கான் பிறவுயிர் ஓம்பும் மன்னுயிர் முதல்வன் அறமுமீ தன்று' என்று எடுத்துக் காட்டினான்.

அமைச்சன் கூறிய நல்லுரையை ஏற்ற மன்னன் சிறிது துயர் நீங்கித் துறவெண்ணத்தையும் விடுவானா யினன். எனினும் மணிபல்லவம் சென்று தன் பழம் பிறப்பையும் பிறவற்றையும் உணரவேண்டும் என்ற அவா தணிந்திலது. எனவே அவன் அமைச்சனை நோக்கி, தான் ஒரு திங்களுக்குள் மணிபல்லவம் சென்று வருவதாகவும், அது வரை 'அரசும் உரிமையும் மாநகர் சுற்றமும்' அமைச்சன்பால் காவல் வைக்க பெறுமெனவும் கூறினன். அமைச்சனும் அதற்கு இயைய உடனே

கப்பல் வல்லாரைக் கூவி நல்லதொரு நாவாய் அமைத்துக்கொண்டு மணிபல்லவம் நோக்கிப் புறப்பட்டான்.

ஆபுத்திரன் வருகைக்காகக் காத்திருந்த மணிமேகலை அவன் வந்ததும் 'வருக' என்று அழைத்துச் சென்று, அத்தீவினை வலம் செய்து அனைத்தையும் காட்டினுன். பின்னர் 'பிறப்புணர்விக்கும் புத்த பீடிகை இது' என்று அத் தரும பீடிகையையும் காட்டினள். அவனும் அப்புத்த பீடிகையை வலம் வந்து வணங்கி நின்றுன். அவன் பழம் பிறப்புணர்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்ருக உருவாயின. எல்லாவற்றிற்கும் மேலாக, அவன் தென் மதுரையில் இருந்த காலத்து அந்த அமுதசுரபியை அளித்த சிந்தாதேவியின் தோற்றம் தெரிந்தது. அவளை வாய் விட்டுப் போற்றினுன்.

'அமுத சுரபி அங்கையில் தந்து என்
பவமறு வித்த வானோர் பாவாய்
உணர்வில் தோன்றி உரைப் பொருள் உணர்த்தும்
அணிதிகழ் அவிர் ஒளி மடந்தை நின்னடி
தேவ ராயினும் பிரம ராயினும்
நாமாசு கழூஉம் நலம்கிளர் திருந்தடி
பிறந்த பிறவிகள் பேணுவ தல்லது
மறந்து வாழேன் '

என்று எப்பிறவியினும் அவளடி மறவாது போற்றுவதாக உறுதி செய்தான். பின்னர் அவன் மணிமேகலையுடன் அப்புத்த பீடிகையை வணங்கித் தென்மேற்காகச் சென்று அங்குள்ள கோமுகிப் பொய்கைக் கரையில் ஒரு புன்னை மர நிழலில் தங்கி யிருந்தான்.

7

### தீவதிலகை கூறல்

மணிமேகலையும் ஆபுத்திரனும் அப்பொய்கையின் ஒரு சார் தங்கியிருந்த அந்த வேளையில், காவற்றெய்வ மாகிய தீவதிலகை அவர்களை வந்து கண்டு, வணங்கி, 'அருந்தும் உயிர் மருந்து முன் அங்கையிற் கொண்டு, பெருந்துயர் தீர்த்த அப்பெரியோய் வந்தனை' என்று வரவேற்புக் கூறி மேலும் நிகழ்ந்ததை உரைத்தாள். அந்நாளில் ஏற்பார் இல்லை என்று அமுதசுரபியைக் கோமுகியில் இட்டு அவன் இறந்தபின் அவனைத் தேடி வந்து அவனைக் காணமையால் ஒன்பது செட்டிகள் வாடி உயிர்விட, அவர்கள் இறந்த பின்னர் அவர்க ளோடு வந்தவரும் இறந்தனர் என்று கூறி அவர்கள் தம் எலும்புகளை யெல்லாம் காட்டினள். கடைசியில் அவன் எலும்பினையும் காட்டினாள். அனைத்தையும் காட்டி, தற்கொலைசெய்துகொண்டதோடன்றி, அதன் காரணமாக மற்றவரையும் கொலை செய்த அவன்தான் அரசனாயினான் என்று கூறினாள். அனைத்தையும் கண் டும் கேட்டும் தன்னை மறந்து வியப்புற்றிருந்தான் ஆபுத்திரன்.

### புகார் போயது

ஆபுத்திரன் வரலாற்றை உணர்த்திய தீவதிலகை பின்னர் மணிமேகலையை நோக்கிப் பேசலானாள். காவி ரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்டது என்று காரணமும் காட்டினாள். 'கிள்ளியின் நாகநாட்டு மனைவி பீலிவளை தான் பெற்ற மைந்தனை சோழ இளவரசனுடன் அம் மணிபல்லவத்தில் வந்து புத்த பீடிகையை வலம் கொண்டிருந்த காலத்தில், கிள்ளி

நாட்டிலிருந்து கம்பளிச் செட்டியின் கலம் வந்து தங்க, அச்செட்டியிடம் சிற்றரசனை ஒப்புவித்து, சோழ மன்னனிடம் அவனை ஒப்படைக்க அவனிடம் சொல்ல, அவ்வாறே அக் கம்பளச்செட்டியும் அரசிளங்குமரனை யேற்றிக்கொண்டு கடல்வழிச் செல்லுநாள் அக்கலம் கவிழ்ந்தது. அதிலிருந்து தப்பிச்சென்ற சிலர் அரசனிடம் அக்கப்பலில் வந்த சிற்றரசன் கலம் கவிழ்ந்த காரணத்தால் மாண்டான் என்று கூறினர். அதுகேட்ட மன்னன் நன்மணியிழந்த நாகம் போன்று உளம் வருந்தி, கானலும் கடலும் கரையும் தன்மகனைத் தேடித் திரிந்தான். அதனால் அவ்வாண்டு இந்திர விழா நடைபெறவில்லை. அதை அறிந்த மணிமேகலா தெய்வம் பொருது அந்த அழகிய புகாரினைக் கடல் கொள்ளச் செய்துவிட்டது. உலக மன்னவனாகிய நெடுமுடிக்கிள்ளி பிள்ளையின் வருத்தத்தால் தனியனாயினன். மாதவியும் சுதமதியும் அறவணவடிகளும் வருத்தம் ஒன்றுமின்றி வஞ்சியுள் புக்கனர். இவ்வளவையும் கூறி, மேலும் அறிய வேண்டியவற்றை வஞ்சியுள் சென்று, அறவணவடிகள்பால் கேட்டுணர்ந்து கோள்ளுமாறு மணிமேகலைக்குப் பணித்து தீவதிலகை வான் வழிப்பறந்து சென்றுவிட்டாள்.

**வஞ்சிக்குச் செல்லு முன்**

தீவதிலகை சென்றபின் ஆபுத்திரன் அவள் காட்டிய இடத்தில் தோண்டி, தன் முந்தைய எலும்புகளைக் கண்டு கருத்தழிந்தான். மயங்கி யிருந்த மன்னனை விளித்து, மணிமேகலை அவ்வாறு வருந்துதல் தகாது என்று கூறி, அவனை அத்தீவினுக்கு அழைத்து அவன் பழம் பிறப்பை எல்லாம் உணரச்செய்து உலகம் உள்

ளளவும் அவன் புகழை நிலைநிறுத்தவேயாம் என்று கூறினள். மேலும் அவன் உள்ளம் துறவற நெறியில் செல்வதைத் தகைந்து அவன் நாட்டு மக்கள் அவன் வரவை எதிர்நோக்கி யிருப்பதையும் உணர்த்தினள்.

'அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியு உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்'

என்று விளக்கினள். அனைத்தையும் கேட்ட ஆபுத்திரன் 'என் நாட்டினும் பிறநாட்டினும் வேறு எந்த நாட்டினும், நன்னுதல் உரைத்த நல்லறம் செய்வேன்' என்று உறுதி கூறினன். மேலும் அவளை விட்டு நீங்க ஆற்றாது வருந்திய அவனை நோக்கி

'புன்கண் கொள்ளல் நீ போந்ததற்கு இறங்கி நின்
மன்பெரு நன்னாடு வாயெடுத்து அழைக்கும்
வங்கத்து ஏகுநீ'

என்று வேண்டினள். பின் அவள் வாய்மொழியைத் தட்ட வகையற்றவனாகி 'மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் நல்குவேன்' என்று கூறி, அவளிடம் விடைபெற்றுக் கப்பலில் புறப்பட்டான். அவளும் தான் சேரர் தலைநகராகிய வஞ்சி நோக்கிச் செல்வதாகக் கூறி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு விசும்பு ஆறாகப் பறந்து சென்றாள்.

# வஞ்சியிலும் காஞ்சியிலும்

## தாயினைப் போற்றல்

விசும்பு ஆறாகவந்த மணிமேகலை விரைவிலேயே சேரர்பெருமான் வஞ்சியை வந்தடைந்தாள். அவ்வூரினைச் சென்று காண்பதன் முன்னமே தன் தாயாகிய கண்ணகியையும், தந்தையாகிய கோவலனையும் காண விரும்பி அவர்கள் தங்கியுள்ள கோட்டம் சென்று சேர்ந்தாள். சென்று கோவலனையும் கண்ணகியையும் வணங்கிப் போற்றினாள். பின்னர் கண்ணகியை நோக்கி 'தந்தை இறந்தவுடன் உடன் இறவாமலும், அன்றிக் கைம்மை நோன்பை மேற்கொள்ளாமலும் இருந்ததோடு மதுரைமா நகரையும் எரித்த காரணம் என் எனக் கேட்டாள். அப்போது சேயின் வினாவுக்கு விடைதர விரும்பினாள் கற்புடைக் கண்ணகி. முன்னாள் மதுரைமா நகரை எரித்தபின் மதுராபுரித் தெய்வம் தன்முன் வந்து கூறிய நிகழ்ச்சிகளை யெல்லாம் எடுத்துக் கூறினாள்.

கோவலன் முன்னைப் பிறவியில் பரதன் என்னும் அரசியற் பணியாளனாக இருந்து, ஒரு பாபமும் செய்தறியாத சங்கமன் என்பானை எதிரியின் ஒற்றன் என்று எடுத்துக் கூறிக் கொலைசெய்ய, அச்சங்கமன் மனைவி கணவனை இழந்த காரணத்தால் பதினான்கு நாள் வருந்திப் பின்னர் உயிர்விடுகையில், தமக்குத் தீங்கிழைத்தோர் மறுமையில் அத்தகைய துயரைப் பெறச் சபித்துச் சென்றதால் அப்பரதனே கோவலனாகப் பிறந்து, மதுரைத் தெருவில் கொலையுண்ணப் பட்டான்

என்று மதுராபுரித் தெய்வம் கூறியதைச் சொல்லி, அனைத்தையும் கேட்டபின்னும் அவள் சீற்றம் தணியா ளாய் மதுரையை எரித்ததையும் கூறினாள்.

**கண்ணகியின் பிற்காலம்**

கண்ணகி தன் முன்னைச் செயலைக் கூறியபின், மேலும் அவள் பெற இருக்கும் பிறவிகளையும் கூறி னள். அப்போது அவளும் கோவலனும் தெய்வ உல கில் இருக்கிறார்கள் என்றும், எனினும் தான் கொண்ட கோபத்தின் காரணமாகிய வினையை அனுபவிக்க ஒரு காலத்தில் நிலத்தில் பிறக்கத்தான் வேண்டுமென்றும் கூறினாள். தானும் கோவலனும் உலகிடைப் பல்வேறு பிறவிகளில் பிறந்து இருவினை வயத்தில் பட்டு உழன்று வரவேண்டு மென்றும், பின்னர் நெடுநாள் கழித்து, மகத நாட்டுக் கபிலையம் பதியில் புத்த ஞாயிறு தோன்றி, தன் அருளுபதேசத்தால் உலகை நல் விளக் கம் செய்யும் காலத்து, அவர்களும் அவ்வருளுபதேசத் தைக் கேட்டு அதன் பயனாக நிர்வாண மடைவார்கள் என்றும் கூறினள். அவ்வாறு நிருவாண மடையும் நாள் நெடுந் தொலைவில் உண்மையின் அதுவரை உல கிடைப் பல சித்திகளைச் செய்துகொண்டிருக்கப் போவ தாகவும் கூறினள். மேலும் மணிமேகலையை நோக்கி அவள் அந்நகரில் பல்வேறு சமயக் கணக்கர் தம் வாதங்களைக் கேட்கப் போவதையும், எதிலும் பற்றுக் கொள்ளாது இறுதியில் புத்ததேவன் அடியைப் பற் றப் போவதையும் கூறி அமைந்தாள் கண்ணகி. தாய் கூறிய அத்தனையும் கேட்ட சேய் மணிமேகலை தன்னை மறந்து விம்மித முற்றாள்.

### வஞ்சியுள் புகுந்தாள்

வஞ்சியில் புகுந்து நல்ல சமயத் தலைவர்களை அடைந்து, அவர்தம் சமயநெறிகளைக் கேட்க இருக்கின்ற காரணத்தால், தான் அவ் வுருவொடு செல்லின் பயன் தராது என்று கருதி, தன் மாற்றுரு மந்திரத்தை ஓதி, மாதவன் வடிவுகொண்டாள் மணிமேகலை. பின்னர் அந் நகரிலுள்ள பல்வேறு சிறப்புக்களை யெல்லாம் கண்டு செங்குட்டுவன் வீற்றிறிருந்து செம்மை முறையில் ஆளும் நலங்களைப் போற்றி அவனது வடநாட்டு யாத்திரையையும், இமயம் சென்று தன் அன்னைக்குக் கல்கொணர்ந்த சிறப்பையும் கருதித் தங்கியிருந்தனள்.

### சமயங்களைக் கேட்டு அறிந்தாள்

வஞ்சி நகரம் மிகப்பெரிய தொன்றாகும். செங்குட்டுவன் காலத்து அது சிறந்த முறையிலே செழித்து வளர்ந்தது. அதில் நல்ல வளமும் வாணிபமும் பொருந்தியதோடன்றி நூலறிவும் வாலறிவும் பெற்ற சமயத் தலைவர் பலர் அங்கே வீற்றிருந்தனர். சைவரும் வைணவரும், வைதிகரும் சமணரும், பௌத்தரும் பிறரும் பல்வேறு வகைப்பட்ட தத்தம் கொள்கைகளைப் பரப்பிக்கொண்டும், வாதம் புரிந்துகொண்டும் வஞ்சி நகரில் தங்கியிருந்தனர். செங்குட்டுவன் சைவ சமயத்தைச் சார்ந்தவன் ஆனபோதிலும், சமய வேறுபாட்டைக் கருத்தில் அவன் கொள்ளாத காரணத்தால் எல்லாச் சமயங்களுக்கும் ஏற்றம் தந்து, அவ்வச் சமயத் தலைவர்களைத் தன் நகரில் இருத்தி அவர்கட்கு வேண்டிய உதவிகளையும் செய்தான். அறம் அறிய விரும்பிய மணிமேகலை ஒவ்வொரு சமயவாதியையும்

தனித்தனியே கண்டு அவ்வவர்தம் உண்மைகளை முறையாகக் கேட்டாள். அவற்றின் உண்மைகளை யெல்லாம் அறிந்த மணிமேகலை சில காலம் வஞ்சியிலேயே தங்கி யிருந்தாள்.

மாசாத்துவானைக் கண்டாள்

அன்னையை வணங்கி விடை பெற்றுக்கொண்ட பிறகு வஞ்சி நகரின் பல்வேறு வளங்களைக் காணவும் அறவணவடிகளைத் தேடிப் பார்க்கவும் விரும்பினாள் மணிமேகலை. உடனே வஞ்சியின் அகநகர் புகுந்து அதன் அழகுகளை யெல்லாம் கண்டுகொண்டே சென்றாள். பல்வேறு வகைப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளையும், அவற்றின் எழிலையும் ஏற்றத்தையும் கண்டாள். பல கடைத்தெருக்களையும், அழகார் பிற தெருக்களையும் கண்டு கொண்டே சென்றாள். இவ்வாறு பல்வேறு இடங்களையும் பார்த்துக்கொண்டு வந்த மணிமேகலை இறுதியாகப் பல தவசிகள் தங்கும் இடங்களையும் கண்டாள். அங்கு புத்த தேவனது அறம் கூறும் அடியவர் வாழ்ந்த இடம் அறிந்து அங்கே அறவணவடிகளைக் காணக்கூடும் என்ற காரணத்தால் அவ்விடத்தை விரைந்து அடைந்தாள்.

சென்ற விடத்தே அறவண அடிகளைக் காண வில்லை. ஆயினும் அவள் பாட்டனும் கோவலன் தாதையுமாகிய மாசாத்துவான் அங்கு ஒருசார் தவம் செய்துகொண் டிருத்தலைக் கண்டாள். அவரைக் கண்ட வுடன் வணங்கித் தன் வரலாறு முழுவதும் கூறி, மணி பல்லவம் விட்டு அந்த நகர் வந்து அன்னையை வணங் கியதையும், பின் வேற்றுருவோடு அனைவர்தம்

அறத்தைக் கேட்டதையும், அவற்றுள் ஒன்றும் தன் மனதைப் பற்ருமையால், பௌத்த சமயத்தைப் பற்றி அறவணரிடம் உண்மைகேட்டறிய அவ்விடம் வந்ததையும் எடுத்துரைத்தாள். அவற்றைக் கேட்ட மாசாத்துவான் 'நின்னை என் நல்வினைப் பயன் கொல் நான் கண்டது' என்று மகிழ்ச்சிப் பெருக்கால் கூறினன். மேலும் கோவலனும் கண்ணகியும் கொடுந் துயருற்றதைக் கேட்டு, தான் செல்வம் துறந்து மாதவத்தை மேற்கொண்டதைக் கூறி, மேலும் அவன் அந்நகருக்கு வந்த காரணத்தையும் கூறினுன்.

'முன்னொரு காலத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் மனைவியோடு இச்சோலையில் தங்கியிருந்தான். அப்போது இலங்கைத் தீவில் உள்ள சமனொளி மலையைத் தரிசித்துக்கொண்டு வந்த சாரணன் ஒருவன் வான் வழி வந்து இச்சோலையுள் தங்கினன். அவனைக் கண்ட அரசனும் அரசியும் வணங்கி அருளுபதேசம் செய்ய வேண்டினர். அச்சாரணனும் பிறப்பால் வரும் துன்பமும், அஃது இன்மையால் பெறும் இன்பமும் கூறி வாழ்வாங்கு வாழவேண்டிய அறநெறியை எடுத்து விளக்கினன். அவற்றைக் கேட்ட அரசனும் அரசியும் நிறைவெய்தி அமைதி யுற்றனர். அவற்றை அரசனுடைய காதற் பாங்களுக அவனை விட்டு நீங்காது அயலிலிருந்த உன் தந்தையின் ஒன்பதாந் தலைமுறையில் வாழ்ந்த கோவலன் என்பான் கேட்டு, மனம் தெளிவுபெற்று, தன் செல்வத்தை யெல்லாம் ஏழே நாட்களில் இரவலர்க் களித்துத் தவத்தை மேற்கொண்டான். அத்துடன் புத்ததேவனுக்குச் சைத்தியமும் கட்டுவித்தான். அவன் கட்டிய கோயிலைக் காணவே

நான் இங்கே வந்தேன். வந்தபின் இங்குள்ள முனிவர் மூலம் காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்படும் என்ற செய்தியை அறிந்து இங்கேயே தங்கிவிட்டேன்' என்று தான் வஞ்சியில் தங்கிய வரலாற்றையும் காரணத்தையும் எடுத்து விளக்கினார். மேலும் புத்த ஞாயிறு தோன்றும் காலை கோவலனையும் கண்ணகியையும் போன்று, தானும் நல்லுபதேசம் பெற்று நிர்வாணமடையப்போதலையும் கூறினான். பின்னர் அறவண வடிகள் மாதவி சுதமதியுடன் காஞ்சிநகர் சென்றதையும், அதுவே அறமுரைக்க ஏற்ற இடம் என்பதையும் எடுத்து விளக்கினன். மேலும் காஞ்சிமா நகரம் அக்காலை மழை இன்றிப் பஞ்சத்தால் வருந்துவதைக் கூறி, அவள் உடனே அந்நகர் சென்று அமுதசுரபியினால் அனைவரையும் உண்பித்தல் கடன் என்பதையும் வற்புறுத்தினான். உடனே மணிமேகலை தன் பாட்டனாரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, வஞ்சி நகரின் மேலை வாயில் வழியாக வந்து வான் வழிப் பறந்து வடக்கு நோக்கிக் காஞ்சிநகர் காணப் புறப்பட்டாள்.

### காஞ்சியை அடைந்தாள்

வான் வழிப் பறந்துவந்த மணிமேகலை விளைவற்று வறிதாகக் கிடந்த காஞ்சிமா நகரம் வந்து சேர்ந்தாள். அதன் சிறப்பெல்லாம் முன்னமே அறிந்த மணிமேகலை அப்போது அது பெற்றிருந்த வாட்டத்தைக் கண்டு வருத்தமுற்றாள். பின்னர் அந்நகரின் நடுவே இறங்கி அந் நாட்டு மன்னன் இளங்கிள்ளியால் கட்டப்பட்ட புத்தர் ஆலயத்தை வலம்வந்து வணங்கி அதன் தென் மேற்கேயுள்ள அழகிய ஒரு சோலையில் சென்று தங்கியிருந்தாள். அவள் வரவை அறிந்த அந்நகரத்தான்

ஒருவன் விரைந்து அரச அவையை அடைந்து, கோவலன் மகளாகிய சிறந்த தவவொழுக்கமுடைய மணிமேகலை தன் அமுத சுரபியோடு காஞ்சி நகர் வந்து தருமத வனத்தே தங்கியுள்ளாள் என்பதை எடுத்துரைத்தான். அது கேட்ட அரசன் தன் மந்திரிகளும் மற்றவர்களும் உடன் சூழ்ந்து வர அச்சோலையை அடைந்து மணிமேகலையைக் கண்டு வணங்கி,

**'செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ**
**கொங்கவிழ் குழலார் கற்புக் குறைபட்டோ**
**நலத்தகை நல்லாய் நன்னா டெல்லாம்**
**அலத்தற் காலை ஆகியது'**

என்று தன் நாட்டின் பஞ்ச நிலையை எடுத்துரைத்தான். மேலும் மணிமேகலை வருவதைத் தான் முன்னமே அறிந்திருத்தலையும் உரைத்தான். தன் நாடு கவினழிய வருந்தி யிருந்தகாலத்து, ஒரு பெருந்தெய்வம் அவன் முன்னே தோன்றி, அவனது நல்வினையால் ஒரு பெண் அங்கு வருவாளென்றும், அவள் கையிலுள்ள தெய்வப் பாத்திரத்தில் எடுக்க எடுக்கக் குறையாது உணவு பெருகுதலால் அவள் நடுங்கும் பஞ்சத்தை நீக்குவாளென்றும், அவள் வந்தபின் நாட்டில் மழை பெய்து நல்வளம் பயக்குமென்றும் கூறி, அவள் வந்து தங்குவதற்காக ஒரு பொய்கையும் சோலையும் உண்டாக்குக என்று உணர்த்தியதை உரைத்தான். மேலும் அத்தெய்வ உத்தரவை மேற்கொண்டு தான் அமைத்த மணிபல்லவம் போன்ற சோலையையும் பொய்கையையும் மணிமேகலைக்குக் காட்டினான், அவற்றை கண்ட மணிமேகலை மிகவும் மகிழ்ந்தவளாகி,

அச்சோலையிலேயே ஒரு புத்த பீடிகையை நிறுவுவித்து, தீவதிலகையையும் மணிமேகலாதெய்வத்தையும் வணங்குவதற்குரிய ஆலயங்களையும் அமைத்து, அவற்றிற்குரிய விழாக்களையும் அரசனைக் கொண்டு செய்வித்து அங்கேயே தங்கினாள்.

அவள் காஞ்சி நகரம் அடைந்த நாள் தொட்டு மக்கள் பசிப்பிணி நீங்கினர். நாட்டில் வசியும் வளனும் சுரந்தன. மணிமேகலை எல்லோரையும் வருக வென்றழைத்து, அனைவரையும் உண்பித்து வாழ்ந்து வந்தாள்.

**அறவணரைக் காணல்.**

மணிமேகலை காஞ்சி நகர் வந்திருப்பதைக் கேள்விப்பட்ட அறவணவடிகள் மாதவியோடும் சுதமதியோடும் அவள் தங்கிருந்த சோலைக்கு அவளைத் தேடிவந்தனர். வந்த அவர்களை வழிக்கொண்டழைத்து வணங்கிப் போற்றினள் மணிமேகலை. அவளை வாழ்த்தினர் அறவணவடிகள். பின்னர் பீலிவளைபெற்ற தன் மைந்தன் மறைந்த காரணத்தால் சோழன் இந்திரவிழாவை மறக்க, மணிமேகலா தெய்வத்தின் சாபத்தால் மாபெரு நகராகிய புகார் கடல்கொள்ளப்பட்டு அழிய, தானும் தாயாகிய மாதவியும், சுதமதியும் அவள்பொருட்டுக் காஞ்சி நகரம் வந்து தங்கியுள்ளதைக் கூறினர். மணிமேகலையும் நகர அழிவையும் பிறவற்றையும் மணிபல்லவத்திலேயே தீவதிலகையின்பால் தான் கேட்டுணர்ந்ததையும், நேரே வஞ்சிசென்று கண்ணகியை வழிபட்டதையும், பின்னர் மாற்றுருக்கொண்டு பல்வேறுய சமயக் கோட்பாடுகளையும் கேட்டு ஒன்றிலும் மனம்

பற்றுமையையும் கூறி, தனக்குப் பௌத்த தரும நெறியை உபதேசித்தருள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டாள். அவரும் ஐயம் இன்றி அறிந்துகொள்க என்று பௌத்த சமயத்தினது உண்மைப் பொருளையும் அதன் நுண்ணிய கருத்துக்களையும் பிற நற்பொருள் களையும் நன்கு விளக்கமாக எடுத்துரைத்தனர்.

**பாவை நோற்றல்**

பின்னும் அறவண வடிகள் தாம் அறிந்த பல் வேறு புத்தசமய உண்மைகளையும் அவளுக்கு எடுத்துக் காட்டினர். ஆதியிற் றோன்றிய புத்ததேவன் அறி வுறுத்திய நெறிகளையெல்லால் எடுத்து விளக்கினர். பின்னர் உலகில் துன்பத் தொடக்கம் நீங்காது பற்றிக் கொண்டே இருப்பதற்கான காரணங்களை யெல்லாம் ஆராய்ந்து எடுத்துரைத்தனர். பின்னர் உலக துன்பங் களாகிய .

**‘யாம் மேலுரைத்த பொருள்கட் கெல்லாம்**
**காமம் வெகுளி மயக்கம் காரணம்’**

என்று விளக்கிக் காட்டினர். அனைத்தையும் கூறி அவள் உள்ளத்தே ஞான ஒளி விளக்கை யேற்று வித்தனர், உள்ளொளி பெருகப்பெற்ற பாவை மணி மேகலை, உலகம் ‘பவத்திறம் அறுவதாக’ என்று, நாடுவாழ வேண்டி அக்காஞ்சி நகரிலேயே நெடுங் காலம் அறமாற்றித் தவம் நோற்று வாழ்ந்து வந்தாள்.